KALKI
.4.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



"ஜோதிகாவால் அழுதேன்!"

+16 இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்

தங்க்யூ மம்மி!

ாய்க்கும் குழந்தைக்குமான தகவல் பெட்டகம்



தாதாக்களின் பிடியில் தமிழ்நாடு?

-அதிர்ச்சி ரிப்போர்ட்

Team Health Shoppe
For Wellness

Team ஆலோ வீரா ஜூஸ்

நம் உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான இன்றியமையாத அமினோ ஆசிட், விட்டமின், மினரல் மற்றும் என்சைம் ஆகியவற்றை கொண்ட ஆலோ வீரா (Aloe vera) தற்போது இயற்கையான சாறு வடிவில்...

Team ஆலோ வீரா ஜூஸ்...

- Cold press மூலம் பதப்படுத்தப்பட்டது.
- தரமான, சுத்தமான Aloe vera இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது.
- தேவையான சத்து பொருட்களை காக்க 100% stabilize செய்யப்பட்டது.



டீம் ஹெல்த் ஷாப்பின் இதர பொருட்கள்



- டீம் சோடியம் அல்லாத உப்பு
- டீம் அரை உப்பு ●டீம் நல்லெண்ணெய்
- டீம் தேங்காய் எண்ணெய்
- கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள் ●தேன் பொருட்கள்
- டீம் எனர்ஜி வாட்டர்
- மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள்
- கொடைக்கானல் மலை தைலம்
- பனைப்பொருட்கள்


TEAM EUBIO CARE (Division of Chemfab Alkalis Limited)

வண்டலூர்:
டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு,
சென்னை - 48.
போன்: 2275 0502

அண்ணாநகர்:
பிளாட் 1200, Z பிளாக்,
6வது அவென்யு, சென்னை - 40.
போன்: 4269 3332

அடையார்:
26, கார்பரேஷன் காம்ப்ளக்ஸ்,
3வது அவென்யு, இந்திரா நகர்,
சென்னை - 20. போன்: 4269 5115

E-mail: teamhealthshoppe@drraoholdings.com ■ www.teamhealthshoppe.com


கல்கி
குடும்பத்துடன் படிக்க...
உரிமைக்குரல்!
நுகர்வோர் விழிப்புணர்வு
8.4.2007 இதழ்...
+16
நாம் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்கள்.
கல்கி
மறக்காம கேட்டு வாங்குங்க!

பொருளடக்கம்

1.4.2007

வாரந்தோறும் அட்டகாசம்...


சிறப்புச் சிறுகதை



அரசியல்



ஆன்மிகம்





33 அருள்வாக்கு



34 உயிர் வலி!

தாதாக்களின் பிடியில் தமிழ்நாடு?

–கவர் ஸ்டோரி



4

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 **யு.எஸ். டாலர்**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

கவர் ஸ்டோரி



தாதாக்களின் பிடியில்

சென்னைக்கு அருகே உள்ளது மதுரவாயல். கடந்த வருடம் சட்ட மன்றத் தேர்தல் முடிந்த பிறகு அந்த ஏரியாவில் நடந்த ரவுடித்தனத்தின் காரணமாக, இரண்டு நாட்கள் மக்கள் யாரும் சுதந்திரமாகத் தெருவில் நடமாட முடியவில்லை. கடைகள் மூடப்பட்டு, பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது. அந்த அளவுக்கு மக்கள் பயமுறுத்தப் பட்டனர்.

மற்றொரு சம்பவம். சென்னையின் வடக்குப் பகுதியில் திருவொற்றியூரையொட்டியுள்ள மீனவர் கிராம மக்கள், தேர்தல் முடிந்தவுடன் நடந்த வன்முறை வெறியாட்டத்தில், உயிருக்குப் பயந்து வெளியூர்களுக்கு ஓடினார்கள். ''தி.மு.க. அமைச்சரும் அவரது சகோதரர்களும் எங்களை மிரட்டுகிறார்கள்'' என்று அந்த ஊர் சார்பாக, வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றக் கதவைத் தட்டினார். அண்மையில் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் தூத்துக்குடியில் நடத்திய கடை அடைப்பில் வியாபாரிகள் ஆதரவு கொடுக்காததால் கடைகள் உடைக்கப் பட்டன. ரவுடித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பதினைந்தே நாட்களில் அம்பத்தூர் அ.தி.மு.க. செயலாளர் ரவி என்பவர் பட்டப்பகலில் வெட்டிக் கொல்லப்பட்டார்.

அடுத்து, திருவள்ளூரில் தே.மு.தி.க.வைச் சேர்ந்த செல்வகுமார் என்பவர் வெட்டப்பட்டார். தி.மு.க.வைச் சேர்ந்த ஜோதி ராஜேந்திரன் என்பவர் நெய்வேலியில் படுகொலை செய்யப்பட்டார்.

தென்காசியில் இந்து முன்னணிப் பிரமுகர் குமார் பாண்டியன் வெட்டிக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அதே இடத்தில் த.மு.மு.க. பிரமுகர் மைதீன் சேட் வெட்டப்பட்டார். இப்போது தென்காசி பதற்றமாக ஆகி விட்டது.

அரசியல் விரோதம் காரணமாக சில கொலைகள் நடந்திருந்தாலும், இந்தக் கொலைகளைச் செய்வதற்கு ரவுடிப் படைகளையே நாடுகிறார்கள் அரசியல் வாதிகள். இந்த ரவுடிப் படைகளுக்கு அரசியல்வாதிகளின் தயவும் அவ்வப்போது தேவைப்படுவதால், இரு தரப்பினருக்கும் நெருக்கம் உண்டாகி நட்பு ஏற்படுகிறது. இது பல சமூக விரோதச் செயல்களுக்கு வழி வகுக்கிறது. குற்றங்கள் அதிகரிக்கின்றன.

இதுபோன்ற கொலைகள் ஒரு பக்கம் இருக்க, 'தொழில் போட்டி' காரணமாக ரவுடிகள் பழிக்குப் பழியில் ஈடுபடுவதால் பல மோதல்கள். அம்பத்தூர் ரவுடி

செந்தில்குமார் என்பவர் தலை துண்டிக் கப்பட்டுக் கொல்லப்பட்டார். துரைப் பாக்கம் ரவுடி அசோக் வெட்டப் பட்டான். மண்ணிவாக்கம் சுகுமாரைப் போட்டுத் தள்ளி விட்டார்கள். காவல்

நியமித்த குழு சொல்லியிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கவினர் 36 பேர் வன்முறையில் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்கள். ஜெ.ஆட்சியில் தி.மு.க. பேரணியின்போது ரவுடிகள் மூலம் தாக்குதல் நடத்தியதை மறக்க முடியுமா?'' என்று கேட்கிறார் தி.மு.க. அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன்.

அக்டோபர் உள்ளாட்சித் தேர்தலில் அரங்கேறிய வன்முறைக் காட்சிகள், கலைஞர் அரசுக்கு மிகுந்த அவப்பெயரைக் கொண்டு சேர்த்தது.

உள்ளாட்சித் தேர்தலைத் தொடர்ந்து தமிழகமெங்கும் சங்கிலித் தொடராக வன்முறைகள்.

''தி.மு.க. ஆட்சியில் அதிகாரத்தில் உள்ளவர்களின் வீட்டு வேலைக்காரர்கள் கூட போலீஸைத் தாக்குகிறார்கள். சமீபத்தில் 'குடி'மகன் ஒருவரை ராயப் பேட்டை பெண் சப்-இன்ஸ்பெக்டர் பிடித்து ஸ்டேஷனுக் குக் கொண்டு சென்



• பீட்டர் அல்போன்ஸ்

தமிழ்நாடு?

துறையும் தன் பங்குக்கு என்கவுண்ட்டர் நடத்தி நாகூர் மீரான், கொர கிருஷ்ணன், உருண்டை ராஜன், பங்க் குமார் போன்ற தாதாக்களைச் சுட்டுத் தள்ளியது.

''தி.மு.க. ஆட்சியில், அதிக அளவில் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக நடைபெறும் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீடியாவில் வரு வதால், ஏதோ இப்போதுதான் நடந்தது போன்ற தோற்றம் உருவாகிறது. ஜெ. ஆட்சியில் ஸ்டேஷனில் வழக்கே பதிவு செய்யாத நிலைதான் இருந்தது. திருவொற்றியூர் குப்பம் விவகாரத்தில் தி.மு.க. அமைச்சருக்கு எந்தப் பங்கும் இல்லை என்று உயர்நீதிமன்றம்



• க.சுப்பு

-அதிர்ச்சி ரிப்போர்ட்

றார். ஆனால், அரசியல் தலைவர் ஒருவரின் மகன் வீட்டில் வேலை செய்யும் பெண் ஒருவர், போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அந்தப் பெண் சப்-இன்ஸ்பெக்டரை அடித்து, குடிமகனை விடுதலை செய்ய முயன்றிருக்கிறார்! நிலைமை இப்படி இருக்கும்போது, தி.மு.க.வினர் தமிழ்நாடு முழுவதும் ரவுடித்தனம் செய்வதிலோ அல்லது சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதிலோ என்ன ஆச்சர்யம் இருக்கிறது?'' என்கிறார் அ.தி.மு.க. பிரமுகரான க.கப்பு. அம்மா ஆட்சியில் கட்சிக்காரர்கள் காவல் நிலையத்துக்குச் செல்லவே பயந்தார்கள் என்கிறார் இவர்!

தமிழகமெங்கும் கடந்த பத்து மாதங்களில் நடந்த கொலைகள், வன்முறைகள் ஆகியவற்றைப் பட்டியல் போடத் துவங்கினால், அது முடிவற்று நீண்டுகொண்டே போகும்.

சமூக விரோதிகளின் மோதல்களுக்குக் கள்ளச் சாராயமும் ஒரு காரணம். காய்ச்சுதல், விற்பது ஆகியவற்றைப் பொருத்த அளவில், நாட்டிலேயே மூன்றாவது மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது.

ஒரு பக்கம் பாலியல் தொடர்பான குற்றங்களும் பெருகி வருகின்றன. அண்மையில் கன்னட பிரசாத் பிடிபட்டு தினந்தோறும் செய்திகளில் அடிபட்டு வருகிறார். தவிர, தேச விரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. விடுதலைப்புலிகளுக்கு இரும்பு உருளைகள் அனுப்ப முயன்றது சமீபத்தில் வெளிச்சத்துக்கு வந்தது.

அம்பத்தூரில் இருந்து ஆந்திர நக்ஸலைட்டுகளுக்கு ராக்கெட் லான்ச்சர்கள் அனுப்பிக் கொண்டிருந்தது அம்பலமானது.

ஏதேனும் ஓர் இடத்தில் ரவுடிகளுக்குள் மோதலோ அல்லது கொலையோ நடக்கும் பட்சத்தில் அந்த ஏரியாவின் அமைதி பாதிக்கப்படுகிறது. மக்கள் பாதுகாப்பற்ற நிலையை உணர்கிறார்கள். இவற்றில் தலை நுழைக்கும் ஆளும் கட்சிப் பிரமுகர்களால் மீடியாவுக்கு நல்ல தீனி கிடைக்கிறது! ''ரவுடிகள் முன் கைகட்டி நிற்கிறது காவல்துறை'' என்று அறிக்கை விடுகிறார் ஜெ.

''காவல்துறை இன்னமும் தொழில் ரீதியாக மாற வேண்டும். அதில் உள்ள கறுப்பு ஆடுகள் வெளியேற்றப்பட வேண்டும். தமிழகம் ஸ்ரீலங்காவின் அருகிலேயே இருப்பதால் தேச விரோத சக்திகளுக்குத் துணை போகும் நிலையும் இங்கே இருக்கிறது'' என்று சொல்கிறார் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்.

தமிழக காவல்துறை இயக்குநரான முகர்ஜி, இதற்கெல்லாம் என்ன பதில் சொல்கிறார்?

''2005-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், 2006-ல் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்திருப்பது மட்டுமல்லாமல் கண்டுபிடிப்பதும் அதிகரித்திருக்கிறது. சில மீடியாக்கள்தான் சின்ன விஷயங்களைக் கூட ஊதிவிடுகின்றன.

2005-ல் 1365 கொலைகள் நடந்தன; 2006-ல் 1274 கொலைகள்தான் நடந்தன. நடந்த குற்றங்களில் கண்டுபிடிப்பு விகிதம் 88



படங்கள்: ராஜா

● ச.வி.பி.முகர்ஜி

சதவிகிதத்தைத் தொட்டிருக்கிறது. திருட்டு, கொள்ளையில் மீட்ட சொத்துக்களின் விகிதம் 78 சதவிகிதத்திலிருந்து 81 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. 2005-ல் 571 பாலியல் பலாத்காரங்கள்; 2006-ல் 457. இப்படிப் பார்த்தால் பெண்களுக்கெதிரான குற்றங்கள், சிறு திருட்டுக்கள், கொள்ளைகள் ஆகியவையும் குறைந்திருக்கின்றன. ரவுடித்தனம் முழுவதுமாக அடக்கப்பட்டிருக்கிறது. குண்டர்கள் சட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் உள்ளே போடப்பட்டிருக்கிறார்கள். சமூக உரசலை உசுப்பிவிட்டு, அமைதிக்கு வேட்டு வைக்கும் பல பிரச்னைகளை தமிழக போலீஸ் மிக நுட்பமாகக் கையாண்டு சமாளித்திருக்கிறது. கன்னட பிரசாத் உட்பட பாலியல் ரீதியான குற்றங்களில் தொடர்புள்ள போலீஸ்



• டி.கே.எஸ். இளங்கோவன்

அதிகாரிகள் நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித்திருக்கிறோம். இஸ்லாமியத் தீவிரவாதமும் கட்டுக்குள் இருக்கிறது. காவல்துறையின் இமேஜை உயர்த்தும் வகையில் அடிமட்டம் வரை உள்ள காவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அரசியல் தலையீடு என்பது கீழ் மட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கலாமே தவிர, மேல் மட்டங்களில் சிறிதும் கிடையாது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது'' என்று ஒரேயடியாக மறுக்கிறார் டி.ஜி.பி. முகர்ஜி.

- ப்ரியன்

ஒரு லட்ச ரூபாய் பரிசுப்

சூர்யாவைக் கேளுங்கள்! பரிசை வெல்லுங்கள்!

போண்ட் வொரி!
போன வாரம் புக்க
மிஸ் பண்ணிட்டீங்களா?
முழு முகவரியோடு
ரூ.12/- மணியார்டர் கல்கிக்கு
அனுப்புங்க.
புத்தகம் உங்களத் தேடி
வரும்.

என்னங்க! போன வாரம் இந்தப் போட்டியில் பகுதி - I ஃபில் பண்ணியாச்சா? ஈசி தூசியா இருந்தது இல்ல...

இந்தப் பக்கத்துக்குத்தானே காத்திருக்கீங்க?

'டிக்' பண்ணுங்க, 'பத்திரப் படுத்துங்க!!

அடுத்த வாரம் க்விஸ்ஸோட மூணு பகுதிகள் மற்றும் சூர்யாவிடம் நீங்க கேட்க நினைக்கிற அசத்தலான கேள்வி எல்லாம் சேர்த்து அனுப்பிடுங்க!!!

1. **ரஜினியின் நூறாவது படம்...**
   - ☐ ஸ்ரீ ராகவேந்திரா ☐ மிஸ்டர் பாரத் ☐ கை கொடுக்கும் கை
2. **கமலின் நூறாவது படம்...**
   - ☐ நாயகன் ☐ ராஜபார்வை ☐ குணா
3. **பிரபுவின் நூறாவது படம்...**
   - ☐ ராஜகுமாரன் ☐ குருசிஷ்யன் ☐ திருநெல்வேலி
4. **சரத்குமாரின் நூறாவது படம்..**
   - ☐ தலைமகன் ☐ பச்சைக்கிளி முத்துச்சரம் ☐ ஐயா
5. **விஜயகாந்தின் நூறாவது படம்...**
   - ☐ பேரரசு ☐ தர்மபுரி ☐ கேப்டன் பிரபாகரன்

போட்டி

போட்டி-1
பகுதி-2





கேளுங்கள்; வெல்லுங்கள்
போட்டி - 1 பகுதி - 2

பெயர்: ....

....

முகவரி: ....

....

....

....

தொலைபேசி: ....

இ.மெயில்: ....

<u>மறக்காதீங்க!!</u>

* ஜெராக்ஸ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
* ஆசிரியரின் தீர்ப்பே இறுதி
* கடைசி தேதி 18.4.2007

விமர்சனம்

சபரி

'கேப்டன் வீர வசனம் பேசுவாரு... கட்சிக் கொடி போட்ட மோதிரக் கையால குட்டுவாரு... அதை க்ளோசப்ல காட்டுவாரு... மக்கள் கூட்டத்துல நீந்தி வந்து நீதிக் கதை சொல்வாரு... வாழ்த்திப் பாடற பாட்டை தலை வணங்கி ஏத்துக்குவாரு' - இப்படியெல்லாம் தான் நியாயமா எல்லாரும் எதிர் பார்ப்பாங்க. ஆனா ஆச்சர்யம், அப்படியெதுவும் இல்லாம ஒரு க்ளீன் ஆக்ஷன் படம் தந்திருக்காரு விஜயகாந்த். கிள்ளிப் பார்த்துக்கறேன்.

டாக்டர் சபரிவாசனா மிளிர்றாரு கேப்டன். நோயாளிகளுக்காக உருகுறாரு. நிஜத்துல ஒரு சதவீதம் கூட இப்படிப் பார்க்க முடியாத தால வருத்தம்தான் ஏற்படுது. கொலையாளிக்கு உதவி, அவனை போலீஸ்ல மாட்ட வச்சிடுறார். அவன் சகா இவரைத் துரத்தறதுதான் கதை. அதை துள்ளத் துடிக்கச் சொல்லியிருக்காங்க.

கட்சி வாடை வீசாம டைரக்டருக்கு ஒத்துழைச்ச விஜயகாந்துக்கு சபாஷ் போடலாம். ஜோதிர் மயி அவர்கிட்ட பண்ற அலம்பல், காமெடி இல்லாத குறையைப் போக்குது. புருஷனை வில்லன்கிட்டருந்து காப்பத்த அவர் பதை பதைக்கறது நம்மளயும் தொத்திக் குது. வில்லன்கள் ரெண்டு பேருமே நிறைவா செஞ்சிருக்காங்க. மாமன், மச்சான் காம்பினேஷன் ஒர்க் கவுட் ஆகியிருக்கு.



மாளவிகா படத்துக்கு திருஷ்டிப் பொட்டு. ஐஸ்வர்யா பாத்திரம் திடீர்னு நுழைஞ்சாலும் செமயா எடுபடுது. ஷாக் ட்ரீட்மெண்ட் தர்றார் நமக்கும். பாடல்கள் சுமார். பின்னணி இசையில மட்டும் 'மணி'யானஷர்மா. பட்டுக்கோட்டை பிரபாகரோட வசனங்கள் ஷார்ப் நைஃப். 'அரக' கரேஷோட பரபரப்பு நிறைந்த திரைக்கதைத் துரத்தலுக்கு சபாஷ் போடலாம். மாளவிகா போர்ஷனை தூக்கி இருந்து அவசியமில்லாத பாடல்களுக்குத் தடா போட்டிருந்து, இன்னும் கதையை ட்ரிம் பண்ணியிருந்தா இன்னும் இன்னும் நல்லா பேசப்பட்டிருப்பான் சபரி.

- லஜ்ஜாவதி

KALKI GROUP
HOUSE of QUALITY



Get Friendly with Veggies!

Cover Story



WORLD CUP
-A Competition for you
-Exciting Prizes

plus
Stories, Picture Stories,
Puzzles and all
your favourite columns

April 2007 Rs.10/- 80 Pages

GOKULAM

THE Magazine for Children

விழிப்புணர்வு

பரவுகிறது சின்னம்மை... பாதுகாப்பது எப்படி?

சின்னம்மை. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் பழைமையான நோய். எப்படியும் ஒழித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு ஆய்வு செய்தபோது, ஒரு விஷயம் தெரிய வந்தது. சின்னம்மைக்கு மருந்து மாத்திரை, ஊசி எதுவும் கிடையாது. ஆனால், இந்நோய் வராமல் தடுக்க முடியும்.

தடுப்பூசி தோன்றியது அப்போதுதான். கண்டுபிடித்தவர் எட்வர்ட் ஜென்னர்.

பிறக்கும் குழந்தைகள் அத்தனை பேரும் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்னும் எழுதப்படாத சட்டம் அனைத்து நாடுகளிலும் எழுதப்பட்டன. பிறக்கும் குழந்தைகள் அத்தனை பேருக்கும் சுருக் சுருக்கென்று ஊசி குத்தினார்கள்.

அமெரிக்காவில் கடைசி கடைசியாக சின்னம்மை நோய் கண்டுபிடிக்கப்பட்டது 1949ம் ஆண்டில். ஆளானப்பட்ட சோமாலியாவிலேயே 1977க்குப் பிறகு சின்னம்மை முற்றிலுமாக ஒழிந்துவிட்டது.

சின்னம்மை தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் வேரியோலா (Variola virus) வைரஸ் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. ஆராய்ச்சி செய்வதற்கு மட்டும் கொஞ்சூண்டு வைத்துக்கொண்டு மற்ற வைரஸ்களை முற்றிலுமாக அழித்தொழித்துவிட்டார்கள்.

அக்டோபர் 2001ல் இந்த வைரஸ் மீண்டும் செய்தித்தாள்களில் அடிபட்டது. காரணம், உயிரியல் ஆயுதமாக இந்த வைரஸைப் பயன்படுத்துகிறார்கள் என்னும் குற்றச்சாட்டு. எளிதில் பரவிவிடக்கூடியது என்பதால் எல்லோரும் பயந்தார்கள்.

உண்மையில் சின்னம்மை தொற்று நோயா? ஆம். ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மிக எளிதில் இந்நோய்க் கிருமி பரவிவிடும். ரத்தம் மூலமாகப் பரவும். உடலில் சுரக்கும் நீர் மூலமாகப் பரவும். அணிந்துகொள்ளும் துணி மூலம் பரவும். மற்றபடி, வானத்திலிருந்து கோலமாவு போல் தூவினால் பரவாது. பாதிக்கப்பட்ட நபருடன் ஒரே அறையிலோ அல்லது ஒரே கட்டடத்திலோ அமர்ந்து வேலை செய்தால் பரவாது. கொசுக்கள் மூலமாகவோ, பூச்சிகள் மூலமாகவோ, வளர்ப்புப் பிராணிகள் மூலமாகவோ வைரஸ் பரவாது.




வைரஸ் தாக்கியுள்ளது என்பதை எப்படிக் கண்டுபிடிக்கலாம்?

மித மிஞ்சிய காய்ச்சல் அடிக்கும். எழுந்திருக்

அமெரிக்காவில் கடைசி கடைசியாக சின்னம்மை நோய் கண்டுபிடிக்கப்பட்டது 1949ம் ஆண்டில். ஆளானப்பட்ட சோமாலியாவிலேயே 1977க்குப் பிறகு சின்னம்மை முற்றிலுமாக ஒழிந்துவிட்டது.

கக்கூட நிராணி இருக்காது. முகத்தில் ஆரம்பித்து, உடல் முழுவதும் சிறுசிறு கொப்புளங்கள் தோன்றும்.

முதல் அறிகுறி காய்ச்சல். 101 முதல் 104 டிகிரி வரை இருக்கும். கூடவே, தலை வலி, உடல் வலி, சில சமயம் வாந்தி. வைரஸ் தாக்கப்பட்ட இரண்டு அல்லது நான்காவது நாள் இந்த அறிகுறிகள் தென்படும். இதை Prodrome Phase என்று அழைக்கிறார்கள்.



இந்த அறிகுறிகள் தோன்றிய நான்கு நாட்களுக்குப் பிறகு, நாக்கில் சிறு கொப்புளங்கள் தோன்றும். பொதுவாகச் சிவப்பு நிறத்தில் காணப்படும். நாக்கில் ஆரம்பித்து சிறிது சிறிதாக வாய் முழுவதும் கொப்புளங்கள் பரவும். இந்தக் கட்டிகள் உடையும்போது, வாய் வழியாகக் கிருமிகள் தொண்டைக்குள் இறங்க ஆரம்பிக்கும்.

அதுவரை சம்பந்தப்பட்டவரை மட்டுமே இம்சித்துக் கொண்டிருந்த வைரஸ், அடுத்தவரையும் பாதிக்க ஆரம்பிப்பது இந்தக் கட்டத்தில்தான்.

வைரஸ் தொண்டைக்குள் இறங்கிய இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் முகத்தில் கொப்புளங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. பிறகு, உடலிலும் பரவுகின்றன. மூன்றாவது நாளில் கொப்புளங்கள் உப்ப ஆரம்பித்து, நான்காவது நாள் கொப்புளங்கள் அளவில் பெரிதாக வளர்ந்து நிற்கின்றன. தவிரவும், கொப்புளங்கள் உடைந்து நீர் வெளிவர ஆரம்பிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் காய்ச்சல் விட்டுவிட்டு அடிக்கும். இதை Early Rash Phase என்று அழைக்கிறார்கள்.

பிறகு வருவது Pustular Rash. ஐந்தாவது நாளில் இந்நிலை ஆரம்பிக்கிறது. கொப்புளங்கள் கூர்மையாக மாறுவது இந்தச் சமயத்தில்தான்.

இரண்டாவது வாரம் கொப்புளங்கள் உடலிலிருந்து உதிர்ந்தாலும், கொப்புளங்கள் இருந்த இடம் தோலில் வடுவாக உட்கார்ந்து விடுகின்றன.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் இதுதான் : உடலிலிருந்து கொப்புளங்கள் உதிரும் வரை வைரஸ் மற்றவர்களுக்குப் பரவும் அபாயம் நீடிக்கிறது.

- கங்கா



கல்கி



2007 ஏப்ரல் 1
விய பங்குனி 18
மலர் : 65
இதழ் : 35

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

நரகமான நந்திகிராம்!

நந்திகிராம் வட்டாரத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் இறந்தனர். 14 போலீஸார் உட்பட 34 பேர் படுகாயம் அடைந்தனர். இதற்கு, எதிரெதிர் அணிகளாக நின்று அரசியல் கட்சிகள் குற்றச்சாட்டுக் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கும் அபத்தச் சூழலில், மேற்கு வங்க ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி மட்டுமே அர்த்தத்துடன் பேசியிருக்கிறார் :


"கலவரத்தைத் தூண்டியது யார்; என்ன காரணம் என்பன போன்ற பல கேள்விகளுக்கு விசாரணையின் முடிவில் விடைகள் தெரிய வரும். ஆனால், நம் முன் உள்ள மிக முக்கியமான அடிப்படைக் கேள்வி, 'இந்தத் துயரத்தைத் தவிர்த்திருக்க முடியாதா?' என்பதுதான்."


மனிதாபிமானம் உள்ள எவரும் "தவிர்த்திருக்க வேண்டும்; தவிர்த்திருக்க முடியும்" என்றுதான் பதில் கூறுவார்கள்.

நந்திகிராம் பகுதியில் சிறப்புப் பொருளாதார வளாகம் தொடங்க நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டம் போடப்பட்டுள்ளது. ஆனால், அதனால் நிலம் இழக்கக்கூடிய மக்களின் மறுவாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. நிலங்களுக்கான நஷ்டஈடு என அரசுகள் நிர்ணயிக்கும் தொகை, வழக்கமாக சந்தை விலையைக் காட்டிலும் மிகக் குறைவாகவே இருக்கும். பயிர்த் தொழில் தவிர வேறெதுவும் அறியாத விவசாயிகள், அத் தொகையைக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் தெரியாமலும் முடியாமலும் அவதிப்படுவார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைக்கு அஞ்சிதான் நந்திகிராம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், மக்களின் எதிர்ப்பு, திரிணமுல் காங்கிரஸ் தலைவியின் கையில் அரசியல் ஆயுதமாக மாறியதால்தான்





வந்தது வினை. போதாதகுறைக்கு, அக் கட்சியுடன் நக்ஸலைட்களும் தீவிரவாத அமைப்பினரும் வேறு கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

உணர்வுகளை உசுப்பும் மமதா பானர்ஜி; ஆயுதப் போராட்டத்தையும் வன்முறையையும் நியாயப்படுத்தும் தீவிரவாத இயக்கங்கள் - ஏற்கெனவே அச்சத்தில் இருந்த மக்களைக் கண்மூடித்தனமான வன்முறைக்குத் திருப்ப வேறென்ன வேண்டும்?!

மேற்கு வங்க முதல்வர், "மக்களின் சம்மதமின்றி, அவர்களுடைய விருப்பத்துக்கு விரோத மாக நில ஆர்ஜிதம் நடைபெறாது" என்று மீண்டும் மீண்டும் உத்தரவாதம் அளித்தபோதிலும் மம்தா பானர்ஜியின் அரசியல் நாடகமும் தீவிரவாத அமைப்புகளின் முரட்டுக் கோபமும் அந்த சமாதானச் சொற்கள் மக்களை எட்டவிடாது செய்துவிட்டன.

நந்திகிராம் பகுதியில் ஒரு தனி அரசே ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஜனநாயக விரோதத்தை நீடிக்க விடுவது ஆபத்து என்ற நிலையில் காவல்துறை அங்கே நுழைய, துப்பாக்கிச் சூடு; பலத்த உயிர்ச் சேதம்.

உயர்நீதிமன்றம் இது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பது வரவேற்கத் தக்கது.

விசாரணையின் முடிவுக்குக் காத்திராமல் மேற்கு வங்க அரசு நில ஆர்ஜிதத் திட்டத்தையே கைவிட்டுவிட்டது!

நில ஆர்ஜிதங்களும் தொழில் அபிவிருத்திப் பணிகளும் நடைபெறாமல் இந்தியா முன்னேற முடியாது.

ஆனால், நந்திகிராம் கலவரம் ஒரு தவறான முன்னுதாரணமாகிவிடும் ஆபத்து இப்போது ஏற்பட்டிருக்கிறது.

நில ஆர்ஜிதத்தை எதிர்க்க விரும்பும் மக்கள், அங்கங்கே தனி அரசு அமைக்க ஆரம்பித்தால் நாடு தாங்காது. நில ஆர்ஜிதக் கொள்கையையும் சட்டங்களையும் மறு பரிசீலனைக்குட்படுத்தி, சீர்திருத்தங்களைச் செய்வது நல்லது.

எதிர்கட்சியினர் அனைவருமே மம்தா ஸ்டைல் அரசியலில் இறங்கினால், கலவரங்கள் வெடித்து, மரணங்கள்தான் சம்பவிக்குமே தவிர மக்களின் வாழ்க்கைத் தரம் உயராது.

அரசியல்வாதிகள் - ஆட்சி நடத்துவோரும் சரி, எதிர்கட்சியினரும் சரி - மக்கள் நல அடிப்படையில் பிரச்னைகளை அணுக வேண்டும் என்றுதான் கற்பார்கள்? ●

சட்டம்

ஹெல்மெட் வாங்கியாச்சா?



ஜூன் 1. இந்தத் தேதியை நோக்கித்தான் இப்போது இருசக்கர வாகன ஓட்டிகள் அரக்கப் பரக்கப் பறந்தபடி இருக்கிறார்கள். 'ஹெல்மெட் வாங்கியாச்சா?' என்று பதற்றத்துடன் கேட்டுக்கொள்கிறார்கள். நாளுக்கு நாள் சாலை விபத்துகள் அதிகரித்துக்கொண்டே போவதை உணர்ந்த தமிழக அரசு, இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சட்டமியற்றியிருக்கிறது. ஜூன் 1 முதல் அமலுக்கு வரும் இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு அபராதமும் தண்டனையும் உறுதி என்கிறது போக்குவரத்துக் காவல் துறை.

ஹெல்மெட் அணிந்தால் தலை முடி உதிரும், வழுக்கை விழுந்துவிடும் என்றும், கழுத்து மற்றும் தலையில் வலி ஏற்படும் என்றும் கூறப்படுவதுதான் பெரும்பாலானோர் ஹெல்மெட் அணிவதற்குத் தடையாக இருப்பவை. சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றில், வீட்டை விட்டுக் கிளம்பும் போது ஹெல்மெட்டை எடுத்துத் தலையில் மாட்டி, பெல்டுகளை போடுவதற்குள் ஏற்படும் அலுப்பு காரணமாகவே பல பேர் ஹெல்மெட் அணிவதில்லை என்கிற தகவல் வெளியாகியுள்ளது.

“இதெல்லாம் நாமாகவே கற்பித்துக் கொள்பவை. எங்கோ ஒருவருக்கு நடந்ததை வைத்துக்கொண்டு இப்படிப் பொத்தாம் பொதுவாகச் சொல்வது சரியாகாது” என்கிறார்கள் மருத்துவர்கள்.

வாகனம் ஓட்டுபவர் மட்டுமல்ல, கூடவே பயணிப்பவர்களும் கண்டிப்பாக ஹெல்மெட் அணிந்துகொள்ள வேண்டும். லிஃப்ட் கேட்கும் பழக்கம் உள்ளவர்கள் கூடவே இனி கையில் ஒரு ஹெல்மெட்டை வைத்துக்கொள்வது நல்லது.

சரி, பாதுகாப்பான ஹெல்மெட்டை எப்படி அடையாளம் காண்பது, எங்கே வாங்குவது? இப்போது எல்லா நெடுஞ்சாலை ஓரங்களிலும் ஆங்காங்கே கலர்ஃபுல் ஹெல்மெட்டுகள் காட்சி தருகின்றன. ஆனால், அவை எந்த அளவுக்குத் தரமானவை, பாதுகாப்பானவை என்று சொல்ல முடியாது. ஐ.எஸ்.ஐ. சான்றளிக்கப்பட்ட தரமான ஹெல்மெட்டுகள், அனைத்து முன்னணிக் கடைகளிலும் விற்பனைக்குக் கிடைக்கின்றன. விலை ஐந்நூறு ரூபாயில் தொடங்கி, ஆயிரத்து ஐநூறு வரைக்கும் போகிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஹெல்மெட் கிடைப்பதில் சிரமமிருப்பதாக பரவலாகக் கூறப்பட்டாலும், 'அதெல்லாம் உண்மையில்லை' என்கிறார்கள் கடைக்காரர்கள். “பெண்களுக்கு ஏற்கெனவே பல்வேறு மாடல்களில் ஹெல்மெட்டுகள் கிடைக்கின்றன. பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் சிறிய அளவிலான ஹெல்மெட்டுகள் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு வந்தே விட்டன” என்கிறார்கள்.

அப்புறம் என்ன... ஹெல்மெட் வாங்கக் கிளம்பியாச்சா?

- முராரி



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214



தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

வாரம் ஒரு பாசுரம்

24

நூறாயிரம்

‘தடா’ என்ற சொல் இப்போதெல்லாம் தீவிரவாதத்தை அடக்க ஏற்பட்ட சட்டத்தைக் குறிக்கிறது.

எட்டாம் நூற்றாண்டில் ஒரு தடா இருந்தது. இப்போதும் தென் மாநிலங்களில் பயன்படும் சொல் இது. தவலை என்ற பொருளில் பெரிய, வாயகன்ற பாத்திரத்தைக் குறிக்கும். இதில் நூறு தடா எடுத்துக் கொள்வோம். அதை ‘கொலஸ்ட்ரால்’ கவலையின்றி வெண்ணெயால் நிரப்புவோம்! அதை வைத்துக்கொண்டு அக்கார அடிசில் பண்ணச் சொல்வோம். அக்கார அடிசில் என்பது முழுக்கப் பாலிலேயே சமைத்து வெல்லம், கற்கண்டு எல்லாம் சேர்த்து முழங்கை வரை நெய் சொட்டச் சொட்ட செய்யும் அமுது.

‘திருமாலுக்கு இது பிடிக்கும். இதை மட்டும் என் இறைவன் ஏற்றுக்கொள்கிறான் என்றால், நூறு என்ன... நூறாயிரமே ஏற்பாடு செய்கிறேன்’ என்கிறாள் அந்தப் பேதைப் பெண்.

எப்படியாவது பெருமாளை ஆசை காட்டி வரவழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், உலகத்தில் செய்யக்கூடியது, செய்ய முடியாதது அத்தனையையும் ஒரு சிறு குழந்தை போல் சத்தியம் பண்ணிக் கொடுக்கிற அந்தப் பெண் வேறு யார்? ஆண்டாள்தான்!

நாச்சியார் திருமொழியில் இந்தப் பாசுரம் வருகிறது.



‘ஆண்டாளின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பக்தியும் அன்யோன்யமும் உலகில் எந்த மொழி இலக்கியத்திலும் இல்லை!’

நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை
நம்பிக்கு, நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்
நேர்ந்து பராவி வைத்தேன்;
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில்
சொன்னேன்;
ஏறு திருவுடையான் இன்று வந்து
இவை கொள்ளுங்கொலோ?
(தடா - தவலை, பராவி - நிரப்பி)

'வாசனை மிகுந்த, பொழில் சூழ்ந்த மாலிருஞ்சோலை நம்பிக்கு நூறு தடாவில் வெண்ணெய் வார்த்து, நூறு தடாவில் அக்கார அடிசிலும் சொல்லியிருக்கிறேன். அந்த நாராயணன் இன்று இதையெல்லாம் எடுத்துக் கொள்ள வருவானோ?' என்று கேட்கிறாள்.

திருமால் 'ஒன்று நூறாயிரமாக'க் கொடுத்தாலும் அக்கார அடிசிலுக்கு மயங்கிப் பிரத்யட்சமாவாரா? வர மாட்டார். சரி, மாலிருஞ்சோலையில் கொன்றை மரம் இருக்கிறதே... அதில் ஒரு பொன்னிறப் பூவாகத் தொங்குகிறேன்.

'கொன்றைகள் மேல் தூங்கு பொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன் (தூங்குதல் - தொங்குதல்). அப்படியாவது அவனது சங்க நாதமும் வில்லின் நாண் ஒலியும் கேட்கக் கிடைக்குமா என்று ஏங்குகிறாள்.

ஆண்டாளின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பக்தியும் அன்யோன்யமும் பிடிவாதமும் உலகில் வேறு எந்த மொழி இலக்கியத்திலும் இல்லை என்று சொல்லலாம்.

(வளரும்)

சுஜாதா



முதல்வருக்குப் பிடித்த சீரியல்!

சன் டி.வி.யில் ஒளிபரப்பாகும் தமது 'அஞ்சலி' தொடர் ஏறுமுகம் கண்டிருப்பதில் குஷியில் இருக்கிறார் இயக்குநர் சி.ஜே.பாஸ்கர்.

''அஞ்சலிக்கு வாழ்க்கையில் நிறைய கனவுகள். ஆனால், நிஜ உலகம் அவள் கனவு காண்பதுபோல் எளிதாக இல்லை. சமூகத்தின் எல்லா இடங்களிலும் வில்லன்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்களை எதிர்கொண்டு ஜெயிக்கப் பிறந்தவள்தான் அஞ்சலி. இன்றையப் பெண்களை அவள் பிரதிபலிப்பதால்தான் அவளை எல்லோருக்கும் பிடிக்கிறது'' என்கிறார் பாஸ்கர்.

சரி, அஞ்சலி, அதாங்க... மல்லிகா என்ன சொல்கிறார்?

''ஒவ்வொரு வீட்டிலும் இன்றைக்கு நான் எட்டரை மணிச் செல்லமாகி விட்டதில் மிகுந்த மகிழ்ச்சியிலிருக்கிறேன். பல படங்களில் நான் நடித்திருந்தாலும் 'அஞ்சலி' மூலம் எனக்குக் கிடைத்திருக்கும் புகழ் மகத்தானது'' என்கிறார். அஞ்சலி தொடர் முழுக்க முழுக்க பாண்டிச்சேரி பேக்ரவுண்டில் எடுக்கப்படுவதால், பாண்டி மக்களிடையே இத் தொடருக்கு ஏக வரவேற்பு. புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, ஒருமுறை படப்பிடிப்பு நடக்குமிடத்துக்கே வந்து பாராட்டியிருக்கிறார்.

''அஞ்சலியில் இன்னும் பல புதுமைகளைப் புகுத்த உள்ளோம். தெலுங்கிலும் இத் தொடர் ஹிட். ரசிகர்கள் எதிர்பார்க்காதவாறு மிரட்டப் போகிறோம்'' என்கிறது டீம்.

- உமா

அக்கம் பக்கம்

முதியோர் இல்லம் நடத்தும் முதலமைச்சர்!

கர்நாடக முதலமைச்சர் குமாரசாமி, இன்னும் எவ்வளவு காலம் பதவியில் நீடிப்பார் என்பது பற்றி, கர்நாடக அரசியல் வட்டாரத்தில் பலவிதமான யூகங்கள். காரணம், பா.ஜ.க.விலிருந்து சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கும் எம்.எல்.ஏ. ஜனார்த்தன ரெட்டிதான், பெல்லாரி பகுதியில் உள்ள சுரங்க முதலாளிகளிடமிருந்து, முதலமைச்சர் 150 கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டி இருக்கிறார். இதற்கு ஆதாரமாக ஒன்பது சி.டி.க்கள், 200 பக்க டாக்குமென்ட்டுகளை சுப்ரீம் கோர்ட்டில் ஒப்படைத்திருக்கிறார்.



* பிரகாஷ்சிங் பாதல்



* குமாரசாமி

பஞ்சாபின் புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள பிரகாஷ்சிங் பாதல், தமது சொந்த ஊரில் முதியோர் இல்லம் ஒன்றை நடத்தி வருகிறார். தவிர, விவசாய வேலைகளிலும், தோட்ட வேலையிலும் கூட இவருக்கு நிறைய ஆர்வம் உண்டு; "என் முதல் பணி, ஏராளமான மரங்களை உருவாக்கி மாநிலத்தைப் பசுமையாக்குவதுதான்'' என்கிறார் பாதல்.

மகாராஷ்டிர சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் ஆரம்பித்த தினத்தில், காலையிலேயே விசித்திரமான ஒரு புகாரைச் சந்தித்தது. "சட்டசபை வளாகத்தில் ஒரு தெரு நாய் சுற்றிக்கொண்டிருக்கிறது. எந்த உறுப்பினரையாவது அது கடித்து விட்டால், பிரச்னை சீரியஸாகி விடும்'' என்று எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்ட, துணை முதலமைச்சரின் பதில் என்ன தெரியுமா? "இது குறித்து விவாதிக்க ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.''

காங்கிரஸ் பிரமுகர் எம்.கே.சுப்பாவை புலனாய்வு செய்து ஓர் ஆங்கில நியூஸ் சேனல் ஒன்று செய்தி வெளியிட, விஷயம் பற்றிக் கொண்டது பார்லிமென்ட்டில். மனிதர் கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, தன் பிறந்த ஊர் தேஜ்பூர் (அஸ்ஸாம்) என்றும், பிறந்த தேதி 16 மார்ச், 1951 என்றும் சொல்லியிருக்கிறார். இந்த தேர்தலில் பிறந்த ஊர் தேப்கிராம் (டார்ஜலிங் அருகில்) என்றும், பிறந்த தேதி 16 மார்ச், 1958 என்றும் சொல்லியிருக்கிறார்! விசாரணை செய்து தவறான தகவல் அளித்தமைக்குத் தண்டனை தர வேண்டும் என்று கொடி பிடிக்கிறது பா.ஜ.க.

- எஸ்.சி.எம்.

மயக்கும்

ஆஹா! வந்தேவிட்டது மாவடு சீஸன். மயக்கும் மாவடுவை நினைத்தாலே நாவில் எச்சிலூறும்.

தமிழ்நாட்டிலேயே மதுரை அழகர் கோயில் மாவடுதான் மிகப் பிரபலம். இதனை மலைவடு என்றும் குறிப்பிடுகிறார்கள். இதில் ஊறுகாய் போட்டால் ஊரே சுவைக்கு அடிமையாகி விடுமாம். அங்கே மதுரை என்றால், இந்தப் பக்கம் ஸ்ரீரங்கம் தாத்தாச்சாரியார் தோட்டம் மிகப் பிரபலம்.

இங்கு இருப்பவை அனைத்துமே ஒட்டுரக மாமரங்கள்தான். இமாம்பசந்து, பங்கனப்பள்ளி, அல்போன்சா, ஜஹாங்கிர், மல்கோவா, மாயவரம் பாதிரி, நீலம், கல்லாமணி, செந்தூரம், ருமானி, சாசர்லட்டு, மல்லிகா, மால் பச்சரிசி, ஆப்பிள் பச்சரிசி என்று தொடரும் ஒட்டு ரகங்களின் அணிவகுப்பில், தாத்தாச்சாரியார் தோட்டத்து இமாம்பசந்தினை சுவையில் அடித்துக்கொள்ள தமிழ்நாட்டில் மாம்பழங்களில்லை.

இங்கிருக்கும் பணியாளர் ஒருவரிடம் மாவடு விவசாயம் பற்றிக் கேட்டால்,

"ஒரு மாங்கன்றுக்கும் இன்னொரு மாங்கன்றுக்கும் இடையே இருபத்தைந்து அடி தூரம் இடைவெளி விடணும். ஒரு ஏக்கர்ல எழுபத்தைஞ்சு மாமரம் வைச்சு வளர்க்கலாம். கன்று வச்சு மூணு வருஷம் அதுல பூக்குற பூக்களைக் கிள்ளிப் போட்டுடணும். நாலாவது வருஷத்துலேர்ந்து மாமரம் பலன் கொடுக்க ஆரம்பிச்சுடும். வருச முச்சூடும் இதனைப் பராமரிக்கிறதுதாங்க ரொம்பச் சிரமம்!" என்றார்.



பொதுவாகப் பனிக்காலத்தில் பூ பூக்கத் தொடங்கி, மார்ச் மாதம் மாவடு கொட்டத் துவங்குமாம். அதிலிருந்து சுமார் நாற்பது நாட்களுக்கு அதிக அளவில் கிடைக்கும் மாவடு, பின்னர் படிப்படியாகக் குறைகிறது. மாவடுவில் அறுப்பு வடு, உதிர்ப்பு வடு என்று இரு

"சில பேர் உங்களை முழுசா புரிஞ்சுக்காம பாதிதாங்க புரிஞ்சு வச்சிருக்கிறாங்க."

"எப்படிச் சொல்றீங்க?"

"உங்களை அரைப் பைத்தியம்னு சொல்றாங்களே..."

– மு.பெரியசாமி





''தலைவரே, உங்க பழைய அறிக்கைகளோட நகல்களைக் கேட்கறாங்க!''

''யாருய்யா?''

''ஹியூமர் கிளப் ஆளுங்க தான்; அவங்க கூட்டத்துல படிச்சுக் காட்டணுமாம்!''

– யமுனா ரெங்கநாதன்


மாவடு!

வகை உண்டாம். நாட்டு ரக மாமரங்களில் மட்டுமே அறுப்பு வடு கிடைக்கிறது. ஒட்டு ரக மாமரங்களிலிருந்து தானாகவே உதிரும் வடிவினை மட்டுமே மா வடுவாகச் சேகரிக்கிறார்கள்.

''ருமானி மாவடுவில் கெட்டித்தன்மை அதிகம் இருக்கும். இதில் நார் தென்படாது. பால் வாடை வீசாது. புளிப் புத்தன்மை மிதமாகவே இருக்கும். இதனைப் பக்குவ மாக ஊறுகாய் செய்து வைத்துக்கொண்டால், ஒரு வருடத்துக்கும் மேலாக வீட்டில் வைத்துப் பயன்படுத் திக் கொள்ளலாம். மாவடுப் பிரியர்களில் ஒருவர், ஒரு முறை ருமானி மாவடு வாங்கிப் பயன் படுத்தினால், அதன் பின்னர் அவர் வேறு வகை மாவடுவுக்கு மாறிப் போகவே மாட்டார்!'' என்கிறார் தாத் தாச்சாரியார் தோட்டத்தின் உரிமை யாளர்களில் ஒருவரான ரெங்கராஜன்.

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு







● ரங்கராஜன்

சினிமா

ஷ்ரேயாவைப் பற்றி ஓயாத பேச்சாக இருக்கிறது. அசின் படம் மாதத்துக்கு ஒன்று வருகிறது. சிம்பு பயமில்லாமல் நயன்தாரா சென்னைக்கு வந்ததுகூட கவர் ஸ்டோரியாகிறது. சரி, இந்த த்ரிஷா எங்கே போனார்?

பதில் அவரிடமிருந்தே வந்தது. "காலி குடம்தானே இரைச்சல் கொடுக்கும். நான் பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஏப்ரல், மே மாதங்களில் என்னுடைய மூன்று படங்கள் ரிலீஸ். செல்வராகவன் டைரக்ஷனில் வெங்கடேஷ், ஸ்ரீகாந்துடன் நடிக்கும் தெலுங்குப் படம். லிங்குசாமி - விக்ரம் காம்பினேஷனில் 'பீமா'. அஜீத்துடன் 'கிரீடம்'. இந்த மூன்றும் வெளி வந்த பிறகு, ஒரேயடியாக என்னைப் பற்றிய பேச்சாகத்தான் இருக்கும்."



'அசின், ஷ்ரேயாவுக்கு மத்தியில் காணாமல் போய்விட்டீர்களா?' என்றால், "விஜய், விக்ரம் இருவரின் அடுத்த படங்களில் நான் நடிக்காததால் இந்தக் கேள்வி. இருக்கட்டும். தொடர்ந்து ஒரே மாதிரி நடித்துக்கொண்டிருந்தால் எனக்கே போரடித்துவிடும். அப்புறம் ஷ்ரேயாவும் நானும் சினிமாவைக் கடந்த நெருங்கிய தோழிகள். இருவரும் நடிப் பிலிருந்து விலகினாலும்கூட நட்பில் அருகருகேதான் இருப்போம். என் வாய்ப் புகள் ஷ்ரேயாவுக்குச் சென்றால்கூட எனக்குப் பரிபூரண சம்மதம்தான். முதல் வாழ்த்து என்னுடையதாகவே இருக்கும். அடுத்து விஷாலுக்கு ஜோடியாக 'சத்யம்' படத்தில் நடிக்கிறேன். எப்போதும் போல தமிழ், தெலுங்கு என்று ஓட்டமும் நடையுமாகத்தான் இருக்கிறேன்" என் கிறார்.

நாம் விடாமல், 'செல்வராகவன் படத்துக்கு யோசித்தீர்களாமே' என் றோம்.

"செல்வராகவனின் மற்ற தமிழ்ப் படங்களைப் போல இந்தத் தெலுங்குப் படம் நிச்சயம் இருக்காது. ஹீரோ வெங்கடேஷ் டீஸண்டான படங்களில் நடிப்பவர். என் கதாபாத்திரமும் முகம் சுளிப்பதுபோல் இருக்காது. செல்வராகவனின் வித்தியாசமான படமிது. இந்தப் படத்தை இப்போது தமிழிலும் (யாரடி நீ மோகினி) எடுக்கிறார்கள். என்னிடம் தேதி கேட்டார்கள். ஆனால் அதைத்தான் மற்ற படங்களுக்கு ஏற்கெனவே கிழித்துக் கொடுத்து விட்டேனே! தசாவதாரம் பட வாய்ப்பை இழந்ததும் தேதிகள் இல்லாமையால்தான். மாதம் முப்பது நாட்கள் எனக்குப் போதவில்லை" என்றவர், அடுத்து நாம் கேள்வி கேட்க வழியில்லா மல் பேசிக்கொண்டே போனார்.

"பெரிய ஹீரோக்கள் படங் களில் நடிக்கும்போது நான் கதை கேட்பதில்லை. மாஸ் ஹீரோ, பெரிய பேனர், பெரிய டெக்னீஷி யன்கள் கைகோக்கும் படத்தில் வாய்ப்புக் கிடைப்பது எவ் வளவு அதிர்ஷ்டம்!

“ஜோதிகாவால் அழுதேன்!”

அதேபோல் எல்லாராலும் ஆக்ஷன் படங்களில் கதாநாயகியாகப் பொருந்த முடியாது. அதற்கும் ஒரு தகுதி வேண்டி யிருக்கிறது.

சமீபத்தில் 'மொழி' படம் பார்த்தேன். படம் முடியும் தருணத்தில் என்னால் அழா மல் இருக்க முடியவில்லை. 'மொழி'யில் ஜோதிகா வாழ்ந்ததுபோல ஒரு படம் பண்ண வேண்டும். 'சாமி' படம்தான் என் வாழ்க் கையை அப்படியே புரட் டிப் போட்டுவிட்டது. அது ஃப்ளாப் ஆகியிருந்தால் மூட்டை கட்டியிருப்பேன் அல்லது வேறு திசையில் பயணித்திருப்பேன். இன்று ஆசுவாசப்படுத்திக் கொள் ளவும் நேரம் இல்லை. எதையும் நிதானமாக யோசிக்கவும் நேரம் இல்லை" என்று சற்று மூச்சுவிட் டார்... சடாரென்று நுழைந்து விட்டோம்...


'ஜி'யில் ஏமாற்றிய லிங்கு சாமி உங்களை 'பீமா'வில் காப்பாற்றுவாரா?'

"ஜி படத்தில் எல் லாமே தவறாகவே நடந் தது. படம் வெளியான முதல்நாள் நான் நடித்த எல்லா காட்சிகளும் இருந்தன. ஆனால் அடுத்த சில நாட்களில் என் காட்சிகள் பல கத்திரிக்கு ஆளானது. நடித்த என்னைவிட யோசித்துக் காட்சிகள் அமைத்த லிங்குசாமி எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார். பீமாவில் நான் கல்லூரிப் பெண். படம் பார்த்தால் அதன் மகத் துவம் புரிந்துவிடப் போகிறது."

- ச.ந.கண்ணன்



“'ஜி' படத்தில் எல்லாமே தவறாக நடந்தது!”



கண் பேசும் வார்த்தைகள்!

அதென்னவோ மூக்குக் கண்ணாடியை யாருக்குமே பிடிப்பதில்லை. குறிப்பாக, பெண்களுக்கு. அதிலும் குறிப்பாக, இளம் பெண்களுக்கு. கண்ணாடி அவசியம் என்று டாக்டர்கள் படித்துப் படித்துச் சொன்ன பிறகும்கூட, பலர் கண்ணாடி அணியத் தயங்குகிறார்கள். ஃபேஷன் ஒரு காரணம்.

தவிரவும், எக்கச்சக்கமாக மூடநம்பிக்கைகள். கண்ணாடி அணிந்தால் வயது கூடினதுபோல் தோன்றும். சோடா புட்டி என்று கிண்டல் செய்வார்கள். எங்கு சென்றாலும் கையில் சுமந்து செல்ல வேண்டும். அடிக்கடி தொலைந்து போகிறது, உபத்திரவம்.

கான்டாக்ட் லென்ஸ் வந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகும்கூட பரவலான ஆதரவு கிடைக்கவில்லை. மூக்குக் கண்ணாடி பிரச்னையேதான் இங்கும். கவனமாகப் பாதுகாக்க வேண்டும். எடுத்து எடுத்து மாட்ட வேண்டும். உறுத்தாமல், பாப்பாவில் பொருத்த வேண்டும்.

இப்போது மீண்டும் ஆராய்ச்சிகள் சூடு பிடித்திருக்கின்றன அமெரிக்காவில். அவர்களது தற்போதைய டார்கெட் இளைஞர்கள், இளைஞிகள். அவர்களுக்குப் பிடித்ததுபோல் கான்டாக்ட் லென்ஸை மாற்றியமைத்துவிட்டால் போதும்... எல்லோருக்கும் பிடித்துவிடும்.

இன்று அதிக கவனம் பெற்று வருவது Multifocal Lens. கிட்டப் பார்வை, தூரப் பார்வை உள்ளிட்ட எல்லா உபாதைகளுக்கும் பொதுவான லென்ஸ். சரியாகப் பொருத்திவிட்டால் போதும். துல்லியமான பார்வை கிடைத்துவிடும்.

இரண்டு வாரங்களுக்கு, ஒரு மாதத்துக்கு என்று டிஸ்போஸபிள் லென்ஸ்கள் கிடைக்கின்றன. ஆண்டுக்கு 200 டாலர்கள் முதல் 500 டாலர்கள் வரை செலவு செய்ய வேண்டி வரும். நம்மூர் கணக்கில் 9200 ரூபாய் முதல் 23000 ரூபாய் வரை.

மோனோ விஷன் (Mono vision) வகை லென்ஸ்கள் ஒரு வகை. இரண்டு லென்ஸ். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தினுசு. ஒன்று, கிட்டப் பார்வைக்கு; இன்னொன்று தூரப் பார்வைக்கு. இரண்டுமே கைகோத்து வேலை செய்யும்போது காட்சிகள் தெளிவடைகின்றன.


லென்ஸ் பழக்கம் ஆவதற்குத் தோராயமாக ஒரு வார காலம் பிடிக்கலாம். என்னவோ உறுத்துவதுபோல் இருக்கிறதே என்று தோன்றும். ஆசை தீர ஒரு முறை கண்ணைக் கசக்கலாமா என்று கைகள் பரபரக்கும். நாளடைவில் கண்ணில் ஒரு சமாசாரத்தைப் பொருத்தியிருக்கிறோம் என்பதே மறந்து போகும்.

புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். பார்வை கீழே செல்லச் செல்ல எழுத்துகள் மங்கலாக மாறுகின்றன. என்ன செய்வது? அதற்கும் வழியுண்டு. புத்தகம் படிப்பதற்கு ஏற்றவாறு லென்ஸை மாற்றியமைக்க முடியும். அதன் வடிவத்தை இலேசாகத் தட்டிச் செதுக்க வேண்டும். நாமல்ல, மருத்துவர்கள். படிக்கும் பகுதியைச் சற்றுத் தடிமனாக, எளிதில் நகராமல் இருக்கும்படி மாற்றியமைத்தால் போதும். மற்றபடி வாசிக்கும் புத்தகம் போரடித்தால் அதற்கு லென்ஸைக் குறை கூறிப் பயனில்லை.

தவிரவும், எல்லோருக்கும் லென்ஸ் ஒத்துவரும் என்று சொல்ல முடியாது. வயதானவர்களின் கண்கள் வறண்டு காணப்படும். லென்ஸ் உட்காராது. நழுவி நழுவிச் செல்லும். மீண்டும் மீண்டும் எடுத்துப் பொருத்த முடியாது. இன்னும் சிலருக்கு லென்ஸ் அலர்ஜியை ஏற்படுத்தும். இவர்களுக்கு ஏற்றவாறு லென்ஸை சீர்செய்ய முடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீலம், பழுப்பு, காபிப் பொடி கலர் என்று விதவிதமாக காண்டாக்ட் லென்ஸ்கள் வாங்கி திங்கள் தோறும் மாற்றிக் கொண்டிருப்பதும் தவறானது. அமெரிக்காவில் இது சர்வ சாதாரணம். அணியும் சட்டைக்குத் தகுந்தாற்போல் லென்ஸ் அணிந்து கொள்வார்கள். கண் பார்வை கொட்டைப் பாக்கு மாதிரி இருக்கும். இருந்தாலும், வலியச் சென்று வாங்கி அணிவார்கள். சும்மா.

இது தவிர, பூனைக் கண், சிறுத்தை கண், முதலைக் கண் போல் தோற்றமளிக்கக்கூடிய லென்ஸ்களும் சகாய விலையில் கிடைக்கின்றன. ஆனால், இவையெல்லாம் தேவையா என்பதை ஒரு நிமிடம் யோசித்துப் பார்ப்பது நலம். மனிதர்களுக்கு மனிதக் கண்களை விட தோதான கண்கள் இருக்க முடியாது.



மருதன்

சுற்றுலா



கோடைக்கு இதம் சேர்க்கும் கொடிவேரி!

கோடை வந்தாலே குதூகலம் தான். என்னதான் வெயில் வறுத் தெடுத்தாலும் சுற்றுலா செல்லும் போது எல்லாம் அடங்கி, மனதுக் குள் இதமான காற்று வீசத் தொடங்கிவிடும்.

ஐந்தாயிரம், பத்தாயிரம் என்று செலவு செய்துதான் கோடை யைக் குளிருட்ட வேண்டுமென் பதில்லை. சிக்கன செலவில் சென்றுவர நமக்குப் பக்கத் திலேயே ஏராளமான இடங் கள் இருக்கின்றன. ஈரோடு மாவட்டத்திலிருக்கும் இயற்கை எழில் கொஞ்சும் கோபிச்செட்டிப்பாளையம் அத்தகைய ஊர்தான். சுற்று லாப் பிரியர்களை சுவை படுத்த இங்கு ஏராளமான இடங்கள் இருக்கின்றன.

பச்சைப் பட்டு விரித்தாற் போன்ற வயல்வெளி, வெள்ளி ஓடையாய் சலசலக்கும் வாய்க்கால், கரும்புத் தோட்டம், மஞ்சள் செடிகள் என வயலும் வயல் சார்ந்த பிரதேசமாக விளங்குகிறது கோபி.

'குட்டி கோடம்பாக்கம்' என அழைக்கப்படும் அளவுக்கு கோபியில் தினமும் ஏதாவது ஒரு படத்தின் ஷூட்டிங் நடந்துகொண்டேயிருக்கும், பெரும்பாலும், அப் படங்களின் பாடல் காட்சிகள், கொடிவேரி அணையில்தான் படமாக்கப்படும். 'சின்ன தம்பி' படத்தில் பிரபுவும், குஷ்புவும் 'போவோமா ஊர்கோலம்' என்று பரிசலில் சென்றுகொண்டே பாடுவார்களே... அது கொடிவேரியில் எடுத்த காட்சிதான்!

கோபியிலிருந்து சத்தியமங்கலத்துக்குச் செல்லும் வழியில் உள்ளது, கொடிவேரி அணை. இங்கு மலையன்னை பொழிகின்ற தாய்ப் பாலாய்க் கொட்டும் தண்ணீரைப் பார்த்ததுமே ஆட்டம் போடத் தோன்றும்.

குளித்துவிட்டுப் பரிசலில் ஏறி அமர்ந்தால், ரம்யமாய் ஒரு பயணம் செய்யலாம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை தண்ணீர், இருபுறமும் பசுமை போர்த்தி நிற்கும் மரங்கள், தண்ணீரில் விழுந்து தங்கமாய் ஜொலிக்கும் சூரியக் கதிர்கள், அண்ணாந்து பார்த்தால் ஆனந்தம் தரும் அந்திவானச் சிவப்பு என்று இயற்கை அன்னையின் ஆசீர்வாதங்களை இலவசமாக ரசிக்கலாம்.

கைக்காசு அதிகம் செலவழியாமல் சிக்கனமாய் இந்தச் சுற்றுலாவை முடித்து விட லாம். காலையில் ஆரம்பித்தால் மாலைக்குள் எல்லா இடங்களையும் ஒரு ரவுண்டு வந்துவிடலாம். கோபி, சத்தியமங்கலத்திலிருந்து இந்த அணைக்கு வர நிறைய பேருந்துகள் உள்ளன.

இங்கு வரும் சினிமாக்காரர்கள் படப்பிடிப்பு முடிந்த பிறகும் இங்கிருந்து கிளம்ப மன மின்றித் தவிப்பதை சென்னைக்குச் சென்ற பிறகும் சொல்லிச் சொல்லி மாய்வார்கள். மறக்க முடியாத நாட்களாக உங்கள் மனத் திலும் பதிய வைக்க நீங்க எப்ப கோபிக்கு வரப் போறீங்க?

- சுமதி



அமரர் கல்கி

இந்தத் தென்னாட்டில் வழக்கமான பருவ மழைகள் பெய்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாயின என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல் மந்திரியாயிருந்த காலத்தில் மழை பொய்த்திருந்தபடியால், ஸ்ரீ ரெட்டியார் அவர்கள் "மக்களின் ஒழுக்கம் குன்றிவிட்டது; அதனால் மழை பெய்யவில்லை" என்று பல பொதுக் கூட்டங்களில் எடுத்துக் கூறினார்.

மற்ற காரியங்களையெல்லாம் மனிதனுடைய புத்தியைக் கொண்டு சாதிக்கலாம்; ஆனால் மழை பொழியும்படி மனிதனால் செய்ய முடியாது.



காரணத்தை மட்டும் ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் கூறினாரே தவிர, பரிகாரம் என்ன என்பதைத் தெளிவாக அவர் சொல்லவில்லை.

ராஜாஜி புது டில்லியில் கடைசியாக விடைபெற்றுக் கொண்டு சென்னைக்குத் திரும்பி வந்து விமான நிலையத்தில் இறங்கியவுடனேயே தமிழ்நாட்டில் தொடர்ந்து பல வருஷங்களாக மழை இல்லாமை பற்றித் தமது கவலையை வெளியிட்டார்.

சென்ற வருஷத்தில் முதன் மந்திரி பொறுப்பை ஒப்புக்கொண்டதிலிருந்து, "மற்ற காரியங்களையெல்லாம் மனிதனுடைய புத்தியைக் கொண்டு சாதிக்கலாம்; ஆனால், மழை பொழியும்படி மனிதனால் செய்ய முடியாது. அதற்குக் கடவுளைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. எனவே ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்;" என்று கூறி வந்தார்.

அரசியல் கூட்டங்களை ஆஸ்திகப் பிரசாரக் கூட்டங்களாகச் செய்து வருகிறார் என்று அரசியல்வாதிகள் பலரும் புகார் செய்தார்கள்.

ஆனால், பொது மக்கள் ராஜாஜியின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தார்கள்.

ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்!

அவருடைய வார்த்தையை நம்பினார்கள். மழை வேண்டிக் கடவுளைப் பிரார்த்தித்தார்கள்.

கோயில்களிலும், கூட்டங்களிலும், வீடுகளிலும், அவரவர்களுடைய உள்ளங்களிலும், தத்தம் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை செய்தார்கள்.

விநாயகர், சுப்பிரமணியர், இராமர், கிருஷ்ணன் போன்ற தெய்வங்களிடம் நம்பிக்கையுள்ளவர்கள் அந்தந்த தெய்வங்களைப் பிரார்த்தித்தார்கள்.

முஸ்லிம்கள் அல்லாவையும், கிறிஸ்துவர்கள் பரமண்டலத்திலுள்ள பிதாவையும் எண்ணிப் பிரார்த்தனை செய்தார்கள்.

“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்” என்ற கொள்கையுடையவர்கள் அந்த ஒரே தேவனைப் பிரார்த்தனை செய்தார்கள்.

சிலர் வருண ஜபம் செய்தார்கள்; சிலர் விராட பர்வம் வாசித்தார்கள்; மற்றும் சிலர் மாரியம்மனுக்கு விழா எடுத்தார்கள்.

சென்ற ஒரு வருடத்தில் தென்னாட்டு மக்களிடையே பிரார்த்தனை மனப்பான்மை பரவியிருந்ததுபோல் பழைய ஆழ்வார்கள் - நாயன்மார்கள் காலத்திலே கூடப் பரவியிருந்ததில்லை.

மக்களுடைய பிரார்த்தனையின் பலனைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

இவ்வாண்டில் இரண்டு பருவ மழையும் அமோகமாகப் பெய்திருப்பதைக் காண்கிறோம்.

மேற்குக் கடற்கரையில் தென்மேற்குப் பருவமழை பொழிந்து மேட்டூர் - பெரியாறு - பவானி தேக்கங்களிலும் தண்ணீர் நிறைந்து ததும்புகிறது.

வடகிழக்குப் பருவ மழையும் வழக்கத்துக்குச் சில தினங்களுக்கு முன்னாலேயே தொடங்கிப் பெய்திருக்கிறது.



ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு உண்மையிலேயே நீர்வளமுள்ள நாடாகக் காட்சி தருகிறது.

ஆறு வருஷம் தொடர்ந்து மழையின்மையால் வறண்டு போய்க் கிடந்த ராமநாதபுரம் - வட ஆற்காடு மாவட்டங்கள், இன்று எங்கும் தண்ணீர்மயமாகக் காட்சி தருகின்றன.

ஆகையால், ராஜாஜியின் போதனைகளிலும் சாதனைகளிலும் பொதுமக்கள் வேறு எதை மறந்தாலும், பிரார்த்தனையை மட்டும் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

தமிழகத்து அரசியல் நல்லபடியாக நடந்தாலும் மறுபடியும் குட்டிச்சுவரானாலும், பொதுமக்கள் நல்ல மழை பொழிந்து நாடு செழித்திருக்கச் செய்ய வேண்டும் என்று அவரவர்களுடைய இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை செய்யத் தவற மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

- கல்கி, நவம்பர் 15, 1953

வட்டமேஜை

✉ காங்கிரஸ் தலைவர் வீரப்ப மொய்லி பற்றிய கேள்விக்கு 'எந்த மே மாதத் துக்குள்' என்ற தராசாரின் பதில் அசத் தல்!
திருவாரூர், டி. சாந்தி

✉ எத்தனை பணமும், வசதி மிகுந்த வாழ்க்கையும் வந்தபோதும் தமது தொழில் தர்மத்தை விடாது கடைப் பிடிக்கும், 'பங்கஜபவன் பாசம்...' சிறுகதை யின் நிகழ்வுகளும் நாணா ஐயர் பாத்திரப் படைப்பும் வெகு நயம்! பாராட்டுக்கள்!
போடிநாயக்கனூர்,
எஸ்.எம். பாலசுப்ரமணியன்

✉ பருத்திவீரன் டைரக்டர் அமீர் தெரி வித்துள்ள சாதனைகளும் வேதனைகளும் அப்படத்துக்கு மேலும் உரமூட்டுவனாக உள்ளன.
கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி

✉ இந்த வார அட்டைப் படத்தில் வெளியானஜனனி கொள்ளை அழகு. வழுவழு காகிதத்தில் இந்த மாடலிங் மங்கை எங்கள் மனம் கவர்ந்துவிட்டார்.
சென்னை, சிவா

✉ பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஆளும்கட்சியை ஆதரித்தபோதிலும், தவறுகளைத் தட்டிக் கேட்பதை ஜன நாயகத்தின் ஆரோக்கியமான செயல் என்று எடுத்துக்கலாமே!
சென்னை, நா.பாலசுப்ரமணியன்

✉ 'தள்ளாடும் பட்ஜெட்' எனும் தலைப் பில் தள்ளாடாத தலையங்கம் எழுதிய கல்கிக்குப் பாராட்டுக்கள்.
பாளையங்கோட்டை, கே.மோகனசுந்தரம்

✉ தமிழ்த் திரையுலகில் பரிமளித்த சுஹா சினி - ரேவதி - ரோகிணி... கூடவே பிர காஷ் ராஜ் கலந்துரையாடல் தொகுப்பு, பல உண்மைகளை வெளிச்சமிட்டுக் காட் டியது.
ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ 'இனி எல்லாம் சுகமே' இணைப்பிதழ், வியாதிகளைப் பற்றிய வீண் சந்தேகங் களையும் பயத்தையும் அறவே நீக்கியது.
சென்னை - 4, வி.ஜானகி

✉ தி.மு.க.வின் கிளைக் கழகமல்ல... என்று ராமதாஸ் அளித்த பேட்டி நல்ல தமாஷ். அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தால் அவர் இப்படிப் பேச முடியுமா? தி.மு.க.வை விமரிசிக்கிற சுதந்திரம் அவருக்குக் கிடைத்திருக்கிறதே!
சென்னை - 38, த. சத்தியநாராயணன்



தள்ளாடாத தலையங்கம்!

அருள்வாக்கு

ஒரே ஆத்மா!

இங்கே அத்யாத்ம சாஸ்திரத்துக்கு ஸயன்ஸ் உபகாரம் செய்து உபமானம் கொடுக்கிறது! அடிக்கடிச் சொல்லும் உபமானம்தான். அதாவது; ஒரே மின்சாரம் வேறே வேறே பல்புகளில் நூறு 'வாட்', அறுபது 'வாட்' என்றும், பச்சை, சிவப்பு முதலான பல நிறங்களிலும்; டேப்ரிக்கார்டரில் சப்தமாகவும்; ஏர்-கண்டிஷனரில் ஜில்லிப்பாகவும்; ஹீட்டரில் சூடாகவும் - இப்படிப் பல தினுஸாக வெளிப்படுகிறது.

ஒரே மின்ஸார சக்தி பல ரூபங்களில் பல காரியங்களை ஆக்குவிப்பது போல்தான் ஒரே ஆத்மா பலவிதமான ஜீவ ஜந்துக்களில் பலவிதமான மனப்போக்கு, சக்தி போன்றவற்றை ஏற்படுத்திப் பலவிதமான காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த மனோபாவங்கள், சக்தி சாமர்த்தியங்கள், காரியங்கள் எதுவாவது அதற்குரிய லக்ஷணங்களா என்றால், அதுதான் இல்லை.

பல எலெக்ட்ரிஸிட்டிகள் இல்லை. ஒரே எலெக்ட்ரிஸிட்டிதான். அத்வைதம்! அதுவே அநேக வஸ்துக்களில் அநேக காரியங்களைச் செய்து த்வைதங்களுக்குக் காரணமாகிறது. இப்படி ஒரே ஆத்மாதான் மாயா சக்தியால் சகல ஜீவ - ஜட ஸமூஹ வியாபாரங்களுக்கும், அதாவது பிரபஞ்ச நாடகம் முழுவதற்கும் காரணமாயிருக்கிறது.



- ஜகத்குரு காஞ்சி காம கோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

டிஷ்யூம்

உயிர்

சைப்ரஸ் நாட்டிலிருந்து வந்த சந்தோஷச் செய்தி என்ன தெரியுமா? அந்த நாட்டின் திரைப்பட விழாவில், எனக்குச் சிறந்த நடிகருக்கான விருதும், யுவன்ஷங்கர் ராஜாவுக்கு சிறந்த பின்னணி இசை அமைத்ததற்கான விருதும் அறிவித்திருந்தார்கள். எல்லாம் 'ராம்' செய்த மாயம்தான்.

"சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னால், நடிகர் திலகம் சிவாஜிக்கு கெய்ரோ நாட்டில் நடந்த திரைப்பட விழாவில், 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' படத்துக்காக சிறந்த நடிகர் விருது கிடைத்தது. அதற்குப் பிறகு ஒரு தமிழ் நடிகருக்கு இப்படி ஓர் அயல் நாட்டு விருது கிடைத்திருப்பது உனக்குத்தான்" என்று பலரும் குறிப்பிட்டுப் பாராட்டினர்.

இப்படி எனக்குப் பல பாராட்டினைப் பெற்றுத் தந்த 'ராம்' படத்தில் நடிப்பதற்கு ஆரம்பத்தில் எனக்குத் தயக்கமாகவே இருந்தது.

அம்மா மீது மட்டும் வெறித்தனமான பாசம்; மற்ற பெண்களைக் கண்டாலே வெறுப்பு காட்டும் கேரக்டர் என்பதால், படப்பிடிப்பின்போது எப்போதும் நான் படு சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டிருப்பேன். கூடவே ஷூட்டிங்கின்போது பல தடவை எனக்குச் சிறு காயங்களும் சிராய்ப்புகளும் ஏற்பட்டன.

கொடைக்கானலில் ஒரு கடுமையான குளிர் காலத்துக் காலை நேரம். நான் தண்ணீரிலிருந்து எழுந்திருக்கும் காட்சி, குளமொன்றில் எடுக்கப்பட்டது. நான் வெற்றுடம்போடு தண்ணீருக்குள் இறங்க, உடம்பில் ஆங்காங்கே இருந்த சிராய்ப்புகள் எரிந்தன. ஒத்திகை, அதன்பின் டேக் என்று பதினாறு முறை நான் தண்ணீருக்குள்ளிருந்து எழ வேண்டியதாகிவிட்டது. இப்படிச் சுமார் மூன்று மணி நேரம் நடந்தது.

அடுத்து, வீட்டின் கூரையிலிருந்து கீழே குதிக்கும் காட்சி. ஒவ்வொரு காட்சிக்கும் பலமுறை ஒத்திகை நடந்தது. பிறகும் சிற்சில டைமிங் தவறுகளால் மீண்டும், மீண்டும் எடுக்கும்படியானது. ஆனாலும் சிராய்ப்புகள் இல்லாமல் எடுக்க இயலவில்லை.



பிறகு, சண்டைக் காட்சிகள். ஸ்டண்ட் மாஸ்டர் 'பஞ்ச்' விட வேண்டும் என்றால், நான் கையைத் தூக்கி மடக்குவேன்; ஆனால் கையில் பலமிருக்காது. இன்னும் நல்லா ஓங்கி ஒரு குத்து குத்துங்க என்பார் மாஸ்டர். நான் பொசிஷன் எடுத்துக்கொண்டு, கையை இறுக்கினால், வலி உயிர் போகும். ஒரு கட்டத்தில் என்னால் நிற்கவே முடியவில்லை. எப்போது ஷூட்டிங் முடியும் என்று காத்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை எழுந்து ஷூட்டிங் கிளம்ப ஆயத்தமாக, அம்மா என்னிடம் வந்து "முதலில் டாக்டர்கிட்ட கிளம்பு" என்றார். "ஏன்? எதுக்கு நான் டாக்டர்கிட்டே போகணும்?" என்று கேட்க, முந்தைய இரவு என்

வலி! 12



உடம்பு அனலாகக் கொதித்ததும், நான் ஏதேதோ அர்த்தமின்றி உளறியதும், அப்புறம் ஏதோ மாத்திரை கொடுத்துத் தூங்க வைத்ததும் அம்மா சொல்லித்தான் எனக்குத் தெரிய வந்தது.

அன்று காலை என்னை ஷூட்டிங்குக்கு அழைத்துப் போக கார் வந்தபோது, "இனிமேல் இவன் ஷூட்டிங்குக்கெல்லாம் வரமாட்டான்" என்று கடுமையாகப் பேசி அம்மா அனுப்பி விட்டார் என்பதும் எனக்குப் பிறகுதான் தெரிய வந்தது.

(பேசுவேன்)

ஆக்ஷன் ஸ்டார் ஜீவா

ஜோக்ஸ்



"அமைச்சரே!
ஓலை ஏதும்
வந்திருக்கிறதா?"

"ஏன் மன்னா?"

"இளவரசருக்குக்
காற்றாடி
செய்யத்தான்!"

- தஞ்சை தாமு

"கிரிக்கெட்
மைதானத்துல பெண்கள்
கூட்டம் அலைமோதுதே
ஏன்?"

"ஆட்டம் நடக்கும்போது
சைடு ஸ்கிரீனில் சீரியலும்
காட்டப் போறாங்களாம்!"

- லீலாஜி





"சுத்தி வளைக்காம
சொல்லு... இன்னைக்குப்
பரீட்சையில உனக்கு
எத்தனை மார்க் கிடைக்கும்?"

"சுத்தி வளைக்கிற
மார்க்தான்ப்பா கிடைக்கும்!"

- ஆர்.ஆர்.பூபதி



"எம்.பி., எம்.எல்.ஏ. இவங்களைப் பார்த்தும் என் குழந்தைக்கு எல்.கே.ஜி. அட்மிஷன் கிடைக்க லேங்க... கடைசியில ஒரு வி.ஐ.பி. வாங்கிக் கொடுத்தார்."

"யாருங்க அது?"

"அந்த ஸ்கூலோட அட்டெண்டர்தான்."

- கிரிஜா மணாளன்

யார் அந்த வி.ஐ.பி.?

"என் மூத்த பையன் மேலத் தெருவுல பெருசா பில்டிங் கட்டியிருக்கான்; சின்னவன் கீழத் தெருவுல புது வீடு வாங்கியிருக்கான்...."

"நீங்க எங்க இருக்கீங்க?"

"நான் நடுத்தெருவுல தான் இருக்கேன்!"

- தஞ்சை அனார்கலி





"கேட்டைக் கொஞ்சம் திறந்துவிடுப்பா!"

"நீங்க யாருன்னு தெரியலையே சார்!"


"கேட் முன்னாடி வாகனங்களை நிறுத்தக் கூடாதுன்னு எழுதியிருக்கு. என் வண்டியை உள்ளே நிறுத்திக்கலாம்னுதான்!"

- ஞா.ஞானமுத்து

ராசிபலன்

மேஷம்: முன்னேற்றமான வாரம். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். திருமண காரியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். மனக்கவலை தீரும். தனவிருத்தி உண்டாகும். அயல்நாட்டு வாணிபம் நன்மையை அளிக்கும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். சனி / ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர, நற்பலன் மிகுதி ஆகும்.

ரிஷபம்: பொன்னான வாரம். ஆடை, ஆபரண, அலங்கார வஸ்துகள் சேரும். சுப நிகழ்ச்சி கைகூடும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, பண உயர்வு, இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் சுறுசுறுப்பு, அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.



மிதுனம்: பிரகாசமான வாரம். சுப நிகழ்ச்சி கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வேலையில் நற்பெயர் கிட்டும். கல்வியில் முன்னேற்றம் காண்பிக்கும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் ஏற்படும்.

கடகம்: மேன்மையான வாரம். திருமண காரியம் கைகூடும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். யாருக்கும் கடன் கொடுப்பதோ, ஜாமீன் போடுவதோ கூடாது. வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் முற்போக்கான சூழ்நிலை ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: சிறப்பான வாரம். எதிலும் தடைகள் ஏற்பட்டு, பின் வெற்றி வாய்ப்பை அடைவீர்கள். திருமணம் கைகூடும். செலவுகள் மிகுதி ஆகும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் சாதகமான சூழ்நிலை ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

கன்னி: ஆனந்தமான வாரம். பொருளாதார மேன்மை கிட்டும். திருமண காரியம் கைகூடும். செலவுகள் சுபமானதாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் நல்ல பலன் அளிக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். குரு வழிபாடு செய்து வருதல் நல்ல பலனை அளிக்கும்.

துலாம்: அதிர்ஷ்டகரமான வாரம். வீடு/மனை மூலம் ஆதாயம் கிட்டும். தீராத வழக்கு வெற்றி பெறும். திருமண முயற்சி பலன் அளிக்கும். வேலையில் நற்பெயர் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். பணக்கஷ்டம் இருக்காது. ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

விருச்சிகம்: மகிழ்ச்சியான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். தனம், கல்வி, வாக்கு வன்மை மேலோங்கும். உல்லாசப் பிரயாணம் வந்து சேரும். வேலைப் பளு அதிகரிக்கும். புதிய சொத்துகள் வாங்க ஏற்ற காலம். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

25.3.2007 முதல் 31.3.2007வரை

தனுசு: சிறப்பான வாரம். மன மகிழ்ச்சி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். அசையா சொத்து வாங்குவீர்கள். மகப்பேறு பாக்கியம் ஏற்படும். சனி/குரு/வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

மகரம்: சந்தோஷமான வாரம். திருமணம் கைகூடும். சிறு தொல்லைகள் இருக்கும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். தொழில் துறையில் முற்போக்கான சூழ்நிலை உண்டாகும். எதிர்காலத் திட்டங்கள் பலிதமாகும். வீடு / மனை வாங்க ஏற்ற காலம். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கும்பம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும் வாரம். வராத நிலுவைகள் கைக்கு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

மீனம்: செல்வச் செழிப்பான வாரம். எதிர்ப்பு, தொல்லை இருக்காது. மன மகிழ்ச்சி ஏற்படும். திருமணம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் இராது. அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். ஆஞ்சநேயர் வழிபாடு உகந்தது. ●

பரத்வாஜ் பதில்கள்

என் மகளுக்கு எப்போது எப்படிப்பட்ட வரன் அமையும்?

- எஸ்.பூங்கோதை, ஆற்காடு

உங்கள் மகளுக்கு 2007ல் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள வரனைச் சேர்க்கவும். பரிகாரம் தேவையில்லை.


என் மகளுக்கு அயல்நாட்டிலிருந்து வரன் அமையுமா? வாழ்க்கை எப்படி இருக்கும்?

- ஆர்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 20

உங்கள் பெண்ணுக்கு 2007ல் திருமணம் முடியும். அயல்நாட்டு வரன் அமையும். இல்லற உறவு நன்றாக இருக்கும். தோஷம் எதுவும் இல்லை.

தஞ்சை பரத்வாஜ்

“அப்பா, ந



ஜாகீர் உசேன்... உலகப் புகழ்பெற்ற தபலா கலைஞர். சென்னையைச் சேர்ந்த ஸ்ரீதர், அவரை ஓவியங்களாகத் தீட்டி கண்காட்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய, அதனைத் தொடங்கி வைக்க வந்திருந்த உசேனை நாம் சந்தித்துப் பேசினோம்...

"என்னை இதுவரை பலரும் பலவிதங்களில் கௌரவித்திருக்கிறார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ரசிகராக என்னைச் சந்தித்த ஸ்ரீதர், இன்று இவ்வளவு அற்புதமான ஓவியங்களைத் தீட்டி, இந்தக் கண்காட்சியைத் துவக்கி வைக்கும் கௌரவத்தையும் எனக்கே வழங்கி, என் மனத்தை நெகிழச் செய்துவிட்டார்'' என்றபடியே நம் கேள்விகளை எதிர்கொண்டார் ஜாகீர்.

மறைந்த ஷெனாய் மேதை பிஸ்மில்லா கான், வாரணாசி நகரின் மீது உயிரையே வைத்திருந்தார். அமெரிக்காவிலேயே நிரந்தரமாகத் தங்குவதற்கு வந்த அழைப்பை ஏற்க மறுத்து, கடைசி வரை கங்கைக் கரையிலேயே வாழ்ந்து மறைந்தார். அதுபோல உங்களுக்கு இந்தியாவில் மிகவும் பிடித்த இடம் ஏதாவது உண்டா?



"ஒரு இடம் இல்லை; ஒட்டுமொத்த இந்தியாவின் நிலப்பரப்பும் என்னுடன் இரண்டறக் கலந்துள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்னுடைய தாய்நாடு பரந்து இருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் என் மனத்துக்கு மிகவும் பிடித்த இடமாக நான் நினைக்கவில்லை. உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், நான் ஒரு இந்தியன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்."



...றும் வாசிக்கட்டுமோ?”

அப்படியானால், நீங்கள் அமெரிக்காவில் வசிப்பது ஏன்?

“நான் இந்தியாவிலும், அமெரிக்காவிலும் மாறி மாறித் தங்கி இருக்கிறேன். காரணம், நான் என்றைக்குமே இசையைக் கற்றுக்கொள்ளும் மாணவன் என்பதுதான். இசை என்ற பெரும் கடலில் நான் அறிந்தது மிகக் குறைவு; இசையைக் கற்கும் ஒரு மாணவனாகத்தான் நான் அமெரிக்காவில் வசிக்கிறேன்.”

உங்கள் வாழ்க்கையில் முதல் முறையாக எப்போது தபலாவைத் தொட்டீர்கள் என்று நினைவிருக்கிறதா?

“ஓ! பிரபல கிதாரிஸ்ட் இலாயத்கான், ஒருமுறை எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது எனக்கு மூன்று வயது. வழக்கமாக அந்த



• ஓவியர் ப்ரீதம்



வயதில் குழந்தைகளுக்கு கார், ரயில், கரடி பொம்மை என்றுதானே வாங்கிக் கொடுப்பார்கள். ஆனால், இலாயத்கான் எனக்கு வாங்கிக் கொடுத்தது ஒரு மினி சைஸ் தபலா! அதை வைத்துக்கொண்டு, வீட்டில் எல்லாரிடமும் 'அப்பா போல நானும் தபலா வாசிக்கட்டுமா?'' என்று வாசித்துக் காட்டுவேன். அவர்களது பாராட்டுகளும், வாழ்த்துகளும்தான் என்னை இந்த அளவுக்கு உயர்த்தி யிருக்கின்றன!''

மக்களை மிகவும் கவர்ந்த ஆண்கள் பட்டியலில் நீங்களும் இடம்பிடித்திருக் கிறீர்களே...



"மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நான் ஒரு கிரிக்கெட் வீரரோ, சினிமா நட்சத்திரமோ இல்லை. ஆனாலும் இப்படி ஒரு பெருமை கிடைத்திருப்பது ஆச்சரியம்!''

உங்கள் இளமையின் ரகசியம் என்ன?

''என்னுடைய உயிரோட்டமான இசைதான் என்னை மகிழ்ச்சியாகவும் இளமையாகவும் வைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். இன்னொன்று, என் எளிமையான உடை. தலையைக்கூட படிய வாரினதில்லை''


தபலாவைத் தவிர உங்களுக்கு வேறு எதில் ஆர்வம்?


"நிறைய படிக்கிறேன்; கிரிக்கெட் என்றால் மிகவும் பிடிக்கும்.''

உலகக் கோப்பையை இந்தியா வெல்லுமா?

''நான் ஜோதிடர் இல்லையே! ஒரு ரசிகன் என்ற முறையில் இந்தியா வெல்ல வேண்டும் என்று மனப்பூர்வமாக ஆசைப்படுகிறேன்! இந்திய அணிக்கு என் வாழ்த்துக்கள்!''

- எஸ். சந்திரமௌலி







ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. திருவாரூர் மாவட்டம்.

ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

அன்புடையீர்,

நிகழும் அவ்யய வருஷம் பங்குனி மாதம் 22-ஆம் தேதி வியாழக்கிழமை (5.4.2007) ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் **ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும், மற்ற பரிவார தேவதைகளுக்கும்** 10-ஆம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா இறையருள், குருவருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம். நன்கொடைகளைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பக் கோருகிறோம்.

ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் (05.04.2007வியாழன்)

காலை	7.00	மணி	-	கோபூஜை
"	7.30	மணி	-	புண்யாஹவசனம், அனுக்ஞை, மஹா ஸங்கல்பம்
"	8.00	மணி	-	ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், கலச ஸ்தாபனம், ஸ்தபன பூஜை
"	9.00	மணி	-	நவக்ரஹ ஹோமம்
"	10.00	மணி	-	ஜபம் - பாராயணம், பூஜை - ஹோமம்
பிற்பகல்	12.00	மணி	-	பூர்ணாஹுதி
"	12.30	மணி	-	மஹாபிஷேகம்
"	1.30	மணி	-	ஸ்வாமி, அம்பாளுக்கு அர்ச்சனை, மஹா தீபாராதனை

இங்ஙனம்

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்

பொன். சிவசங்கரன் M.A.
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ ஸற்குணேச்வரர்
கைங்கர்ய ஸபா (Regd).
மற்றும் கிராமவாசிகள்

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரிகள்

G. கண்ணன்,
D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர்,
சென்னை –78.
போன்: 044-24836495

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 கப்பாரெட்டித் தெரு,
எஸ்.என்.ஆர்.கன்ஸ்டிரக்ஷன்ஸ்,
சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. குஞ்சிதபாதம், ஆடிட்டர்
G. நடேசன் & கம்பெனி
டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்–612 001
போன்: 0435 2420047

சிறுகதை

அந்த ஒரு வார்த்தை!

அனைவரும் சாப்பிட உட்கார்ந்த பொழுது, வயிற்றைப் புரட்டும் முடை நாற்றம் காற்றில் கலந்து வந்தது.

"என்னங்க... கரெக்டா நாம சாப்பிட உக்காரும்போது, இந்தப் பாழாய்ப் போன ஃபேக்டரியிலிருந்து கழிவுநீரைத் திறந்து விட்டுடறாங்க! பாருங்க, நாத்தம் குடலைப் புரட்டுது!" என்றாள் கயல்விழி.

"என்ன செய்யறது? நம்ம காலனி செக்ரட்டரிகூட போன வாரம் போய் ஃபேக்டரி ஓனரிடம் சொல்லி இருக்காராம்!" என்றார் விப்ரநாராயணன்.

"ஆமாம்... நீங்களும் இனியசிவனும் நேத்து போனீங்களே! அந்த மேனேஜர் என்ன சொன்னார்?"

"ஒண்ணும் புண்ணியமில்லை, கயல்! அந்த மேனேஜர் என்ன பேச்சு பேசறார் தெரியுமா? எனக்கென்னமோ அந்த ஃபேக்டரி ஓனருக்கு அரசியல் செல்வாக்கு நிறைய இருக்கும்னு தோணுது!"

முதல்நாள் சாயந்தரம் ஆபீஸிலிருந்து வந்தவுடன் விப்ர நாராயணன் அந்த ஃபேக்டரி மேனேஜரைப் பார்த்து, இது பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று கிளம்பினார். பத்தாவது படிக்கும் அவரது மகன் இனியசிவன், 'நானும்கூட வருகிறேன்' என்று அவருடன் புறப்பட்டான்.

"யாருங்க நீங்க? என்ன விஷயம்?"

மேனேஜரின் பேச்சு, அதட்டும் தொனியில் இருந்தது. விப்ரநாராயணன் மென்மையாகவே ஆரம்பித்தார். "சார்! மொத்தம் அறுபது வீடுகள் இந்த காலனியில் இருக்கின்றன. இப்ப ரெண்டு மாசமா, உங்க ஃபேக்டரியிலிருந்து வரும் கழிவுநீரின் நாற்றம் மிகவும் தொந்தரவாக உள்ளது."

அவர் முடிக்கும் முன் மேனேஜர் இடைமறித்தார்!

"என்னங்க பேசறீங்க? கெமிக்கல் ஃபேக்டரின்னா அப்படித்தான் இருக்கும்! பொறுத்துத்தான் போகணும்! போகப் போக உங்களுக்கே இந்த நாத்தம் பழகிடும்!"

"நீங்க ஏதாவது கெமிக்கல் ட்ரீட்மெண்ட் செய்து, இந்த நாத்தம் இல்லாம கழிவுநீரை வெளிய விடலாமே?"


"என்னது... கெமிக்கல் ட்ரீட்மெண்ட்டா? அதுக்கு எவன் முதல் வைக்கறது? போங்க, உங்க வேலையைப் பாத்துக்கிட்டு! பெருசா, அட்வைஸ் பண்ண வந்துட்டீங்க..."

விப்ரநாராயணனுக்கு 'சுருக்' என்று கோபம் வந்தது. அடக்கிக் கொண்டார்.

"அது சரி! நீங்க மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் முறையா அனுமதி வாங்கியிருக்கீங்களா?" என்றார்.

"அதுக்கெல்லாம் பதில் சொல்லணும்னு அவசியம் இல்லை! நீங்க யார் கிட்ட வேணாலும் போய் ரிப்போர்ட் பண்ணிக்குங்க!" என்று சொல்லிவிட்டு மேனேஜர் உள்ளே போய்விட்டார். 'சரி, இவரிடம் பேசிப் பயன் இல்லை' என்று இருவரும் வீட்டுக்குத் திரும்பிவிட்டனர்.

இரண்டு நாள் சென்றிருக்கும்... பள்ளிக்குப்போன இனியசிவன் சாயங்காலம் வீட்டுக்கு வரவில்லை. கயல்



விழிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. விப்ரநாராயணன் எட்டு மணிக்கு வந்து சேர்ந்தார்.

வந்தவரிடம் விஷயத்தைச் சொல்ல, பரபரப்புடன் நண்பர்கள் வீடு, அக்கம் பக்கம் என்று அனைத்து இடங்களிலும் தேடும் படலம் தொடங்கியது. இனியசிவன் கிடைக்கவில்லை. கயல்விழி கதற ஆரம்பித்துவிட்டாள். விப்ரநாராயணன் அவளைத் தேற்ற முயன்றார். சரி, 'போலீஸுக்குப் போகலாம்' என்று புறப்படும்போது, ஒரு நண்பர் ஓடி வந்தார்!

"சார்! உங்க பையனை யாரோ அடிச்சி, ஆத்தங்கரையில போட்டுட்டாங்களாம். இப்ப ஆஸ்பத்திரியில சேத்திருக்காங்களாம்!"

வீட்டைப் பூட்டிவிட்டு அனைவரும் ஆஸ்பத்திரிக்கு வரும்போது மணி பத்து ஆகிவிட்டது. இனியசிவன் அரை மயக்கத்திலிருந்தான். கயல்விழிக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. விப்ரநாராயணனும் கண்கள் கலங்கி விட்டார். விஷயம் கேள்விப்பட்டு அவன் ஸ்கூல் டீச்சர்ஸ், மாணவர்கள் என்று ஏக கூட்டம்! விசாரித்த பிறகுதான் விஷயம் புரிந்தது. இனியசிவன் அந்த ஃபேக்டரியைப் பற்றியும் கழிவு நீரைப் பற்றியும் மாவட்ட கலெக்டருக்கு ஒரு புகார் மனு எழுதிப் போட்டிருக்கிறான். கலெக்டர் உடனே அதிரடி நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார். இவன் மனு அனுப்பிய விஷயம் எப்படியோ ஃபேக்டரி மேனேஜருக்குத் தெரிய வர, அவர் இனிய சிவனை ஆள் வைத்து அடித்திருக்கிறார். பொது மக்கள் கூடிய உடன் அவனை அப்படியே விட்டு விட்டு ஓடிவிட்டிருக்கிறார்கள். பிறகு போலீஸுக்குத் தகவல் போய், அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள்.

இனியசிவன் நினைவு வந்தவுடன், "அப்பா! கலெக்டர் வந்து ஆக்ஷன் எடுத்தாராப்பா?" என்றுதான் கேட்டான்.

"உனக்கு ஏண்டா இந்த வேலை! நாங்க பெரியவங்க பாத்துக்க மாட்டோமா?"

"இல்லப்பா! எங்க டீச்சர் அடிக்கடி சொல்வாங்க- இந்தப் பூமியை யாரும் மாசுபடுத்துவதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்கக் கூடாது; ஏன்னா, நமக்கு இன்னொரு பூமி கிடைக்காதுன்னு"

ஜெ.பி.குமரகுரு

முதல்வன்

பில் கேட்ஸின் பின்வாசல்!

சில பள்ளி மாணவர்கள் இணைந்து உருவாக்கிய சின்னஞ்சிறு நிறுவனம் அது. கணினிக்கான உதிரி பாகங்களை விலைக்கு வாங்கி, அவர்களே அசெம்பிள் செய்து 'சியாட்டல் கம்ப்யூட்டர்' என்ற பெயரில் விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

ஐ.பி.எம். கணினிகளில் பயன்படுத்துவதற்காக மைக்ரோசாஃப்டுக்கு ஓர் ஆபரேட்டிங் சிஸ்டம் (ஓ.எஸ்.) தேவைப்பட்டது. அப்போதுதான் இந்த சியாட்டல் கம்ப்யூட்டரைப் பற்றிக் கேள்விப்பட்டார் பில் கேட்ஸ்.

அப்போது சியாட்டல் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த டிம்பேடர்ஸன் என்ற இளைஞர், 'QDOS' என்ற பெயரில் ஓர் ஓ.எஸ். எழுதி முடித்திருந்தார். இதனை ஐ.பி.எம். பர்ஸனல் கம்ப்யூட்டர்களுக்கு ஏற்ற வகையில் மாற்றிப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று கேட்ஸுக்கு யோசனை தோன்றியது.

'QDOS' என்றால், 'Quick & Dirty Operating System'. அதாவது, அவசரமாக எழுதப்பட்ட, குப்பை ஓ.எஸ். என்று அர்த்தம். வெறும் நான்கு மாத இடைவெளிக்குள் இந்த ஓ.எஸ்ஸை உருவாக்கியிருந்த டிம் பேடர்ஸன், அதற்கு இப்படி ஒரு வேடிக்கையான பெயரைச் சூட்டிருந்தார்.

'அவசரமோ, குப்பையோ எதுவானாலும் பரவாயில்லை' என்றார் பில் கேட்ஸ். இப்போதைக்கு அவர்களுக்கு மிக உடனடியாக ஓர் ஓ.எஸ் தேவைப்பட்டது. அது எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் பாதகமில்லை. பொறுமையாகச் சரிசெய்து உபயோகப்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள்.

இதனால், மைக்ரோசாஃப்ட் - சியாட்டல் கம்ப்யூட்டர் நிறுவனங்களுக்கு இடையே மிக முக்கியமான ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. 'QDOS' ஆபரேட்டிங் சிஸ்டத்தை மற்ற கணினிகளுக்குப் பொருத்தமாக மாற்றி விற்பனை செய்கிற உரிமையை, இருபத்தைந்தாயிரம் டாலர்கள் கொடுத்து வாங்கிக்கொண்டது மைக்ரோசாஃப்ட்.

இங்கேதான் பில் கேட்ஸின் புத்திசாலித்தனமான தந்திரம் வேலை செய்தது. ஐ.பி.எம். கணினிகளில் பயன்படுத்துவதற்காகத்தான் இந்த ஓ.எஸ்.ஸை வாங்குகிறோம் என்று அவர் குறிப்பிடாமல் மறைத்துவிட்டார்.

'QDOS' ஆபரேட்டிங் சிஸ்டத்துக்கான உரிமைகளை வாங்கியபோதே, பில் கேட்ஸுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்திருந்தது.

என்னதான் காசு செலவழித்து

வாங்கியிருந்தாலும், இந்தப் புதிய ஓ.எஸ்.ஸில் ஐ.பி.எம். கணினிகளுக்கு ஏற்ப நிறைய மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.

இதற்காக, தன்னுடைய ப்ரோக்ராமர்களில் மிகச் சிறந்த சிலரைத் தேர்ந்தெடுத்து பணியை ஒப்படைத்தார் பில் கேட்ஸ். இந்த மைக்ரோசாஃப்ட் குழு, சுறுசுறுப்பாகத் தன்னுடைய பணிகளைத் தொடங்கியது. ஐ.பி.எம். நிறுவனமும் இந்த ஆபரேட்டிங் சிஸ்டத்தைச் சோதித்து ஏகப்பட்ட மாற்றங்கள், புதிய தேவைகளைத் தெரிவித்தது.


இவை எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து முடிப்பதற்காக, சியாட்டல் கம்ப்யூட்டர் நிறுவனத்தைச் சேர்ந்த டிம் பேடர்ஸனையும் வளைத்துப் போட்டு விட்டார் பில் கேட்ஸ். ஓ.எஸ். மராமத்து வேலைகள் மேலும் விரைவாக நடந்தன.

இந்தக் காலகட்டத்தில் ஐ.பி.எம். கணினியும் முழுமையாகத் தயாராகியிருந்தது. அதற்குப் பொருத்தமான வகையில் மாற்றி அமைக்கப்பட்டிருந்த 'QDOS'க்கு, இப்போது 'PC -DOS' (Personal Computer - Disk Operating System) என்று புதுப் பெயர் சூட்டப்பட்டது.

1981 ஜூலையில், மேலும் ஐம்பதாயிரம் டாலர்கள் செலவழித்து 'QDOS'ஸை முழுமையாகத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுவிட்டது மைக்ரோசாஃப்ட்.

ஆக, யாரோ தயாரித்த ஓ.எஸ்.ஸைச் சொற்ப விலைக்கு வாங்கி, அதை எழுதிய ப்ரோக்ராமரையும் தங்கள் வசம் இழுத்துப் பயன்படுத்திக் கொண்டு, கடைசியில் எல்லாவற்றையும் தங்கள் பெயரில் 'புத்தம் புது காப்பி'யாக வெளியிட்டு விட்டது மைக்ரோசாஃப்ட்.

சட்டப்படி பார்த்தால், பில் கேட்ஸ் செய்ததை எந்தவிதத்திலும் தப்பு என்று சொல்ல முடியாது. இதன் மூலம் தன்னுடைய மொத்தச் செலவைக் கணிசமாகக் குறைத்துக்கொண்டது



நிச்சயமாக பில் கேட்ஸின் சாமர்த்தியம் தான்.

'QDOS' என்பதே அந்தக் கால கட்டத்தில் பிரபலமாக இருந்து இன்னொரு ஓ.எஸ்.ஸின் காப்பிதான் என்று குற்றம் சாட்டுகிறவர்கள் இருக் கிறார்கள்.

ஆனால், அதை விலைக்கு வாங்கிப் பயன்படுத்திக்கொண்ட மைக்ரோ சாஃப்ட், இதுபோன்ற சர்ச்சைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. இந்த ஓ.எஸ். பயன்படுத்தச் சுலபமாக இருக்கிறதா, ஐ.பி.எம். கணினிகளில் சரியாகச் செயல்படுகிறதா என்பதில் மட்டும்தான் அவர்களுடைய முழு கவனமும் இருந்தது.

ஆகஸ்ட் 12, 1981-ஆம் ஆண்டு, ஐ.பி.எம். தனது பர்சனல் கம்ப்யூட் டர்களைச் சந்தையில் அறிமுகப்படுத்தி யது. ஒரே வருடத்தில் முழுமையாகத் தயாரிக்கப்பட்டு வெளியான இந்தக் கணினிகள், பெரும்

• பேடர்ஸன்



ஐ.பி.எம். வருத்தப்பட்டுக் கொண்டிருக்க, மைக்ரோசாஃப்டுக்கு உற்சாகம் பொங்கி வழிந்தது!

பாலானோர் வாங்க முடிகிற விலையில், குறிப் பிடத்தக்க சவுகர்யங்களுடன் பயன் படுத்த எளிமையாக இருந்தன.


இதனால், எலக்ட்ரானிக்ஸ் பிரியர்கள் மட்டுமின்றி, பொதுமக்களும் ஐ.பி.எம். பர்சனல் கம்ப்யூட்டர்களை எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

இந்தக் காலகட்டத்தில்தான், மிகச் சிறிய அலுவலகங்கள்கூட தங் களுக்கென்று ஒரு 'பர்சனல் கம்ப்யூட்டர்' வேண்டும் என்று நினைக்க ஆரம்பித் தார்கள்.

'பி.சி. புரட்சி' என்றே செல்ல மாகப் பெயரிட்டு அழைக்கப்படும் இந்த மாற்றத்தில், பில் கேட்ஸ் மற்றும் மைக்ரோசாஃப்டின் பங்கு மிக முக்கியமானது. என்னதான் பின்வாசல் வழியாக ஆபரேட்டிங் சிஸ்டத்தைக் கடத்தியிருந்தாலும், அவர்களுடைய 'PC-DOS' தான், கம்ப்யூட்டர் பயன்படுத்துவது அப்படி யொன்றும் கம்பசூத்திரம் இல்லை என்ற நம்பிக்கையைப் பெருவாரியான மக்களி டையே உண்டாக்கியது.

இதனால் கம்ப்யூட்டர் விற்பனை படுபயங்கரமாக சூடு பிடித்துவிட்டது. ஐ.பி.எம். சுதாரித்துக்கொண்டு பி.சி-க் களைத் தயாரித்துக் குவித்துவிட்டது. விற்பனை பெருகப் பெருகப் போலிகளும் உருவாகத் தொடங்கின. ஐ.பி.எம். அதிர்ந்தது. மைக்ரோ சாஃப்டுக்கு உற் சாகம் பொங்கி வழிந்தது!

(தொடரும்)



மத நல்லிணக்கம்

கேட்கும்போதே காதில் தேனைப் பாய்ச்சுகிறது அந்தச் செய்தி. இந்துக் கோயிலுக்கு இஸ்லாமியர் ஒருவர் எட்டு ஆண்டுகளாக விழா எடுத்து நடத்தி வருகிறார்.

புதுக்கோட்டை மாவட்ட நகர மன்றத் தலைவரான அவர், நைனா முகம்மது. இங்குள்ள தெற்கு இரண்டாம் வீதியில் உள்ள அம்மன் கோயிலுக்குத்தான் கடந்த எட்டு ஆண்டுகளாக, தானே வீடு, வீடாகச் சென்று நிதி வசூலித்தும், தன் சொந்தப் பணத்தைக் கொண்டும் விழா நடத்தி வருகிறார் நைனா முகம்மது.



* அந்த அம்மன் கோயில்...

* நைனா முகம்மது

இந்துக் கோயில் விழா நடத்தும் இஸ்லாமியர்

"ஒருமுறை அம்மன் கோயில் திருவிழாவுக்குக் கரகாட்டம் ஏற்பாடு செய்திருந்தாங்க. அதுக்குப் பணம் கொடுக்க முடியல. வசூல் சரியில்லை. விழாக் கமிட்டியினருக்குள் அடிதடி, சண்டை. உடனே நான், 'பட்டிமன்றம் மாதிரி நல்ல இலக்கிய நிகழ்ச்சி நடத்தினாதானே மக்கள் பணம் தருவாங்க... ரசிப்பாங்க!' என்றேன். 'அதெல்லாம் யார் எடுத்துச் செய்றது'ன்னு சலிச்சுக்கிட்டாங்க. 'உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா, நானே எடுத்துச் செய்றேன்'னு சொன்னேன். அவங்களும் சம்மதிச்சாங்க. அன்னைலேர்ந்து நான்தான் வருஷா வருஷம் திருவிழா நடத்துறேன். இந்துக்களின் ஆதரவு இல்லன்னா என்னால் இதைச் செய்ய முடியாது" என்ற முகம்மதுவிடம், 'உங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்?' என்றோம்.

"யாரும் எந்த எதிர்ப்பும் சொல்லல. மதம் என்னங்க பெரிய மதம்... மனுஷங்கதானே முக்கியம்!" என்று கூறும் முகம்மது விழா நடத்தும் அம்மன் கோயில் இருக்கும் அதே தெருவில்தான், அவர் வழிபடுகிற மசூதியும் இருக்கிறது!

- சுமதி

ஜனங்களின் சாமி

"கொட்டாரக் கரையில இருக்கிற பகவதியம்மன் கோயில் ஈசான மூலையில ஒரு கிடாரம் நிறைய பொன் இருந்திச்சு. அதைப் பாது காக்கிற பொறுப்பை பகவதி அம்மாள் சுடலைட்ட ஒப்படைச்சி இருந்தா.

மலையாளக்கரை ஓரமா காளிப்புலையன்னு ஒரு சூப்பர் மந்திரவாதி இருந்தான். அவன் சாமிகளின் கண்ணையே கட்டக் கூடியவன்.

ஒருநாள் அவன் 'எந்தெந்த இடங்கள்ல புதையல் இருக்கு'ன்னு மை போட்டுப் பார்க்கும்போது பகவதியம்மன் கோயிலுக்குள்ள ஒரு கிடாரம் பொன் இருக்குங்கிற விவரம் அவனுக்குத் தெரிஞ்சிச்சி. உடனே நேரே பகவதி அம்மன் கோயிலுக்குப் போனான். 'சுடலை வெளியேறுகிற நேரம் பார்த்து கிடாரத்தைக் கைப்பத்தணும்'னு நினைச்சுக் காத்திக்கிட்டிருந்தான் காளியப்புலையன்.

அன்னிக்கு வெள்ளிக்கிழமை. நடுச்சாமம் போல, சுடலை சுடுகாட்டுக்கு வேட்டைக்குப் புறப்பட்டார். உடனே காளிப்புலையன், நேரே பகவதி அம்மன்கிட்டப் போயி, அவளைச் செயல்பட விடாம ஆரக்கட்டிட்டான். பிறகு கிடாரம் உள்ள இடத்துக்கு வந்து கிடாரத்தைத் தோண்டி எடுத்து ஒரு மந்திரக் காளை முதுகுல பொன்னைப் பொதியாகப் போட்டு ஏத்திக்கிட்டுத் தன் இருப்பிடத்துக்குப் போனான்.

வேட்டைக்குப் போயிட்டு வந்த சுடலை கிடாரத்தைப் பார்த்தார். ஒரு கிடாரம் பொன்னைக் காணலை. பகவதியம்மையிடம் போய் ''எப்படி கிடாரம் காணாமப் போச்சு?''ன்னு கேட்டார்.

பகவதி அம்மை நடந்ததையெல்லாம் சொல்லி, 'அதை மீட்டுத் தர வேண்டியது உன் பொறுப்பு தான்'னு சொன்னாள்.



சுடலை மோசம் பண்ணுன காளிப்புலையனைக் கருவறுக்கணும்ங்கற வைராக்கியத்தோட நேரே மலையாளக் கரைக்கு வந்தவர், அங்க ஓரமா உள்ள ஒரு சுடுகாட்டுல போய் இருந்துக்கிட்டார். பொழுது விடிஞ்சதும், பிச்சைக்காரன் ரூபத்துல காளிப்புலையன் வீட்டுக்குப் போனார்.

அவனுக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். அவள் பேரு சூரி. சுடலை முதல்ல அவளைக் கருவறுக்

12

சுடலையும் சூப்பர் மந்திரவாதியும்...

கழனியூரன்



கனும்னு நினைச்சார்.

காளிப்புலையன் வீட்டு வாசல்ல கிழட்டுப் பிச்சைக்காரன் ரூபத்துல நின்னுக்கிட்டு 'அம்மா தாயே பிச்சை போடுங்க'ன்னு குரல் கொடுத்தார்.

சூரி வீட்டுக்குள்ள இருந்துக்கிட்டு தோழிப் பெண் ஒருத்தியிடம் பிச்சைப் பொருளை கொடுத்து அனுப்பினாள்.

உடனே சுடலை, "நீ வீட்டுக்குள்ள போ... போயி... இந்த வீட்டுக்கு உடமைப்பட்டவளக் கொண்டு வந்து பிச்சைப் பொருளைக் கொடுக்கச் சொல்" என்றார் அதிகார தோரணையில்.

தோழிப் பெண் நேரே சூரியிடம் போய், தெருவில் நிற்கும் பிச்சைக்காரப் பெரியவர் சொன்னதை அப்படியே ஒப்பித்தாள்.

காளிப்புலையன் மகளும் அப்பேர்ப்பட்ட கொம்பனைத்தானும் பார்க்க நினைச்சாள். அதனால பிச்சைப் பொருளோட வீட்டுத் தலைவாசலுக்கு வந்தாள். வந்தவள் கிழட்டுப் பிச்சைக்காரனை ஏளனத்துடன் பார்த்து, "யோய் பிச்சைக்காரக் கிழவா, உமக்கா இம்புட்டுத் திமிர்! மரியாதையா நான் தார பிச்சைப் பொருளை வாங்கிட்டு ஊரு போய்ச் சேரும். எங்கப்பன் காளிப்புலையன் சேதி தெரியாம அலையாதிரும்"னாள்.

சுடலை விடுவாரா... "அடியே காளிப்புலையனின் மகளே... இன்னிக்கு ராத்திரி நடுச்சாமம் உன் அப்பங்காரன் வீட்டுல இருக்கும்போதே உன்னைப் பெண்டாளப் போறேன். முடிஞ்சா காப்பாத்திக்கப் பாரு. உங்கப்பனிடமும் இதைச் சொல்லு... எனக்கு நீதான் வேணும், உன் பிச்சைப் பொருள் வேணாம்"னார்.

சுடலை சொன்னதைக் கேட்டு சூரி ஆடிப் போயிட்டாள். வேர்த்துக் கொட்டியது. தலை சுத்தியது. பயந்து வீட்டுள்ள போய், தலைவாசல் கதவை அடச்சிக்கிட்டா.

ராத்திரி வெகு நேரத்துக்குப் பிறகு காளியப்பன் வீட்டில் இருக்கும்போதே, சுடலை பாம்பு ரூபம் எடுத்து அவன் வீட்டுக்குள் போய், சூரியைக் கூடினார்.

அன்னைக்கே அவள் கருக் கொண்டாள். நாளாக நாளாக உடம்பில் தாய்மைக்குரிய அறிகுறிகள் தோன்றின. தான் எப்படி கருத்தரிச்சோம்ங்கிற சேதி தெரியல.

சுடலை காட்டுப் பன்னி ரூபம் எடுத்து காளிப்புலையனுக்குச் சொந்தமான வாழைத் தோப்புகளை எல்லாம்

அழிச்சித் துவம்சம் பண்ணினார்.

இது சுடலையின் வேலைதான்னு தெரிஞ்சிட்டு, நேரே சுடலை இருக்குற சுடு காட்டுக்குப் போனான் காளிப்புலையன்.

சுடலை, காளிப்புலையனைப் பார்த்து, "ஒரு கிடாரம் பொன்னுக்கு ஆசைப்பட்டுத் தானே கொட்டாரக்கரை பகவதி அம்மன் கோயிலுக்கு வந்தே. நான் உனக்குப் பத்துக் கிடாரம் பொன் இருக்கிற இடத்தைக் காட்டுதேன். உன்னால நான் சொல்கிறபடி ஊட்டுக் (மாமிசப் படை) கொடுக்க முடியுமா?"ன்னு கேட்டார்.

பேராசை பிடிச்ச காளிப்புலையன் "நீர் சொல்கிறபடி ஊட்டுக் கொடுக்கேன். எனக்குப் பத்துக் கிடாரம் பொன் இருக்க இடத்தைக் காட்டும்"ன்னான்.

சுடலை, "பூதங்களைக் கால்களாக நட்டு ஏழு பரண் போடணும். அதுல வரிசையா ஆறு பரண்கள்ல சூல் ஆட்டையும், சூல் மாட்டையும், சூல் பன்றியையும், சூல் குதிரையையும், சூல் முதலையையும், சூல் யானையையும், ஏழாம் பரண்ல கல்யாணம் முடியாமல் கருக்கொண்ட கன்னிப்பெண் ஒருத்தியோட நெஞ்சைக் கீறி ஊட்டாக் கொடுக்கணும்"னு கேட்டார்.

களிப்புலையன் ஒப்புக்கிட்டான்.

மறுவாரம் வெள்ளிக்கிழமை. காளிப்புலையன், ஆறு ராத்திரி நேரத்துல ஆறு பரண்களை அமைச்ச பிறகுதான் தெரிஞ்சது. ஏழாவது பரணுக்கு ஆள் இல்லைன்னு. தன் மகள் சூரி பத்தி சிந்திச்சான்.

நம் இடத்துக்கே எவனோ ஒரு வில்லால கண்டன் வந்து நம்ம பிள்ளையையே கர்ப்பமாக்கியிருக்கானே... அவன் யாரரா இருக்கும்?'னு ஒரு கணம் யோசிச்சாலும், பத்துக் கிடாரம் பொண்ணுக்கு ஆசைப்பட்ட பேராசை பிடிச்ச காளிப்புலையன் தான் பெத்த பிள்ளையையே கூட்டிக்கிட்டு வந்து ஏழாவது பரண்ல ஏத்தி, அவள் நெஞ்சைக் கீறி சுடலைக்கு ஊட்டாகக் கொடுத்தான்.



"இந்தப் படுபாவிப் பயலை பூலோகத்தில் வச்சிருக்கப் படாது!"

பார்த்தார் சுடலை... இனியும் இந்தப் படுபாவிப் பயலை இந்தப் பூலோகத்தில் வச்சிருக்கப்படாதுன்னு நினைச்சி, அவன் சிரசைக் கிள்ளி எறிஞ்சார். இப்படியாக, காளிப்புலையனுடைய மகளும் செத்தாள்; காளிப்புலையனும் செத்தான்; அதன் பிறகு, பொன் உள்ள கிடாரத்துக்குக் காவல் இருக்கும் பூதங்களை ஆரக் கட்டிட்டு, சுடலை, ஒரு கிடாரம் பொன்னையும் ஒரே பொதியாக் கட்டி, மாயக்குதிரை மேலே ஏத்திக் கொட்டாரக் கரை பகவதி அம்மன் கோயில்ல கிடாரம் இருந்த இடத்துலயே திரும்பவும் ஒரு கிடாரம் பொன்னையும் கொண்டாந்து வச்சார்.

சுடலையின் திறமையைப் பாராட்டிய பகவதி அம்மன், திரும்பவும் சுடலையையே அந்தக் கிடாரத்துக்கு காவல்ரா நியமிச்சா. இன்னைக்கும் பகவதி அம்மன் கோட்டைக்குச் சுடலை காவலா இருக்காரு. இதுதான் கொட்டாரக்கரை சுடலையோட வரலாறு"ன்னு சுடலையின் கதையைச் சொன்னார் பூவாங்குளம் என்ற ஊரைச் சேர்ந்த கோயில் பூசாரி பரமசிவன்.

(தொடரும்)

மிக விரைவில் கடைகளில்...

விடுமுறைச் சிறப்பிதழ்!

அசத்த வருது ஹாலிவுட்!





அறிவு விளையாட்டுக்கு...

கிரிக்கெட் க்விஸ்!

கோடை விடுமுறைப் போட்டி,
சூப்பர் கையெழுத்து,
கதைகள், பரிசுகள்...

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்

ஏப்ரல் 2007 ரூ.8/-

வைரமுத்து

கவிப்பேரரசு வைரமுத்து மறுக்கிறார்



வைரமுத்து சொன்னது சரியா? கட்டுரை கண்டேன்.

கல்கியின் பெருமைகளுள் ஒன்று அது கணிசமாக ஈட்டி வைத்திருக்கும் நம்பகத்தன்மை. அந்த நம்பகத்தன்மையின் மீது விழுந்த கிழிசல் என்று கருதுகிறேன் - இந்தக் கேலிப் பொருளை.

ஈரோட்டில் நிகழ்ந்த அரிமா சங்க விழாவில் மதுவுக்கு எதிரான எனது கருத்துரையில் எவரையும் அல்லது எந்தக் குழுவையும் குறிப்பிடவே இல்லை; குறிப்பிட்டால் அதைப்போல் அநாகரிகமும் இல்லை.

கல்கி அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் என் உதவியாளரிடம் இது குறித்து வினவியது என் கவனத்திற்கு வந்தது. 'அப்படிப் பேசவில்லை; அய்யமிருந்தால், ஈரோட்டுப் பேச்சின் ஒலிப் பதிவைக் கேட்டுக் கொள்ளலாம்' என்று அந்த அமைப்பின் தொலைபேசி எண்ணும் உங்களுக்குத் தரப்பட்டது. அதை நீங்கள் கேட்டிருக்க வேண்டும்; கிடைக்கவில்லையெனில் கிடைக்கும்வரை காத்திருக்கவேண்டும்.

அவசரப்பட்டு விட்டீர்களே! உண்மையின் கண்களில் ஊசி குத்தி விட்டீர்களே! கல்கியின் பளபளப்பான அட்டையை என் படமிட்டுப் பாழடித்து விட்டீர்களே!

முப்பத்தைந்து ஆண்டுகளாய்த் தமிழோ தமிழ் என்று குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறேனே! என்னை நீங்கள் நம்பக் கூடாதா?

உங்களுக்கும் நான் சேவகனாயிருக்கும் இந்தச் சமூகத்துக்கும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அச்சமற்ற சூழலில்

வளர்ந்தவன் நான்; அச்சமின்றி வாழ ஆசைப்படுகிறவன் நான். சொன்னது உண்மையெனில் எது நேரினும் ஆம் என்பேன். இல்லையெனில் இல்லை என்பேன். சொன்னது சரி எனில் ஆணியடித்தாலும் அதில்தான் நிற்பேன். பிழை எனில் திருத்திக் கொள்வேன். எவர் மனமேனும் புண்பட்டிருப்பின் மன்னிப்புக் கேட்கும் பேராண்மையும் என் மானத்திற்கு உண்டு.

ஆனால் சொல்லாத ஒன்றைச் சொல்லியதாக நீங்கள் சில அப்பாவிகளை நம்ப வைத்ததும், அந்த நல்லவர்கள் பாவம் முட்டைக்கு மொட்டை போட முயன்றிருப்பதும் கண்டு, என் கவலை நாணத்தில் நனைகிறது. எனக்குள்ள வருத்தமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். "வைரமுத்து இப்படிச் சொல்லியிருப்பாரா...?" என்று கருத்துரைத்த யாரும் கருதவே இல்லையே!

அதிலும் கவிஞர்களாகிய சில புத்திசாலிகள் அடக்கி வாசித்திருக்கிறார்கள்; மற்றவர்கள் பாவம்! அடித்து வாசித்திருக்கிறார்கள்.

எல்லார் மீதும் பூவெறிந்து கொண்டே போகிற என் மீது கூட வேலெறிந்து பார்க்கும் விளையாட்டு எதனால் நேர்கிறது என்று எண்ணிப் பார்க்கிறேன்.

எந்திரங்களையும் நிறுவனங்களையும் கட்டிக் காக்கத் துடிக்கும் ஊடகப் போட்டியில் தத்துவங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுத் தனி நபர்கள் தாளிக்கப்படுகிறார்கள்.

தனித்துவம் பேணும் கல்கிக்கு அது தேவையில்லையே. இந்தியா முழுவதற்குமான ஓர் ஊடகக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். தனிமனிதனின் மனம் - மானம் இரண்டுக்கும் அதில் பாதுகாப்பு வேண்டும்.

பெரும்பாலும் செய்திகளுக்கு ஒரு வாரத்துக்கு மேல் உயிரில்லை. அச்சடித்த பொய்கள் அழிந்தே போகும். என் வருத்தத்தை நம்பிக்கையில் துடைத்துக் கொள்கிறேன்.

கல்கியின் வாசகனாய் என்றுமிருப்பேன்.

மாறாத அன்புடன்

வைரமுத்து

20 3 2007





அயர்லாந்தும்

இரண்டு பக்கங்களில் ஆறு அணிகளை அடக்கிப் பொட்டலமாக மடிக்க வேண்டும் என்பதால் சென்ற வாரம் அயர்லாந்து அணியை ஒரே பாராவில் பொட்டலம் கட்டினோம். ஒரே வாரம். அயர்லாந்து வீரர்களின் பெயரும் முகமும் ரசிகர்கள் மனதில் நுழைந்து விட்டன. முதல் ரவுண்டில் பாகிஸ்தானின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்து சூப்பர் எட்டில் ஜம்மென்று ஓர் இடத்தையும் பிடித்து விட்டது. இப்போது அயர்லாந்துக்குத் தாராளமாக இடம் கொடுக்கலாம் அல்லவா!

நின்ற வரைக்கும் பெருஞ்சுவராக இருந்த பாகிஸ்தான், விழுந்த அன்று குட்டிச் சுவர். பதினொரு அயர்லாந்து வீரர்கள் செய்த காரியம் அல்ல இது. மூன்று இளம் பெண்கள்!

வனேசா, ஜெரால்டின், மேக் என்பவை அவர்களது பெயர்கள். வயது எயிட்டீன் ப்ளஸ். அயர்லாந்து கண்மணிகள். பாகிஸ்தான் எந்தத் திசை என்றுகூட இவர்களுக்குத் தெரியாது. ஜான்ஸ்டன், ஜெமிப்ரே, டேவ் லாங்க் இந்த மூவரும் ஆஸ்திரேலிய கங்காருக்கள். கிரிக்கெட்டர்கள். கிரிக்கெட் ஆட அயர்லாந்தில் கால் பதித்தவர்கள். கூடவே இந்த மூன்று அயர்லாந்து ஐஸ்கிரீம்கள் மீது கண்களைப் பதித்தனர். உருகத் தொடங்கினர். அடுத்தக் காட்சி... சீதை இருக்குமிடமே ராமர் வாழுமிடம் என்று தத்தம் கேர்ள் ஃப்ரெண்டுகள் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டனர். அந்நாட்டுக் குடிமகன்களாக மாறிப்போனார்கள். இங்கு அவசரமாக கிரிக்கெட் வீரர்கள் தேவை என்று போர்டு மாட்டியிருந்த அயர்லாந்து கிரிக்கெட் ஆபீஸில் பயோடேட்டா கொடுத்து அணியில் இணைந்தனர். மேட்சுகள் ஆடத் தொடங்கி உலகக் கோப்பை வரைக்கும் வந்தனர். இதில் ஜான்ஸ்டன் அயர்லாந்து கேப்டனாகி...

இப்படி எழுதப்பட்டிருக்கிறது பாகிஸ்தானின் விதி.

ரக்பி விளையாட்டு என்றால் மட்டும்தான் அயர்லாந்து மக்கள் சோறு தண்ணியைத் தியாகம் செய்வார்கள். நமக்கு ஸ்குவாஷ்போல அவர்களுக்கு கிரிக்கெட் அலர்ஜி. இப்போது டிரான்சிஸ்டர்கள்

மூன்று பெண்களும்...



விற்பனையில் ஏற்றம், செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தி என்று ரக்பி இடத்தை கிரிக்கெட் நிரப்பிக் கொண்டிருக்கிறதாம். அயர்லாந்து வீரர்களுக்கு பூஸ்ட், ஹார்லிக்ஸ் எல்லாம் அவர்கள் ரசிகர்கள்தான். "கௌரவம்தான் இத்தனை நாட்களாக நாங்கள் எதிர்பார்த்தது" என்கிறார் அணி கேப்டன் ஜான்ஸ்டன்.

• டிராவிட்



பலமான ஓர் ஆசிய அணியை வீட்டுக்கு அனுப்பியதன் மூலம், கால்பந்து போல கிரிக்கெட்டிலும் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் கோலோச்சும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை விளையாட்டாக அல்லாமல் சீரியஸாகவே உணர்ந்திருக்கிறது அயர்லாந்து.

எல்லாம் சரி, இந்தியா? பூசணிக்காய் போன இடத்தை விட்டுவிட்டு கடுகு துழாவும் காரியம் நடந்து கொண்டிருக்கிறது. முதலில் இந்திய அணி புளூ சொக்கா போட்டு ஆடுவதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள் வர்ண ஆராய்ச்சியாளர்கள்.



நீலம் என்றால் குளுமை என்று அர்த்தம். வீரமே உடம்பில் ஒட்டாது என்பது அவர்கள் வாதம். ஹிட்லர் போருக்காக வடிவமைத்த சீருடையில், சிவப்புப் பட்டையில் ஸ்வஸ்திக் சின்னத்தைப் பொருத்தினார். சிவப்பு சொக்கா போட்டு ஆடும் மேற்கிந்திய வீரர்கள் எந்நேரமும் நரம்பு துடிக்க ஆடுவதன் ரகசியம் இதுதானாம்! மஞ்சள் நிறம் போடும் ஆஸ்திரேலியாவை நீண்ட நேரம் எதிர்கொள்ள முடியாமல் எதிராளிகள் தடுமாறுவார்களாம். இதுபோல எண்ணங்களின் குணாதிசயங்களை அடக்கி, கிறுகிறுக்க வைக்கிறார்கள். ஆஸ்திரேலியாவுக்கு நீலச் சொக்காவும் இந்தியாவுக்கு மஞ்சள் சொக்காவும் மாற்றிக் கொடுத்து ஆடச் சொல்ல வேண்டும். அப்போது சாயம் வெளுக்கும்.

- ச.ந.கண்ணன்

கல்யாணப் பரிசு

கல்கி 4.3.2007 இதழில் 'கல்யாணப் பரிசு'ப் போட்டி வைத்திருந்தோம். இதில் தம்பதிகளாகப் போகும் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு அசத்தியிருக்கிறீர்கள். அவர்களில் ஐந்து ஜோடிகளை மட்டுமே தேர்ந்தெடுப்பது சவாலாகத்தான் இருந்தது. என்ன செய்வது? பரிசு ஐந்து பேருக்கு மட்டுமே என்பதால், அந்தச் சவாலில் இறங்கினோம். பரிசு பெற்ற ஜோடிகளுக்கு மட்டுமின்றி, பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



* தவமணி * அருள்குமார்



* வியாகத் அலி



* ஷர்மிளா பானு

கன்னித்தீவு

உறவுகள் தொடர்கதை!

மார்ச் இருபத்தெட்டாம் தேதி கெட்டிமேளம் முழங்க சீனிவாசனைக் கரம் பிடிக்கப் போகும் சித்ரா, சென்னையைச் சேர்ந்தவர். பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். இவரைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்த பிறகுதான் மாப்பிள்ளையின் அண்ணி இவர்களுக்கு நெருங்கிய உறவினர் என்பது தெரிந்திருக்கிறது. ஸோ, உறவுகள் தொடர்கதையாகியுள்ளது. இந்த உறவுகள் 'கன்னித் தீவு' போல் வளர்ந்துகொண்டே போக வாழ்த்துவோம்.

தலையாட்டி பொம்மை!

அலங்காரத் தட்டுகளுக்குப் பெயர் பெற்ற தஞ்சாவூரைச் சேர்ந்தவர் ஷர்மிளா பானு. இவரது வாழ்க்கைத் துணையாகப் போகும் வியாகத் அலி திருச்சியைச் சேர்ந்தவர். துபாயில் பணிபுரிகிறார். இவர்களது திருமணம் ஏப்ரல் 29-ல் நடக்கிறது. தஞ்சாவூரில் நிச்சய தாம்பூலம் நடந்தபோது, "எங்களுடைய பையன் எப்படி இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?" என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்டிருக்கிறார்கள். உடனே ஒரு பெருசு "எங்க ஊரில் பிரபலமானது தலையாட்டி பொம்மைங்க'' என்று குசும்புடன் சொல்ல, அங்கே சிரிப்பலை எழுந்ததாம்.

பார்க்காமலேயே ஓகே!

சென்னையில் சாஃப்ட்வேர் கம்பெனியில் பணிபுரியும் ரம்யாவின் சொந்த ஊர் கோயம்புத்தூர். அவர் மனத்

* சித்ரா * சீனிவாசன்







* நவநீதகிருஷ்ணன் * ரம்யா

தில் 'ஹார்டுவேராக' நுழைந்துவிட்ட நவநீதகிருஷ்ணன் இருப்பது பெங்களூரில். பெண் பார்க்க முடிவு செய்த தினத்தில் நவநீதகிருஷ்ணன் அலுவலக வேலையாக ஆஸ்திரேலியாவில் இருந்திருக்கிறார். அங்கே இருக்கும் ரம்யாவின் பெரியப்பா மகன் குடும்பத்தைச் சந்தித்து, அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து அதை ஈமெயிலில் அனுப்பியிருக்கிறார். இங்கே ரம்யா வருங்கால மாமனார், மாமியாருடன் சேர்ந்து

கல்யாணம்!

புகைப்படம் எடுத்து ஆஸ்திரேலியாவுக்கு அனுப்ப... அப்புறமென்ன? டேட்தான்! இவர்களின் திருமண நாள் மே 4.

முத்தும் சந்திரனும்!

முத்துலெட்சுமிக்குச் சொந்த ஊர் அருப்புக்கோட்டை. அந்த முத்தை மே இருபத்து மூன்றாம் தேதி சொந்தமாக்கிக் கொள்ளப் போகிற சந்திரசூடன் சிவகாசிக்காரர். கார் டிரைவராகப் பணி புரிகிறார். எளிய குடும்பங்கள். நிச்சயதாம்பூல நிகழ்ச்சியின்போது நூற்றைம்பது பேருக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்க, வந்திருந்தவர்களின் எண்ணிக்கையோ இருநூற்றைம்பது. கிராமம் என்பதால் திடீரென மின்தடை ஏற்பட்டு பெட்ரோமாக்ஸ் விளக்கையேற்றி வைத்திருக்கிறார்கள். வெளியே மழை வேறு! இத்தனையையும் சமாளித்து சுபமாக, சுகமாக நிச்சய தார்த்தம் முடிந்திருக்கிறது.

தமிழைத் தேடி...

சேலம் கொண்டலாம்பட்டியைப் பூர்வீகமாகக் கொண்டவர் அருள்குமார். சென்ற தலைமுறையில் அவரது குடும்பம் டெல்லி சென்றுவிட்டது. அருள்குமார் பிறந்தது, படித்தது எல்லாமே அங்கே தான். இப்போது பஞ்சாப் மாநில ரயில்வேயில் பணிபுரிகிறார். 'மணந்தால் தமிழ்ப் பெண்' என்ற கொள்கையுடன்





* முத்துலெட்சுமி * சந்திரசூடன்

தவமிருந்தவர், இப்போது கரம்பிடிக்கப் போவது சேலத்தைச் சேர்ந்த தவமணியை. பெண் பார்க்கும் தினத்தில் தவமணிக்கு வண்ண வண்ணக் கனவுகள். கொஞ்சம் குண்டாய், அளவான உயரத்துடன். மாப்பிள்ளையைக் கற்பனை செய்து வைத்திருந்தார். ஆனால், வந்து நின்ற அருள்குமாரோ ஒல்லி, அமிதாப் உயரம். அதனாலென்ன? கண்ணும் கண்ணும் நோக்க... கல்யாண மேளம் கொட்டப் போவது ஜூன் பத்தாம் தேதி.

- யுவா

எம்.எல்.ஏ. தங்கவேலு, அடுத்த தேர்தலுக்குப் பிறகும் எம்.எல்.ஏ.வாக நீடித்து, கட்சியும் எந்தப் பிரச்னையுமின்றி ஆட்சியமைக்குமானால் கண்டிப்பாக அமைச்சராகிவிடப் போகிறார் என்று பேட்டையில் பேசாத வாய் கிடையாது. கட்சி பேப்பரில் வாரம் ஒருமுறையாவது கண்டிப்பாக அவர் கைகூப்பிய விளம்பரம் வெளியாகும். எட்டு காலம், பன்னிரண்டு சென்டிமீட்டர் அளவுக்கு இடமெடுத்து வாழ்த்தப் பணம்? இரண்டு பெட்ரோல் பங்குகளும் ஆறு ஒயின் ஷாப்புகளும் போதாது? தவிர, தேனிக்குத் தெற்காக அம்மாபட்டியைத் தொட்டுக்கொண்டு அவருக்கு ஒரு இருநூறு, இருநூற்றைம்பது ஏக்கரில் ஒரு எஸ்டேட் இருப்பதாகச் சொல்வார்கள். 'மானம் பாத்த பூமில என்ன பெருசா வௌஞ்சிரப் போவுது? நம்ம சொந்தக்காரப் பையன் ஒருத்தன் அங்க இருந்து பாத்துக்கிடுறான். அவனுக்கு ரெண்டு வேளை கஞ்சிக் காச்சேன்னு களுத, வாங்கிப் போட்டு வெச்சேன்' என்பார்.

ரசீது நோட்டுடன் யார் வந்தாலும் ஐநூற்றி ஒரு ரூபாய், கூழ் ஊற்றும் திருவிழா என்றால் ஐயாயிரத்தி ஒரு ரூபாய், ஒரு பொதுக் காரியம் என்றால் முதல் வரிசையில் உட்கார்ந்து, திரும்பிப் பார்க்காதவர்களுக்குக்கூட இரு கரம் கூப்பிய வணக்கம் என்று பிராந்தியத்தில் அவர் ஒரு நிரந்தரப் பிரபலம். இரண்டு முறை எதற்கோ கட்சி சார்பில் சிறை சென்றிருப்பதாகச் சொல்வார். தலைவரின் நம்பிக்கைக்கு உரியவர். தவிர, ஒன்றிரண்டு அமைச்சர்களுக்கு வலக்கரம் மாதிரிச் செயல்படுபவர். சரித்திரம் இருட்டடிப்பு செய்தாலும் சமகாலம் சாதகமாகத்தான் இருக்கிறது.

ஆனால், எதற்காகத் தன்னைக் கூப்பிட்டு அனுப்பியிருப்பார்? முன்பின் அறிமுகம் கிடையாது. பெயர் தெரிந்திருக்கக்கூட நியாயமில்லை. சில பொதுக்கூட்டங்களில் அவர்கள் சில உத்திகளைக் கையாள்வார்கள். முத்துராமன் ரசித்திருக்கிறான்.



கொசு

"நாஞ்சொல்றது சரியில்லே, தப்புன்னு யாரானா ஒருத்தர் சொல்லுங்க பாக்கலாம்? அந்தா... உக்காந்துக்கினு இருக்குறாரே ராமசாமி... அவரக் கேட்டுப் பாருங்க... சொல்லு ராமசாமி... ஒனக்குத் தெரியுமில்ல? கேளுங்கப்பா... இதுல என்னா வெக்கம்? அந்தா, அங்க... அங்க

12

வெள்ள ஷர்ட்டு போட்டுக்கினு இருக்கறது.... லே... நம்ம சுப்ரமணிதானே நீயி? நீ சொல்லேம்பா...''

நூற்றுக்கணக்கான மனித உடல்களால் நிரம்பிய மைதானத்தில் எப்போதும் உண்டு. ஆயிரக்கணக்கான ராமசாமிகள் மற்றும் எண்ணிக்கையிலடங்கா சுப்பிர மணிகள் தன் பெயரைத் தலைவர் மைக்கில் உச்சரித்ததும் எழும் உத்வேகத்தில்



எழுந்து நின்று வாழ்க, வாழ்க என்று கத்தும்போது எழும் உணர்ச்சி, கூட்டத்தின் ரத்த நாளங்களில் கலந்து நிறையும். ஆனால் ஒருபோதும் எந்த ராமசாமி, எந்த சுப்பிரமணி என்று யாரும் கேட்டுவிட முடியாது. இன்னொரு கூட்டத்துக்குப் போக வேண்டியிருப்பதால் தலைவர் தம் சிற்றுரையை அத்துடன் முடித்துக் கொள்ள வேண்டிய துர்பாக்கிய சூழல் ஏற்பட்டு விடும்.

முத்துராமனுக்கு அதுதான் வியப்பு. தங்கவேல் அண்ணன் சரியாகச் சொல்லி யனுப்பியிருக்கிறார். ஆத்தங்கரைக் குப்பத்து முத்துராமன், தமிழரசனின் மூத்த மகன். டைலராக இருப்பவன். பெரிய கம்ப சூத்திர மில்லை. யாராவது சொல்லியிருப்பார்கள். வட்டத்தின் காசில் குப்பத்தைச் செப்பனிடும் வாலிபன். அண்ணன் ஏன் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. கண்டிப்பாகப் பொது நல நோக்கத்தைத் தாண்டி ஏதாவது ஒரு புனிதமான நோக்கம் இருந்தே தீர வேண்டும். என்ன ஏது என்று கொஞ்ச விசாரிக்க வேண்டியது ஜனநாயகக் கடமை.

வேறென்ன இருந்து விட முடியும்? முத்துராமன் யோசித்தான். ஒருவகையில் இதைத்தான் எதிர்பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றியது. எம்.எல்.ஏ. தங்கியிருந்த அபீத் காலனி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து, தான் வந்திருக்கும் விஷயத்தை வாசலில் இருந்த பையனிடம் சொல்லி அனுப்பி விட்டுக் காத்திருந்தான்.

அது தங்கவேலு அண்ணனின் சகலை வீடு. முத்துராமனுக்குத் தெரியும். கடந்த தேர்தல் நேரத்தில் அங்கு வைத்துத்தான் பகுதிக்கான பணப்பட்டுவாடா செய்யப் பட்டது.

அவனுக்கு அப்போது பணத்தைத் தொட்டுப் பார்ப்பதில் ஆர்வம் இருந்த

பா.ராகவன்

தில்லை. தலைவரை அருகே பார்த்து வணக்கம் சொல்லி, பதில் வணக்கம் பெற முடிந்தால் பெரிய விஷயம் என்று நினைத்திருந்தான்.

அதே வீடுதான். அதே முத்துராமன்தான். அதே தங்கவேல் அண்ணன்தான். ஆனால், வந்திருக்கும் காரணம் வேறு. தவிரவும் ஓர் அழைப்பின் பேரில் வர நேர்ந்திருக்கிறது. இது விசேஷம். எதிர்பாராதது. ஏதாவது நடக்கும். நடக்கத்தான் வேண்டும்.

'அண்ணன் உள்ள வரச் சொல்றாரு'. குரலைப் பின்பற்றி அவன் உள்ளே போனான்.

விசாலமான வரவேற்பறை. பெரிய பெரிய அல்சேஷன் நாய்கள் மாதிரி அறையெங்கும் கனத்த சோபாக்கள் வியாபித்திருந்தன. நடுவே விரித்திருந்த பூப்போட்ட கம்பளத்தின் மீது ஒரு டீப்பாய். அதன் கண்ணாடி முகத்தின் மேல் கட்சிப் பத்திரிகை. மூலைக்கொரு அறை. நடு வீட்டில் நட்ட கொய்யாமரம் மாதிரி உயரே எழுந்துபோன மாடிப்படிகள். பணத்தின் செழுமையில் பளபளத்த சாண்டலியர் விளக்குகள்.

"வா முத்து... நல்லாருக்கியா?" என்றார் எல்.கே.ஜி.யிலிருந்து +2 வரை ஒரே ஸ்கூலில் படித்த பாவத்துடன்.

"இருக்கேண்ணே. ஆத்துப் பக்கம் போனேன். நீங்க வரச் சொன்னீங்கன்னு ஆளு வந்து சொன்னதுல அப்புடியே ஓடியாந்துட்டேன். டிரெஸ்ஸு கூட மாத்தல."

"ஊரு முழுக்கத் தீவாளிக்குத் துணி தச்சிக் குடுப்ப. என்னிக்கானா உனக்குன்னு ஒண்ணு ஆசைப்பட்டுத் தச்சிருப்பியா? உக்காரு. சரி என்ன சாப்புடற?"

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்ணே. உங்களப் பாத்ததே சந்தோசமாயிருச்சி."

"இருக்கட்டும். தங்கச்சி, நம்ம முத்துராமனுக்கு ஒரு காபி எடுத்தா..." என்றார் உள்ளே பார்த்து.

காபி வந்து, அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை எம்.எல்.ஏ. பேசாதிருந்தார். முடித்துவிட்டு வைத்ததும், "குடிச்சிட்டியா? சரி, ஆரம்பிப்பம். சிங்காரம் என்னா சொல்றான்? அடுத்த எலக்சன்ல எம்.எல்.ஏ. ஆயிரணுமாமா? உங்க றகுப்பத்துல என்னமோ சமுதாய பொரச்சியெல்லாம் பண்றானாம்?" என்று முதல் வரியில் விஷயத்துக்கு வந்தார்.

முத்துராமனுக்கு அதிர்ச்சியாக ஏதுமில்லை. ஆனாலும் சில வினாடிகள் தயங்கினான். இப்போது பேசுகிற ஒவ்வொரு சொல்லும் முக்கியம் என்று தோன்றியது. ஆகவே, ஜாக்கிரதையாக "தெரியலண்ணே. அடிக்கடி போயிப் பாப்பம். ரொம்ப கஸ்டப்படுறோம், எதுனா செய்ங்கண்ணேன்னு கேப்போம். சர்தாண்டா செய்யிறேன், செய்யிறேன்னு வாரு. என்னா தோணிச்சோ, இப்பம் வந்து ரோடு போட்டுத் தாரேன், கொசு மருந்து அடிக்கறேன்னு செய்யிறாரு. எல்லாம் முடிஞ்சதும் ஒரு நற்பணி மன்றம் மாதிரி ஆரம்பிச்சி, நம்ம தலைவரு பேரு போட்டுக் கல்லு தொறக்கணும்னு சொன்னாருண்ணே."

"ஓஹோ..."

ஒரு கணம் யோசித்துவிட்டு, "நீங்க சொல்லித்தான் செய்யிறாருன்னு நாங்க நெனைச்சிக்கிட்டிருக்கம்ணே..." என்றான்.

"நாஞ் சொல்லீயா? நீ வேற! பாரு, இந்தாளு செய்யறதெல்லாம் கார்ப்பரேசன் விதிமுறைங்களுக்கு எதிரா போவுது. கமிசனரு என்னாண்ட சொல்லி ரொம்ப வருத்தப்பட்டாரு, முத்து."

"அடடா..." என்றான் பட்டும் படாமல்.

"நான் தலைமையகத்துல விசயத்தச்

விடுபடுமா தமிழ் சினிமா?

'மதுரை வீரன்' - அன்றைக்கு எம்.ஜி.ஆர். நடித்து சூப்பர் ஹிட்டான படம். இன்று 'ஜித்தன்' ரமேஷ் நடிக்க, அதே டைட்டிலில் வரவிருக்கிறது. 'ரீமேக்கா?' என்றால், உடனே மறுக்கிறார் டைரக்டர் வின்சென்ட் செல்வா. "ஜித்தன் மூலமா ரமேஷுக்கு அறிமுகம் கொடுத்தேன். மதுரை வீரன் மூலமா அவரோட அடுத்த பக்கத்தைக் காட்டப் போறேன்" என்கிறார். இப் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த அனைவரும் புகழ்ந்தது ரமேஷின்

சொல்லிட்டேன். இந்த மாதிரி ஸ்டண்டால பின்னால எதுனாச்சும் ப்ராப்ளம்னு வந்தா நான் பொறுப்பில் லன்னிட்டேன். செலவு பண்றது முழுக்க கள்ளப் பணம். மாட்னா அப்பன் தாவு தீந்துரும். அந்தாளுக்குக் கட்சி மேலிடத்துல நல்ல பேரு இல்லய்யா... இருவது வருசமா இருக்காரேன்னு பாத்தா ஒரு வணக்கம் போடு



• 'மதுரை வீரன்' படத்தில் ரமேஷ், சலோனி

நடனத்தைதான். ஜித்தனில் தொடங்கிய அவரது அட்டகாச நடனம், மதுரை வீரனிலும் தொடர்கிறது. இப் படத்திலும் ஒரு குத்துப் பாட்டுக்குப் பட்டையைக் கிளப்பியிருக்கிறார்.

விழா சென்னை சத்யம் தியேட்டரில், இருட்டில்தான் நடந்தது - அடிக்கடி மின்சாரம் போய் வந்ததால், இதைக் குறிப்பிட்டுப் பேசிய இயக்குனர் ஜனநாதன், தனது ஈ படத்தின் போதும் இப்படித்தான் நிகழ்ந்தது என்றும், 'ஆனால் ஈ மிகப் பெரிய வெற்றி பெற்றது. எனவே தேவையற்ற செண்டிமெண்ட்டிலிருந்து தமிழ் சினிமா விடுபட வேண்டும்' என்றார்.

''ஆர்.பி.சௌத்ரி தமது மகன்களை (ஜீவா, ரமேஷ்) வைத்துப் படமெடுக்கத் தொடங்கிவிட்டதால் பல இயக்குநர்களுக்கு இப்போதெல்லாம் வாய்ப்புக் கிடைப்பதில்லை. தொடர்ந்து அவர் படம் தயாரிக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார் பாக்யராஜ்.

விழாவில் அதிகம் பேசாமலேயே அனைவரையும் வியந்து பார்க்க வைத்தவர் விஜய். எதற்கு அழைக்கப்பட்டோம் என்று தெரியாமலேயே ஓரமாய் உட்கார வைக்கப்பட்டவர்கள் இருவர், நடிகைகள் அபர்ணா மற்றும் சுவாதி.

- ரேவதி

வாங்க. அத்தோட செரி.''

முத்துராமன் உஷாரானான். மிகவும் கவனமாகக் குரலைத் தாழ்த்தி, ''இதெல்லாம் தெரியாதாண்ணே. நம்ம தொகுதில உங்க ஒருத்தரவிட்டா வேற யாருக்குமே செல்வாக்குக் கிடையாதுண்ணே. போன எலக்சன்ல உங்களுக்குப் பதிலா வேற யாருக்கானா டிக்கெட் குடுத்திருந்தாங்கன்னா டெபாசிட் தேறியிருக்குமா? உங்க மூஞ்சிக்குத்தாண்ணே எல்லாம்'' என்றான்.

சட்டென்று எம்.எல்.ஏ.வின் முகம் ஒரு பூனைப்போல் மலர்ந்துவிட்டது. ''பாரு. படிக்காதவன் ஒனக்குத் தெரியுது. அந்தப் பன்னாடைக்குத் தெரியல. ஒரு குப்பத்துல கொசு மருந்தடிச்சிட்டா அடுத்த எலக்சன்ல டிக்கெட் கிடைச்சிரும்னு நினைக்கறான்.''

முத்துராமன் தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

''தபாரு முத்து... உங்கப்பா காலத்துலேருந்து... ஏன் அவங்கப்பா காலத்துலேருந்து உங்க குடும்பத்த எனக்குத் தெரியும். நீதான் இதுவரைக்கும் என்னாண்ட வராம இருந்துட்ட. இப்ப சொல்றேன், சிங்காரம் சங்காத்தம் ஒனக்கு வேணாம். அவன் என்னா செலவு பண்றான்ற வெவரத்த மட்டும் சப்ஜாடா என்னாண்ட வந்து சொல்லிரு. மத்தத நான் பாத்துக்கறேன். அது செரி... நீ கார்ப்பரேசன் எலக்சன் வந்தா நிப்பியா? நான் டிகிட் வாங்கித் தரவா? இன்னும் மூணு மாசத்துல வந்துரும்யா...''

முத்துராமன் மனத்துக்குள் துள்ளிக் குதித்தான்.

(தொடரும்)



பட்டியலில் சிக்கும் பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள்!

வீரபாண்டி ஆறுமுகம் பற்றிய பா.ம.க. எம்.எல்.ஏ.க்களின் கடுமையான விமர்சனத்தை பா.ம.க. மூத்த பிரமுகர்களே கண்டிக்கிறார்கள். "தேர்தலின்போது சீட்டுகள் ஒதுக்கீடு விஷயத்தில் தி.மு.க.வில் எங்களுக்கு ஆதரவாகப் பேசுபவர் வீரபாண்டியார் மட்டுமே. தி.மு.க.விலுள்ள மற்ற வன்னியப் பிரமுகர்கள் எங்களைக் காலி செய்வதிலேயே குறியாய் இருப்பவர்கள்" என்கிறார் மூத்த பா.ம.க. பிரமுகர். இதற்கிடையில் பா.ம.க. விமர்சனத்தை அலட்சியப்படுத்துவது என்று வீரபாண்டியார் முடிவெடுத்திருக்கிறார். இருந்தும் சட்டமன்றத்தில் பிரச்னை கிளப்பப்பட்டால், தக்க பதிலடி கொடுப்பதற்கு வசதியாக அந்த மூன்று பா.ம.க. எம்.எல்.ஏ.க்களும், அரசு மூலமாக என்னென்ன காரியங்களைச் 'சாதித்து'க் கொண்டார்கள் என்ற பட்டியல் எடுக்கப்பட்டு வருகிறதாம்."

"**அ**ண்ணா பிறந்த ஊரிலேயே கட்சி காணாமப் போயிடும் போலிருக்கு" என்று காஞ்சிபுரம் உடன்பிறப்புகள் ரொம்பவும் கவலையாக இருக்கிறார்கள். காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பா.ம.க.வைச் சேர்ந்தவர்கள். நகராட்சித் தலைவர் அ.தி.மு.க. ஒன்றியத் தலைவர் பா.ம.க. ஆதரவு சுயேச்சை. இப்படி முக்கியமான பதவிகள் மாற்றாரிடம் இருக்க, உடன்பிறப்புகள் விழித்து நிற்கிறார்கள் . அரசின் இலவச திட்டங்களைத் துவக்கி வைக்க ஊர் ஊராகச் செல்லும் கலைஞர், அண்ணா பிறந்த காஞ்சிபுரத்துக்குத் தேர்தல் பிரசாரத்தின்போதும் அதன் பிறகு இதுவரையிலும் செல்லவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சுயமரியாதையும், சுதந்திரமான எண்ணங்களும் கொண்டவருமான மைலாப்பூர் எம்.எல்.ஏ. எஸ்.வி.சேகரால், கட்சியில் நடக்கும் உட்கட்சிப் போராட்டங்களைச் சமாளிக்க முடியவில்லை என்கிறார்கள். தன் தரப்பு நியாயங்களை ஜெயலலிதாவிடம் நேரில் சொல்ல முடிவதில்லையாம். இந் நிலையில், தமது தொகுதியைத் தவிர வேறெந்தப் பகுதிகளுக்கும் கட்சி நிகழ்ச்சிகளுக்கு அழைக்கக் கூடாதென்று வாய்மொழி உத்தரவு ஒன்று இருப்பதாகச் சொல்கிறார்கள் கட்சிக்காரர்கள்.

- சஞ்சயன்



விமர்சனம்

முனி

'சந்திரமுகி' லக லக டைப்னா, அதைப் பின்பற்றி வந்திருக்குற 'முனி' 'கலகல' டைப். பயந்தாங்கொள்ளி லாரன்ஸ் உடம்புல 'முனி' ராஜ்கிரண் பேய் முகாமிட்டு, தன்னைக் கொன்னவங்கள பழிவாங்கற கதை. நம்மால எவ்வளவு சிரிக்க முடியுமோ அவ்வளவு சிரிக்க வைக்கறாங்க. லாரன்ஸோட திறமை பிரமிக்க வைக்குது. திருஷ்டி சுத்திப் போடுங்கப்பு. பயம் பயம்னு அவர் அலர்றதும் அவர் குடும்பமே அதுக்கு அல்லோலகல்லோலப்படறதும் காமெடி பஜார். கிகில்லயும் திணற அடிச்சிருக்கார் மனுஷன். முனி பிடிச்சதும் அவரோட மாடுலேஷன் மெரட்டுது. நடனத்திலும் இந்தக் கறுப்பு ஹீரோ சென்டம் வாங்குறார்.

ராஜ்கிரண் பாத்திரப் படைப்பு கொஞ்சம் மிகைன்னாலும் சொல்லப்பட்ட விதத்துல நல்லா எடுபட்டிருக்கு. நண்பனுக்காக உயிர் விடறப்போ கண் கலங்க வச்சிடுறார். ஹீரோயின் வேதிகா, முருங்கை மரம் மாதிரி ஒடிஞ்சு விழட்டுமாங்கற ரேஞ்சுல இருக்காரு. தாயத்துக் கட்டி புருஷனைக் காப்பாத்த பயன்பட்டிருக்கார். கோவை சரளா, வினுசக்ரவர்த்தி கூட்டணி அட்ரா... அசத்தல். தண்டபாணி பாசக்கார வில்லனா வந்து மோசம் செஞ்சுடறாரு. முனியடிச்சு அவர் பதறும்போது செம லகலக!

ரமேஷ் கண்ணாவோட வசனங்கள் சர்க்கரை தடவி எழுதப்பட்டிருக்கு. பரத்வாஜோட இசையில இளமைத் துள்ளல் அதிகம். 'அஸ்லா புஸ்லா', 'வர்றாண்டா முனி'ன்னு கலக்கி எடுக்கறார். மிரட்டும் பின்னணி இசைக்கு' கைகுலுக்கியே ஆகணும்.

வடிவேலு மாதிரியே வந்து காமெடி பண்ற டேவிட் எடுபடல. லாரன்ஸ் வீட்டுக்குள்ள வேலைக்காரியும் கிழவியும் மிரட்டலா திரியறது நம்பும்படியா இல்ல. பல காட்சிகள்ல இப்படி ரசிகனோட தலைல பூக்கூடையே வைக்கப்பட்டாலும், தொடர்ந்து காமெடி குண்டா போட்டுத் தாக்கி எல்லாத்தையும் மறக்க வெச்சிடுறார் லாரன்ஸ்.

முனி - காமெடி எக்ஸ்பிரஸ்!

- லஜ்ஜாவதி



தராசு

● **ரேவதிப்ரியன், ஈரோடு**

? 'இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு பெண் ஏன் வரக்கூடாது?' என்று கனிமொழி கேட்கிறாரே?

! ஏன் வரக்கூடாது? தாராளமாக வரலாம். ஆனால், பெண் என்பதற்காக வரவேண்டாம்;

• **சூடு!**



'மொழி'க்கு ரசிகர்கள்

அந்த உயர் பதவியை வகிக்க சகல விதங்களிலும் தகுதி பெற்றவர் என்கிற முறையில் வரட்டும்.

● **க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி**

? தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொள்வது தொடர்கிறதே?

! இலங்கை - இந்தியக் கடற்படைகள் கூட்டாகச் சேர்ந்து ரோந்துப் பணியாற்றலாம் என்ற இலங்கை அரசின் யோசனையை முதலில் வரவேற்ற கருணாநிதி, பிறகு பல்டி அடித்துள்ளார். கூட்டாக ரோந்து நடத்தினால், அப்பாவி மீனவர்களைக் காப்பதுடன், புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவோரையும் இனம் காண முடியும்; தடுக்க முடியும். ஆனால், "கூழைக் குடிக்க வேண்டும்; புஸ்தி மீசை நனையக் கூடாது" என்றால் சாத்தியமில்லை.

● **டி.ஜி.எஸ்., சென்னை ★**

? அந்நிய நாட்டுப் பெண்கள் கற்பை மதிக்கிறார்களா?

! ஏன் மதிக்கவில்லை! மதிப்பதால் தானே இன்று அமெரிக்கா ஸிலிகான் வேலியில் இந்தியரான ஆனந்த் ஜான் மீது பல பாலியல் வழக்குகள் பதிவாகியுள்ளன! ஃபேஷன் வடிவமைப்பாளராம் ஆனந்த். பாலியல் குற்றங்களையும் ஒரு ஃபேஷனாகக் கருதிவிட்டார் போல!

● **டி.கே.சுப்பிரமணியன், திருபரங்குன்றம்**

? 'மொழி'க்கு ரசிகர்கள் வரவேற்பு எப்படி உள்ளது?

! 'ரசிகர்கள் விரும்புவதால் தான் இப்படிக் கொடுக்கிறோம்' என்று தங்களது குப்பைகளுக்கு விளக்கம் தருகிற கோடம்பாக்கத்து மேதாவிகளுக்கு, ரசிகர்கள் அவ்வப்போது 'மொழி' போன்ற படங்களின் வெற்றி மூலம் சூடு கொடுப்பதுண்டு. இப்போதும் அதுதான் நடந்துள்ளது.

● **குவளை எழில், சென்னை - 92**

? மத்திய அமைச்சர் அன்புமணிக்குப் பிடித்தவை மூன்று PC-க்களாம் - பர்சனல் கம்ப்யூட்டர், பிளானிங் கமிஷன், ப.சிதம்பரம் - இது எப்படி இருக்கு?

! இந்த மூன்று PCக்களும் நான்காவது PC - (பப்ளிக் கேர்)யையே நோக்கமாகக் கொள்கிறவரை மகிழ்ச்சிதான்!


● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

? நடிகர் கமல்ஹாசனுக்கு 'வாழும் வரலாறு' விருது வழங்கப்பட இருப்பது பொருத்தம்தானே?

! அவர் சார்ந்துள்ள துறையில் அவர் வரலாறு படைத்திருப்பது உண்மைதான். அந்த அளவில் விருது வழங்குவதும் பொருத்தம்தான்.



* பல்டி!



* ரூ லேட்!



* கண்ணீர்!

● ஜி.ஜெயராமன், கூத்தலூர்

? கலெக்டர்களும் வருவாய்த் துறை அதிகாரிகளும் செல்ஃபோன்களைக் கொஞ்சம் நேரம்கூட ஆஃப் பண்ணக் கூடாது என்று அரசு அறிவுரை கூறியுள்ளதே?

! மொபைல் நம்பர்களை, கேட்போர் எல்லோருக்கும் தர வேண்டும் என்று கூறவில்லையே! மேலும், வேலை நேரத்தில் ஆன் செய்யக்கூடாது என்று அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், நடத்துநர்கள் போன்ற சிலருக்கு அறிவுரை சொல்லலாமே!

● எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

? தனியார் மருத்துவமனை டாக்டர் ஃபீஸ் ரூ.150 - 250 வரை எகிறி நிற்கின்றன. இந்நிலையில், 'டாக்டர்களுக்குப் பணத் தேவை முக்கியமாகப் படக் கூடாது; பாச உணர்வுடன் மக்களுக்குச் சேவை செய்வதே சிறந்தது' என்று அமைச்சர் சிவராஜ் பாட்டீல் சொல்கிறாரே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! நினைப்பது என்ன? "கடவுளே! உடம்புக்கே வரக்கூடாதப்பா!" என்றுதான். சிவராஜ் பாட்டீலுக்கு எல்லாமே இலவசம் (பாச உணர்வு உள்பட) என்றாலும் அவருக்கும் உடம்புக்கு வரவேண்டாம், முருகா!

● அ.பேச்சியப்பன், ராஜபாளையம்

? மத்திய அரசுக்கு ம.தி.மு.க. அளித்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கியது ஏன்?

! மத்திய அரசிலும் தி.மு.க.வின் ஆதிக்கமே மேலோங்கி இருப்பதைக் காலதாமதமாகப் புரிந்துகொண்டதன் பலன்.

● பி.சிவா, பாளையங்கோட்டை

? மாணவியை ஆசிரியர் காதலிப்பது குற்றமாகாது என்று சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளதைப் பற்றி..?

! காதலிப்பது என்பது வயது வந்தோரின் தனி மனித உரிமை என்னும் போது, ஆசிரிய - மாணவக் காதல் எப்படிக் குற்றமாகும்! நேர்மையான காதலாக

வரவேற்பு எப்படி?




* கேள்வி!

நீங்கள் கேட்டவை



• ஆசை!



• நான்காவது பி.சி.!

இருக்கும்வரை சட்டப்படியும் குற்றம் அல்ல; தார்மிக அடிப்படையிலும் குற்றம் அல்ல. பல ஆசிரிய - மாணவத் திருமணங்கள் மகிழ்ச்சிகரமாக, வெற்றிகரமாக நடந்துள்ளன.

● **வைகை வளவன், மதுரை**

? சுப்ரீம் கோர்ட் நீதிபதி லட்சுமணன் குமுறிக் குமுறி அழும் அளவுக்குக் கடிதம் எழுதி அசிங்கப்படுத்தியுள்ளார்களே உ.பி. அரசியல்வாதிகள்?

! அது ஒரு மொட்டைக் கடிதம் என்று நீதிபதி லட்சுமணனே கூறியுள்ளார். அப்படிப்பட்ட கோழைத்தனமான சிண்டு தலைக் கண்டு நீதிபதி பதறி அழுததுதான் ஆச்சர்யமளிக்கிறது. 'இந்த வழக்கில் நீதிபதியாகப் பொறுப்பேற்க மாட்டேன்' என்று மறுத்தது அதிர்ச்சி அளிக்கிறது. நீதிபதிகள் (அதுவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள்) திட சித்தமும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்களாக இருப்பதே நாட்டுக்கு நல்லது.

● **ஜி.எஸ்.பாரதி, அம்மாபேட்டை** ❐

? தருமபுரி பேருந்து எரிப்பு வழக்கில் தண்டனை அறிவிக்கப்பட்ட 25 பேருக்கு உயர்நீதிமன்றம் ஜாமீன் அளித்துள்ளதே - மக்கள் மத்தியில் நீதித் துறையைப் பற்றித் தவறான அபிப்பிராயம் வராதா?

! ஜாமீன் வழங்காவிட்டால், மேல் முறையீட்டில் தங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள் வாதாட வாய்ப்பிருக்கிறது. அப்துல் கலாம் கூறியதுபோல், கிரிமினல் வழக்குகள் இழுத்தடிக்கப்படாமல் வேகமாக நடந்து முடிந்து, இறுதித் தீர்ப்புகள் வெளிவந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே முக்கியம்.

● **நா.முரளீதரன், அம்மையப்பன்**

? விம்பிள்டனில் ஆண் - பெண் சமமான பரிசுத் தொகை பெறுவதைப் பாராட்டும் தராசே, ஏன் பெண்களுக்கு பஸ்ஸில் தனி சீட்டு வேண்டும் என்கிறீர்? அதிலும் சமத்துவம் இருப்பதுதானே நியாயம்!

! அட கிருஷ்ணா! ராமா! முரளீதரா! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறீரே! விம்பிள்டனில் ஆண் செலவிடும் சக்தி, ஆற்றல், சந்திக்கும் உலகத் தரப் போட்டி - எல்லாவற்றையும் பெண் ஆட்டக்காரரும் சந்திக்கிறார். ஆகவே சமமான பரிசு மகிழ்ச்சி தருகிறது. ஓடுகிற பஸ்ஸில் பெண்களுக்கும் முதியோருக்கும் எழுந்து இடம் கொடுப்பது பண்பாடு - அவள் டென்னிஸ் வீராங்கனையேயானாலும்! ●

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஜி.எஸ்.பாரதி
கா/பெ வே.தண்டபாணி,
விபீஷணபுரம், அம்மாபேட்டை,
சிதம்பரம் - 608 001

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
டி.ஜி.எஸ்.,
1, அவுலியன் சாகிப்
3ஆவது தெரு, எல்லிஸ் சாலை,
சென்னை - 600 002.

உஷார் 40

உணவில்லாமல் உயிர் வாழ முடியாது என்பது எத்தனை உண்மையோ, அதே அளவு உண்மை, உணவாலும் உடல் உருக்குலையும் என்பது. குறிப்பிட்ட வயதுவரை நாம் உண்ணும் உணவு அனைத்துமே நமக்குப் பிடித்தமானதாக, நம் உடம்புக்கும் பிடித்தமானதாக இருக்கிறது. குறிப்பிட்ட வயது வரைதான்... வயது ஏற ஏற உணவில் நாம் மாற்றம் கொண்டுவர வேண்டியுள்ளது. குறிப்பாக நாற்பது தொடங்கினாலே உஷாராகிவிட வேண்டும். இல்லையேல் உணவே உடலுக்கு எதிரியாகி விடும் அபாயம் உண்டு. ஏன் இப்படி?

வயது கூடக் கூட உடல் தன் கட்டுப்பாட்டை இழக்கத் தொடங்க, ஜீரண உறுப்புகளின் சக்தியும் குறைய ஆரம்பிக்கிறது. சரி, எப்படி நமது உணவுப் பழக்கத்தை மாற்றியமைத்துக் கொள்வது? ரொம்பச் சுலபம்.

* நேரத்துக்குச் சாப்பிட வேண்டும்.
* குறைந்த அளவு உணவானாலும் சத்து நிறைந்ததாய் இருக்கட்டும்.
* காய்கறிகளுக்கு முக்கியத்துவம் அதிகரிக்கட்டும். அசைவ உணவுகளுக்குத் தடா போட்டால் கூட நல்லதுதான்.
* எண்ணெயில் கவனமாக இருக்க வேண்டும். கண்ட எண்ணெய் கூடாது. கடுகளவு இருந்தாலே போதும்.
* அரிசிச் சாப்பாட்டின் அளவைக் கணிசமாகக் குறைத்துவிட வேண்டும்.
* டயாபடீஸ், பி.பி. இருந்தால் அல்லது நமது பெற்றோருக்கு இருந்தால் உடனடியாக மருந்துவரைச் சந்தித்துப் பின்பற்ற வேண்டிய உணவு முறைக்கு மாறிவிட வேண்டும்.
* நொறுக்குத் தீனியைக் கைவிட்டுக் காட்டினால் அதைவிட வேறு சிறப்பில்லை.
* பழங்கள் போன்ற சிறந்த தோழன் எவருமில்லை. ஆனாலும் நம் உடலுக்கு ஒப்புக்கொள்ளும் பழமா என்பதையும் கவனிக்க வேண்டும்.

- சைதை முரளி

இதைத்தான் சாப்பிடணும்!





சிறப்புச் சிறுகதை

சித்தப்பூ பார்த்த பொண்ணு...

தன் எதிரே கொண்டு வந்து வைத்த 'புரோட்டா'வையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் குமரவேலு...

''என்னலே... புரோட்டாவுல பொண்ணு முகம் தெரியுதோ...''

பொன்பாண்டி கிண்டலடித்தார். தனது அடர்ந்த அரிவாள் மீசையை நீவிய படியே அவனை உற்றுப் பார்த்தார்.

குமரவேலின் முகம் அப்படியொன்றும் சுரத்தாக இல்லை. என்னத்தையோ பறி கொடுத்த மாதிரி... மதியானப் பொட்டை வெயிலில் முனி அடித்த மாதிரி உட்கார்ந்திருந்தான்.

பொன்பாண்டிக்குத் தாங்கவில்லை. இத்தனைக்கும் குமரவேலு, இவருடைய அண்ணன் மகன்தான்.

சித்தப்பாவின் விரல் பிடித்து, விருது நகர் வீதியெங்கும் அலைந்தவன்தான் குமரவேலு... பொட்டல் சந்தைக்குப் போனால் கண்டிப்பாய் சோற்று மிட்டாய் வாங்கித் தரவேண்டும் அவனுக்கு... அவ்வளவு ஏன்... இதோ இந்த பர்மா கடை புரோட்டா, பிரியாணி என்றால் உயிர்த் தியாகம் செய்யக்கூடத் தயார் என்பான் குமரவேலு... பெற்றவர் கத்துவார்...

''ஏலேய் பொன்னு... உன்னால அவனும் கெடறாண்டா... உள்ளே இவன் அம்மா வேலை மெனக்கெட்டு யாருக்காகடா சமைக்கிறா...''

அண்ணனின் சுடு சொற்களைக் கேட்டுக்கொண்டு 'உம்'மென உட்கார்ந்திருப்பார் பொன்பாண்டி... கொஞ்ச நேரம்தான்... அண்ணன் தலை மறைந்தவுடனேயே அண்ணியிடம் ஏதேதோ சொல்லிச் சமாளித்து...

''அண்ணீ... பையன் வளர்ந்துட்டான். அடுத்த வருசம் காலேசுக்குப் போயிடுவான். அங்கேயெல்லாம் வாய்க்கு வக்கணையா கிடைக்காது. ஏதோ ஆசைப் படுதான். நீங்க எதுக்கும் நம்ம வீட்டுல என்ன சமையல்னு சொல்லிடுங்க. நான் அண்ணன்கிட்ட சமாளிச்சிடறேன்...''

அண்ணி - குமரவேலின் தாய் - மென்மையாய்ச் சிரிப்பாள். அவளை ஏமாற்றுவது ரொம்பவும் சுலபம். ஒரு நாள்கூட கணவரை எதிர்த்து ஒரு சொல் சொன்னதில்லை.

பொன்பாண்டி தலையை உலுக்கியபடி குமரவேலுவைப் பார்க்கிறார். அவன் முன் புரோட்டா வைத்தது வைத்தபடி இருக்கிறது...

''சொல்லுடா... எதுக்குத் தயக்கம்... நான் உன்கிட்ட எதையாவது மறைச்சிருக்கேனா... பாவாலி ரோடுல ஒரு பொண்ணுகூடத் தொடுப்புங்கறதைக் கூட உன்கிட்ட சொல்லியிருக்கேன் இல்லே?''

''சித்தப்பூ... எனக்கு... எனக்கு... நீங்க எல்லாரும் பாத்து முடிச்சிருக்கீங்களே... அந்தப் பொண்ணைப் புடிக்கலே சித்தப்பூ...''

''அடப்பாவி... ஏண்டா... பட்டணத்துல உன்கூட வேலை பார்க்கற பொண்ணு எதையாவது பார்த்து வச்சிருக்கியா...''

பொன்பாண்டியையும் மீறி குரல் உடைந்தது.



எதை வேண்டுமானாலும் அவர் தாங்கிக்கொள்வார். குமரவேலு திருமணம்... விருதுநகரில் எஸ்.எஸ்.கே. திருமண மண்டபத்தில் நடக்க வேண்டும்; அதுவும் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்த பெண்ணைத்தான் அவன் மணக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாகவே இருந்தார் அவர்...

“உனக்குப் பொண்ணு இந்த விருது நகர் மண்ணுலதான். இங்கே நீ யார் வீட்டுப் பொண்ணை வேணுமானாலும் சுட்டிக் காட்டி, ‘எனக்கு இவ வேணும் சித்தப்பூ’ன்னு சொல்லு... ஒரு பெரிய பலாப்பழமும், கடலைமிட்டாயுமாப் போய் பொண்ணு பேசிட்டு வந்துடுவேன்...”

பொன்பாண்டி இப்படி அடிக்கடிச் சொல்லும்போதெல்லாம் அவருடைய

அனுராதா ரமணன்

அண்ணன் - குமரவேலுவின் தந்தை உறுமுவார்.

"ஆமா... துரை போய்ப் பேசிட்டு வந்திருவாரு... நல்லா படிச்சுப் பட்டணத்துல கம்ப்யூட்டர் இன்ஜினீயரா மாசம் நாப்பதாயிரம் வாங்குறான் என் மவன். இவனுக்குப் பொண்ணு கேட்டு அருவா மீசையும், மிட்டாய் கலர் சட்டையுமா இவன் போய் நின்னாக்க... நல்லாத்தான் இருக்கும். ஒண்ணும் வேணாம். பொண்ணு பார்த்து, பூ வச்சதுக்கு அப்புறம் இந்த மூஞ்சைக் காட்டலாம்..."

அன்றைக்கு கே.வி.எஸ். பள்ளிக்கூடத் திடலில் பங்குனிப் பொங்கல், பொருட்காட்சிக்குக் கிளம்பியபோது கூட, அண்ணன்காரர் இப்படிச் சொல்லித்தான் தடுத்தார்.

"டேய்... மூணு வருசமா பங்குனிப் பொங்கல் பொருட்காட்சியில குமரவேலுவுக்காகப் பொண்ணு பார்க்கறோம். அவ அவ அலறி அடிச்சிட்டு ஓடுறாளுக..."

"நல்லாயிருக்கே அண்ணே, நீ சொல்றது... உனக்குப் பொஞ்சாதி 'தெய்வப் பிறவி' பத்மினி மாதிரி அவதாரமா வாய்ச்சிருக்கா... எனக்குத்தான் நீ என்னோட ரசனையையே பொருட்படுத்தாம 'படித்தால் மட்டும் போதுமா' ராஜசுலோசனா மாதிரி ஒருத்தியக் கட்டி வச்சிட்டே... குமரு, என்னைப் போல ரசிகன். நான் வருவேன்..."

அடம்பிடித்துக் கொண்டுதான் கிளம்பினார் பொன்பாண்டி. கூடவே தரகு கோவிந்தன் வத்தலும் தொத்தலுமாய்...

அங்கே, பொருட்காட்சியில் வைத்துத்தான் வரலட்சுமியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அதுவும் பார்த்தவுடனே 'பளிச்' சென்றிருந்த அவளை, தான் தேர்ந்தெடுத்தால் வீம்புக்காகவாவது அண்ணன் ஒதுக்கிவிடுவார் என்கிற பயம்...

கோவிந்துவிடம் எக்குத் தப்பாகவே கேள்விகளை வீசிக் கொண்டிருந்தார் பொன்பாண்டி.

"என்னடா... பொண்ணு பலாச்சுளை மாதிரி இருக்கு... க்ராஸா?"

"அய்யோ... என்ன அண்ணாச்சி... அவங்க அம்மாவோட முப்பாட்டன் இங்கிலீஸ்கார துரை கணக்கா இருப்பாராம்... குடும்ப வாகு..."

"ராங்கியோ..."

"சிச்சீ... பாவங்க... ஒரு மிரட்டல் போட்டாப் பசு மாதிரி அடங்கிடுவா... வேத்து ஆம்பிளைங்க முன்னாடி குரலை ஒசத்திப் பேசவே மாட்டாங்க..."

"என்ன படிச்சிருக்கு..."

"ஒரு பத்தாப்பூ படிச்சிருக்கும் அண்ணே... ஆனா, யாரு, எது சொன்னாலும் 'கப்'புனு புடிச்சுக்கும்..."

பொன்பாண்டி ஓரக் கண்ணால் குமரவேலுவைப் பார்த்தார். அவன், அந்தப் பெண்ணையே விழுங்கி விடுவான் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'பிடிச்சிருக்குப் போல...'

மனசுக்குள் பூரித்தவர், 'சட்'டென மணலை உதறிக் கொண்டு எழுந்தார். கோவிந்தன் பதற்றத்துடன் பார்த்தான். ஏன்... குமரவேலுவும், அவனைப் பெற்றவரும் கூட....



"எலே... இந்த இடம் வேணாம்டா... இன்னும் கொஞ்சம் படிச்ச, பசையுள்ள எடமாப் பாரு... நம்ம பையன் சம்பளம் என்ன தெரியுமில்லே.. அரை லட்சத்துக்குப் பத்து ரூவாதான் குறைச்சல். தெரியுமா... பொண்ணைப் பார்த்தா - நூறுக்கு மேல எண்ணவே தெரியாது போல..."

அவ்வளவுதான். அண்ணன்காரர் வீறுகொண்டு எழுந்தார்.

"கோவிந்தா, இந்த எடத்தைப் பேசி முடி.. சீரு, செனத்தி, வரதட்சணை எல்லாம் முன்னே பின்னே இருந்தாலும் சரி.."

இப்படித்தான்... இப்படித்தான் இந்தக் கல்யாணம் முடிவானது.

குடும்பத்தினரோடு பூ வைக்கப் போனபோது, வரலட்சுமி பயந்துகொண்டு உள்ளே ஓடினாள்...

"அம்மா... பொண்ணுகூட ரெண்டு வார்த்தை பேசலாமா..."

"அது... நம்ம ரெண்டு பேர் குடும்பத்துலேயும் பழக்கமேயில்லையேடா..."

"அதில்லேம்மா... பொண்ணு பேசிக் கேட்கணும்... சொல்லணும்; பேசணும்..."

"டேய்... டேய்... இதுக்காகவாடா பொண்ணு புடிக்கலைங்கறே... பொம்பளைங்களுக்குப் பேசச் சொல்லியாத் தரணும். எத்தனையோ பிளான் போட்டு, உங்கப்பனை மசிய வச்சி முடிச்சிருக்கேன்டா... பொண்ணு திருவனந்தபுரம் சமஸ்தானத்து சந்தனப் பதுமை மாதிரி இருக்குடா... இந்தக் கல்யாணம் மாத்திரம் நடக்கட்டும்... நான் நம்ம ஊர் வெயிலுக்கு உகந்த அம் மனுக்குத் தீச்சட்டி எடுக்கறேன்னு... த்ச்... உனக்குப் பிடிக்கலேங்கறப்ப நான் புலம்பி, பலன் என்ன..."

புரோட்டா உலர்ந்து கிடக்க, பொன்பாண்டி 'விருட்'டென எழுந்து விட்டார்.

அவரது ஏமாற்றம் அவனுக்குப் புரிகிறது. ஆனாலும் பேசாத பொம்மையைக் கட்டிக்கொண்டு...

"சித்தப்பா... சுலோச்சனா நாடார் தெரு முனையிலதானே அவங்க வீடு? போய், 'மன்னிச்சிடுங்க. பொண்ணு புடிக்கலே'ன்னு சொல்லிட்டு வந்துடலாமா?"

"நீ வேணா போடா... நான் வரமாட்டேன்...

கடைசி வரையில் அவன் குரல் எடுபடவே இல்லை.

இப்பொழுது பர்மாக் கடையில் உட்கார்ந்து, சித்தப்பாவிடம் தன் ஆதங்கத்தை அவன் சொன்னபோது முதலில் அவர் திகைத்தாலும், அடுத்த கணமே 'இடியிடி'யெனச் சிரிக்கிறார்.

"எலேய்... பொண்ணு பேசாம இருந்தாத்தாண்டா அழகு... இருவாட்சி பூத்தா அழகு."

"சித்தப்பூ... உங்களுக்கு வேணுமானா பொண்ணு ஊமைச்சியா இருக்கலாம். பொண்ணுன்னா என்னையப் பொருத்தவரைக்கும் தன் பக்கத்து நியாய அநியாயங்களை வாய் திறந்து பேசணும். புருசன்காரன் படுக்கக் கூப்பிட்டா, உடனே புடிக்குதோ இல்லையோ பாயைத் தூக்கிட்டு வர்ற மிஷினு இல்லே பொண்ணு. தன் விருப்பு வெறுப்பைச்



சந்தியா மிரளும் நபர்!

"மாலை வெயிலாலே மனசுக்குள் மழையடிக்கும்; உணர்வுங்க ஜல்லியடிக்கும். இதமான அந்த வெயில் தர்ற இதத்துக்கு ஈடா என்வரையில் எதுவும் கிடையாது. அதனால் தான் என் படத்தோட டைட்டிலை மாலையைப் பிரதிபலிக்குற 'மஞ்சள் வெயில்'னு வச்சேன்" என்கிறார் ராஜா. இயக்குநர் அதியமானின் சிஷ்யரான இவர், இப்போது தனியே படம் பண்ணுகிறார்.

'சாயந்திரத்துல நடக்குற கதையா?' என்றால், சிரிக்கிறார்.

"காதலுக்கு உகந்தது மாலை நேரம். இதுதான் அடிப்படை. இந்தப் பின்னணியிலதான் படத்தைச் செதுக்கியிருக்கேன். காதலியாக் கலக்கப்போறது காதலுக்காகவே பிறப்பெடுத்திருக்குற நம்ம சந்தியாதான். 'காதல்' பார்த்துட்டு அவங்க நடிப்புல மிரண்டுட்டேன். 'மஞ்சள் வெயில்'லயும் மத்தவங்கள அவங்க மிரட்டப் போறது நிச்சயம்" என்கிறார் ராஜா.

'மிரட்டுவீங்களா?' என்று சந்தியாவிடம் கேட்டால்,

"ஏன், அதிலென்ன சந்தேகம்? பிரசன்னா தான் ஹீரோ. அவரோட போட்டி போட்டு நடிச்சிருக்கேன்" என்றார்.

'சரி, நீங்க யாரைப் பார்த்து மிரளுவீங்க?'

"மிஸ்டர் பல்லி!"

- ப்ரியா

உனக்கெல்லாம் திமிரு. நாலு எழுத்துப் படிச்சிட்ட திமிரு..."

அவர் வேட்டி முனையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு 'விறு விறு'வென முன்னால் நடக்க...

சுலோச்சனா நாடார் தெருவின் மத்தியில் இனிப்பை ஈ மொய்த்தாற் போல சிறு கூட்டம்.

கூட்டத்தின் நடுவிலிருந்து அட்டகாசமான, ஆக்ரோஷமான பெண் குரல்:

"ஏண்டா டேய்... பொம்பளைன்னா அவ்வளவு ஈனமாப் போச்சாடா உனக்கு... பின்னாலே தட்றியா.. இதப் பாருடா... நான் இப்ப உன் நெஞ்சுல தட்டறேன்... என் கையாலே ஒரு அடி தாங்குவியா நீ..."

"வேணாம்... வரலட்சுமி... விடு. என்னமோ தெரியாம செஞ்சிட்டான். ஏய்... இப்படி ஏறி மிதிக்காதே... ஆளு பொட்டுனு போயிட்டான்னா... கல்யாண சமயத்துல போலீஸ் கேஸ் ஆயிரும்..."

வரலட்சுமி... வெயிலுக்கு உகந்த அம்மன் மாதிரி ஆவேசமாய் எவனையோ புரட்டி எடுத்துக் கொண்டிருந்தாள்.

"அட, நீ சும்மாயிருப்பா. நானும் பஸ்ல ஏறினதுல இருந்து உன்கிட்ட சொல்லிட்டேதானே வர்றேன்... கேட்டியா நீ..."

வரலட்சுமியின் ஆவேசம் இன்னும் தணியவில்லை. குமரவேலுவின் முகத்தில் குறுநகை... அத்தனை அமர்க்களத்திலும் பெண்ணைப் பெற்றவர் மாப்பிள்ளையையும், சித்தப்பாவையும் பார்த்து விட்டார். முகம் வெளிறிப் போகிறது...

"தா... புள்ள... அங்கே மாப்பிள்ளை... கூட அவரோட... அவரோட..."

"சித்தப்பா..."

பொன்பாண்டி முடிக்க, வரலட்சுமி முகம் சிவந்து, கலைந்த கூந்தலை ஒதுக்கியபடி வெட்கத்துடன் சிட்டாய்ப் பறக்க...

"டேய்... போய்ப் பேசிட்டிரு... நான் போய்க் கடலைமிட்டாயாவது வாங்கியாறேன்..."

"கொஞ்சம் நேரமானாலும் பரவாயில்லே சித்தப்பூ... முள்ளு வெடிச்ச பலாப்பழம் இருந்தாக் கூடவே வாங்கிட்டு வாங்க..."

குமரவேலுவின் முகத்தில் ஜொலித்த பூரிப்பு...

அடடா... சித்தப்பூ, தன் வயசை மறந்து ஓடினார்.●





தேவமருந்து 23

ஆட்டிவைக்கும் ஆட்டிஸம்!

ஆயுர்வேதத்தில் 'கௌமாரபிருத்யம்' என்ற பிரிவில் குழந்தைகளின் உடல் நலனைப் பாதுகாப்பது குறித்தும், குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. 'பிருத்யம்' என்றால் 'பேணிப் பாதுகாத்தல்' என்று அர்த்தமாகும். ஆயுர்வேதத்தில் குழந்தை மருத்துவத்தின் தந்தையாக காச்யப ரிஷியைக் கூறுகிறோம். குழந்தைகள் மருத்துவம் - Paediatric medicine இன்று வந்ததல்ல, கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டுள்ள 'காச்யப ஸம்ஹிதை' எனும் 'விருத்த ஜீவக தந்திரம்' என்கிற புத்தகத்தில் குழந்தைகளுக்கு வருகின்ற நோய்களைப் பற்றியும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவுகள் குறித்தும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

இன்று நம் அம்மாவோ, பாட்டியோ குழந்தைக்கு வசம்பு அரைத்துக் கொடுத்தால் 'பழம் பஞ்சாங்கம்' என்று நாம் சில நேரங்களில் திட்டுகிறோம். ஆனால், வசம்பு கொடுப்பது, கோரோசனை கொடுப்பது, தைலங்களால் அப்யங்கம் (எண்ணெய் தடவி குளியல்) செய்வது, உரை மருந்துகள், நெய் இவற்றையெல்லாம் குழந்தைகளுக்குக் கொடுப்பதால், நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரித்து இயற்கையாகவே நோயிலிருந்து பாதுகாக்க முடியும் என இந் நூலில் கூறப்பட்டுள்ளது. இதனை 'Vedic immunization' என்கிறோம்.

மேலும் நோய்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் உள்ளடங்கியுள்ளன. இதோடு, குழந்தைக்குக் கொடுக்கும் பால் அதற்கு ஒத்துக்கொள்ளாமல் போனால் கொடுக்க வேண்டிய மருந்துகள் என்னென்ன, தாய் நோயுற்றிருக்கும்போது தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு அத் தாய்ப்பால் மூலம் வரும் நோய்கள், அந்நேரங்களில் தாய்க்கு என்ன சிகிச்சை அளிக்க வேண்டும் என்பன போன்ற அற்புதமான, அவசியமான பல விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

டாக்டர் எல்.மஹாதேவன்

ஆட்டிஸம்

'ஆட்டிஸம்' - இன்று அதிகமாகப் பேசப்படும் நோய். இதனை நோய் என்பதைக் காட்டிலும் குறைபாடு என்று சொல்வது பொருந்தும். பத்தாயிரம் குழந்தைகளுக்கு ஐந்து குழந்தைகள் வீதம் இக் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான் வருத்தமான விஷயம். இக் குழந்தைகள் பேசுகின்ற பேச்சை நம்மால் எளிதிலோ அல்லது முற்றிலுமாகவோ புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய செயல்கள் யாரோ கட்டாயப் படுத்திச் செய்ய வைத்ததுபோல் மிகுந்த பிரயாசையுடன் செய்யப்படுவனவாகத் தோன்றும். சில நேரங்களில் புத்தியின் வளர்ச்சியிலும் குறை

ஏற்படும். குழந்தைக்கு இரண்டு வயது தொடங்கும்போது இக் குறைபாட்டின் அறிகுறிகள் தெரியும். ஆகையால் குழந்தை இரண்டு வயதாக இருக்கும் போது அதனுடைய எல்லா செயல்களும் நார்மலாக இருக்கின்றனவா என்பதைக் கவனித்துப் பார்ப்பது அவசியம். முக்கியமான ஒன்று... மனவளர்ச்சிக் குறை (mentally retarded) வேறு; ஆட்டிஸம் வேறு. துரதிஷ்டவசமாக சில குழந்தைகளுக்கு இரு குறைபாடுகளும் சேர்ந்து இருக்கலாம். இதற்கான காரணம் இன்றுவரை முழுமையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. 'மரபணுக்களில் ஏற்படுகின்ற குறைகளாலும், பிரசவக் காலத்தில் தாயாருக்கு நுண்கிருமிகளால் வரும் தாக்குதல்களாலும் இக்குறைபாடு ஏற்படலாம்' என நம்பப்படுகிறது.

இக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பேசும் முறை (மொழி), நடைமுறைப் பழக்கவழக்கங்கள், புத்தி போன்றவற்றில் ஏற்படும் குறைகளால் சமூகத்தில் கலந்து பழக முடியாமல் பின் தங்கியிருப்பார்கள். இவர்களைச் சிறிதளவு பாதிக்கப்பட்டவர்கள்; கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

இக் குழந்தைகளுக்கு 'அபஸ்மாரம்' எனும் காக்காய் வலிப்பு' வருவதுண்டு. இக் குழந்தைகளின் பார்வை கண்ணை நேருக்கு நேராகப் பார்ப்பதாக இராமல் எங்கோ தூரத்தில் நிலைத்திருக்கும். நார்மலாக உள்ள குழந்தைகளோடு சேர்ந்து விளையாட சிரமப்படும். உணர்ச்சிகளும் நார்மல் குழந்தையை விடக் குறைவு.

ஐம்பது சதவிகித ஆட்டிஸ பாதிப்பு உள்ள குழந்தைகள், நாம் பேசும் மொழியை உணர்ந்துகொள்வதில்லை. ஆகையால், நாம் சொல்வதையே திருப்பிச் சொல்லும். நான் போட வேண்டிய இடத்தில் நீ, நீ போட வேண்டிய இடத்தில் நான் என்று பயன்படுத்தும். இதற்கு 'எக்கலோலியா' என்று பெயர். புது உணவு, உடை, பொம்மை போன்ற புது விஷயங்களை உடனே இக் குழந்தைகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.



அதாவது பழகிய பொருளின் மேலே இவர்களின் ஈடுபாடு அதிகமாக இருக்கும். அடிக்கடி கையை அசைத்தல், எதையாவது எறிதல் போன்ற செயல்களைச் செய்துகொண்டே இருப்பார்கள். இதனால் சில சமயங்களில் இவர்களுக்குக் காயம் ஏற்படலாம்.

ஆட்டிஸ குழந்தைகளில் சிலர் நன்றாகப் பாடக்கூடும். ஆனால் இத்திறமையை சமூகத்தில் அவர்களால வெளிப்படுத்த முடியாது. இக் குறைபாடு உள்ளவர்களிடம் அன்போடும், கவனத்தோடும் நடந்துகொள்ள வேண்டும்.

ஆட்டிஸத்தோடு வேறு சில நோய்களும் சேர்ந்து இருக்கின்றனவா என்று பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இக் குறைபாடு நீண்ட நெடுங்காலம், ஏன் ஆயுள்வரை கூடத் தொடரலாம். ஆகையால் ஆட்டிஸம் பாதிப்புள்ள ஒரு குழந்தைக்கு ஏழு வயதாகும்போது அதனுடைய பேச்சாற்றல் எப்படி இருக்கிறது, அதனை அக் குழந்தை



எப்படி வளர்த்துக் கொண்டுள்ளது என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதன்பிறகு அக் குழந்தைக்குப் பேச்சை வளர்க்கும் கல்வி, செயல் திறன் அதிகரிக்கும் கல்வி ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

வாதம், பித்தம், கபம் மூன்றும் சேர்ந்து புத்தி ஸ்தானத்தைத் தாக்கு வதால் 'திரிதோஷ'மான இக் குறை பாடு வருவதாக ஆயுர்வேதம் கூறு கிறது. இந்நோயில் பஞ்சப் பிராணனில் உதானம் பிராணன் மிகவும் பாதிப் படைந்த நிலையில் இருப்பதாக ஆயுர்வேதம் கருதுகிறது.

சிகிச்சை

வல்லாரை, சங்கபுஷ்பி, வெண் தாமரை, திராட்சை, வெள்ளரி வேர் போன்றவற்றால் செய்யப்பட்டக் கஷாயத்தைக் கொடுக்க வேண்டும். அதன் பிறகு, சிற்றாமுட்டி, கொம் பரக்கு, தயிர்த்தெளிவு போன்றவற்றால் காய்ச்சப்பட்ட பலா அஸ்வகந்த லாக்ஷாதி எண்ணெயை உடல் முழு வதும் தடவிக் குளிப்பாட்ட வேண்டும். இதனால் பரபரப்பு தன்மை மாறுபடும். பின்பு, இருவேளை மஹா கல்யாணக கிருதம், ஸாரஸ்வத கிருதம், மஹா ஸாரஸ்வத கிருதம் போன்றவற்றைச் சிறிது கோரோசனை சேர்த்து 15 மிலி தர வேண்டும்.

நெல்லிக்காய், கோரைக் கிழங்கு, இரண்டையும் மைபோல் அரைத்து க்ஷீரபாலா எண்ணெய் சேர்த்து, தலை யைச் சுற்றிப் பற்றுப் போட வேண்டும். இதனைச் சிரோ லேபம் என்பார். அதேபோல் க்ஷீரபாலா எண்ணெயில் பஞ்சை முக்கி எடுத்துத் தலையில் வைக்க வேண்டும். 50 மிலி வரை இந்த எண்ணெயை எனிமாவாகக் கொடுக்கலாம். மானசமித்ர வடகம், ஸ்வர்ண பஸ்மம், ஸாரஸ்வத அரிஷ் டம், பஞ்சாரவிந்த சூரணம், ஆமலக ரஸாயனம், வல்லாரைப் பிரயோகங் கள், கூஷ்மாண்டம் எனும் கல்யாணப் பூசணிச் சாறு, சிற்றமிர்து, அதிமதுரம் போன்றவை மிக முக்கிய மருந்துகள். 'சிரோதாரை' சிகிச்சை சிறந்தது. ஆனால் தாரைக் கட்டிலில் படுக்க வைப்பது சிரமம். இக் குறைபாட்டை முற்றிலுமாகக் குணமாக்க முடியாவிட் டாலும் பரபரப்புத் தன்மையை மாற்றி, அவர்களை ஓரளவு அமைதிப்படுத்த ஆயுர்வேதத்தால் முடியும்.

(தொடரும்)

தன்வந்தரி டாலர்
பரிசுப் போட்டி எண்: 19

கைக் குழந்தைகளுக்கு வரும் சளி, இருமலைக் கட்டுப்படுத்தும் எளிய, சரியான கைமருந்தை எழுதி அனுப்புங்கள். சிறந்த குறிப்புக்கு முதல் பரிசாக **தன்வந்தரி டாலர்.** இரண்டாம் பரிசாக

டாக்டர் எல். மஹாதேவனின் **தேவமருந்து முதல் பாகம்.**

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி: **02.04.07**

விசிட்

சென்னைக்கு அருகிலுள்ள போரூர் சந்திப்பிலிருந்து ஐயப்பன்தாங்கல் செல்லும் வழி. அங்கிருந்து பல்வேறு ஊர்களுக்குப் பிரிந்து செல்லும் மக்கள். டிராஃபிக்கில் மாட்டிக்கொண்டு இருக்கும் பேருந்துகளின் இரைச்சல்.

இதையெல்லாம் தாண்டி, கொஞ்சம் தள்ளிப் போனால் காரம்பாக்கம் பொன்னி நகரில் ஒரு கோயில் இருக்கிறது. ஸ்ரீ முனீஸ்வரத் ஸ்வாமி ஸ்வெத்தம்பர் ஜெயின் கோயில். அமைதிக்குப் பெயர் போன ஜைன மதத்தவர்களின் கோயில். அந்தத் தெருவின் பெயரே ஜெயின் கோயில் தெரு.

1982-ல் கட்டப்பட்ட இந்தக் கோயில் முழுக்க முழுக்க பளிங்குக் கற்களால் பளிச்சிடுகிறது. பிரம்மாண்டமான தூண்கள். பளிங்குச் சிலைகள். சுத்தம், குளிர்ச்சி.

உள்ளே நுழைந்ததும் அமைதி நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. ஜைன மதத்தவர்களும் வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் ஸ்வாமியை வணங்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஒரு சிலர் மட்டும் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு வழிபடுகின்றனர். அவ்வப்போது அமைதியைத் தேடி வருபவர்களை இந்தக் கோயில் வரவேற்கிறது.





ஜைன மதத்தில் திகம்பர, ஸ்வெதம்பர என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. திகம்பரர் என்பது முற்றும் துறந்தவர்கள். சென்னையில் நாம் பார்க்கும் ஜைன மதத்தவர்கள் பெரும்பாலும் ஸ்வெதம்பரர்களே. இவர்கள் பகவானுக்குப் பூஜைகள் செய்வார்கள். அபிஷேகம் செய்வார்கள். கடவுளை வணங்கி பஜன் பாடல்கள் பாடுவார்கள்.

முனீஸ்வர பகவான், ஆதிநாத் பகவான், நாகேஸ்வர பகவான் ஆகியோருக்கு இங்கு சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்தக் கோயிலின் முதற்கடவுள் ஆதிநாத் பகவான். குரு தசை நடைபெறுபவர்



• படங்கள்: ஸ்ரீஹரி

பக்தனே அபிஷேகம் செய்யும் கோயில்!

கள் ஆதிநாத் பகவானை வழிபாடு செய்கின்றனர். ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஆதிநாத் பகவானுக்குச் சிறப்புப் பூஜை நடைபெறுகிறது.

சனி தசை நடைபெறுபவர்கள் சனி பகவானின் வடிவமான முனீஸ்வரனுக்கு சிறப்புப் பூஜைகள் செய்கின்றனர். சனிக் கிழமைகளில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

ராகு, கேது தசை நடைபெறும்போது நாகேஸ்வர ஸ்வாமிக்கு சிறப்புப் பூஜைகள் நடக்கின்றன.

நெய் விளக்கேற்றும் வழக்கம் கொண்ட இந்தக் கோயிலுக்கு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சௌகார் பேட்டையிலிருந்து வரும் மார்வாடிக் கூட்டம் எக்கச்சக்கம். பௌர்ணமி நாட்களிலும் பஜன்களும் பூஜைகளும் நடைபெறுகின்றன.

பத்யூஷண மஹா பூஜை இந்தக் கோயிலின் விசேஷம். பூஜையின் கடைசி நாளான மஹாவீர் ஜெயந்தி அன்று சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றன. இந்தப் பூஜையின்போது எட்டு நாட்களும் ஒரு வேளைச் சாப்பாடுதான். அதுவும் உப்பு உவர்ப்பு இல்லாத, சுவை நீக்கப்பட்ட உணவு வகைகளே. மாலை ஆறு மணிக்கு மேல் தண்ணீர்கூடக் கிடையாது. எட்டாம் நாள் மஹாவீர் ஜெயந்தி. அன்ன தானம் நடக்கும், மோர் வழங்கப்படும். சிறப்புப் பூஜைகள் நடத்தி விழாக்கோலம் முடிவடைகிறது.

கோயிலின் சிறப்பம்சம், கடவுளுக்கு நாமே அபிஷேகம் செய்யலாம். கூட்டம் அதிகம் வரும் நாட்களில் மட்டும் இந்த அபிஷேகம் ஏலம் விடப்படுகிறது.

கோயிலின் மற்றொரு சிறப்பம்சம் மலை போன்ற ஒரு மாடல். அதில் சிறு சிறு கோயில்கள். குஜராத்திலுள்ள பாலிதனா என்ற கோயிலின் அமைப்பை அப்படியே இங்கு மாடலாக அமைத்திருக்கிறார்கள். இரவு நேர விளக்கு வெளிச்சத்தில் இந்தக் கோயிலைக் காண வருபவர்கள் அதிகம்.

- முத்துராமன்

உலகக் கோப்பையும் உல்மர் மரணமும்...

பிரேஸில் நாட்டில் குழந்தைகள் பிறக்கும்போது குழந்தையைக் காணச் செல்பவர்கள் பரிசாகக் கால்பந்து வாங்கிச் செல்வது வழக்கம். இங்கிலாந்து நாட்டுக்காரரான பாப் உல்மர், இந்தியாவிலுள்ள கான்பூரில் பிறந்தபோது, அவருடைய அப்பா தன் பிள்ளைக்கு ஆசை ஆசையாக வாங்கிச் சென்றது கிரிக்கெட் மட்டையும் பிளாஸ்டிக் பந்தும்.

உலகக் கோப்பை வாங்கிச் செல்வதற்காக மேற்கு இந்தியத் தீவுக்கு வந்த உல்மர், உலகத்தைவிட்டே சென்றபோது கண் காணாத இடங்களிலுள்ள பல கண்கள் பனித்தன.



சம்ப்யூட்டர், ஈமெயில் எல்லாம் அறிமுகம் இல்லாத பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை முதன்முதலில் பாப் உல்மர் சந்தித்தபோது, அவர் கைப்பிடியில் இருந்தது லேப்டாப். லேப்டாப்பைத் திறந்து வைத்துக்கொண்டு, 'பார், ஒரு ஓவரில் நீ இத்தனை ஷார்ட் பிட்ச் பந்துகள் வீசியிருக்கிறாய்' என்று படம் விளக்கிச் சொன்னபோது, பாகிஸ்தான் வீரர்கள் வாயடைத்துப் போயினர். ஒரு கோச்சுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் என்கிற ஒரு தகுதி மட்டும் போதாது. கேமை அக்கு வேறு ஆணி வேறாக அலசத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்கிற போக்கைக் கொண்டு வந்தவர் உல்மர் தான். 'உலகின் முதல் லேப்டாப் கோச்' என்கிற பெயருக்குச் சொந்தக்காரர்.

2003ல் ஸ்ரீலங்கா அழைத்தது; மறுத்துவிட்டார். 2004ல் பாகிஸ்தான் கூப்பிட்டது. உடனே கிளம்பிச் சென்றார். கற்கால மனிதர்களின் குணாதிசயங்கள் கொண்ட பாகிஸ்தான் வீரர்களால் கையூன்றிக் கரணம் போட வேண்டிய நிலைமை. இப்போது அதே பாகிஸ்தான் வீரர்களால் உண்டான மன உளைச்சல் அவருக்கு மரணத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.

அவரின் இறப்புக்கு ஏதேதோ காரணங்கள் சொல்லப்படுகின்றன. எந்தக் காரணம் என்றாலும் உல்மரின் ஆத்மா ஒரு விஷயத்தால் சாந்தியடையும்... அது, தான் நேசித்த கிரிக்கெட்டாலே உயிர் போனது!


- சநகன்




கல்கி

1-4-07 இணைப்பு













கல்கி



''சிறு கடுகு இட்டு ஆக்காத உணவும் உணவல்ல... சிறு குழந்தை இல்லாத வீடும் வீடல்ல...'' - இது நமது பழமொழி.

''வீட்டுக்குள் சொர்க்கத்தைக் கொண்டு வரும் செல்லக் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், இன்பத்துக்கும், பராமரிப்புக்கும் பொறுப்பேற்கும் வகையில் நாங்கள் இருக்கிறோம். அந்தப் பொறுப்பை எங்களிடம் தாருங்கள்...'' என்று படு உற்சாகமாகக் குரல் கொடுக்கிறார் கே.சசிகுமார். சென்னை கோடம்பாக்கம் நெடுஞ் சாலையில் 'Born Babies Little Kids' என்ற பட்டுச் சிட்டுகளுக்கென்றே ஸ்பெஷல் ஷோரூமை நிறுவியிருக்கும் சகோதரர்களில் ஒருவர் இவர்.

''கைக்குழந்தைக்கு என்ன பெரிய தேவை? தூளியில போட்டு ஆட்டி, வேளா வேளைக்குப் பாலை ஊட்டி, ஒரு ஜப்லாவை மாட்டி, கிலுகிலுப்பை ஆட்டினாப் போச்சு...' என்று வீட்டில் வயசானவங்க சொல்றாங்களா...? அவர்களையும் நம்ம கடைக்கு அழைத்து வாங்க; வியந்து போய் நிற்பார்கள்...'' என்கிறார்.

'உச்சி முதல் உள்ளங்கால் வரை...' எத்தனை பொருட்கள் நம் செல்லங்களுக்கு...! நாமும் குழந்தையாகவே மாறி, வலம் வருகிறோம்...

குழந்தைகளைப் படுக்க வைக்கிற (Baby Mattress) நுரை மெத்தைகள்...
தொட்டுப் பார்த்தால் மிக மிருதுவாக இருக்கிறது...
செயற்கை இழையோ... சந்தேகம்





டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- நடக்கப் பழகும் குழந்தைகளுக்கு வெளியே போகும்போது கான்வாஸ் அல்லது துணியால் ஆன ஷூவே சிறந்தது! லேஸ் வைத்த ஷூக்களைத் தவிர்த்து விடுங்கள்... ஷூவுக்கு அடியில் ஸோல் வழுக்காமலும், ரொம்ப அழுத்தாமல் இருக்கிற மாதிரியும் வாங்குங்கள்.

- *சிறு குழந்தையை க்ரெஷில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்லும் அம்மாவா நீங்கள்...? அங்கே இருக்கிற டாய்லெட்டை உபயோகப்படுத்த குழந்தை பயப்படலாம். வீட்டில் உள்ளது போல ஒரு ''போர்ட்டபிள் கம்மோடு'' வாங்கிக் கொடுத்து விடுங்களேன்.*





வருகிறது.

"இல்லை. சுத்தமான பஞ்சுதான். உள்புறம் "recron fibre" என்ற இழை வைத்து பஞ்சால் தயாரித்தது. இருபுறமும் நீளத்திண்டுகள் வைத்து உருவாக்கியிருக்கிறோம்..."

கழுத்துப் பகுதியை மென்மையாகத் தாங்க, குட்டித் தலையணை. பால் குடித்த குழந்தைகள் ஒருக்களித்துப் புரையேறாமல் இருக்கவே இந்தத் தலையணை. மிருதுவான போர்வை, குடை போன்ற அமைப்பில் கொசு வலை, படுக்கை விரிப்பு எல்லாமே கண்கவர் 'பளிச்' நிறங்களில் பொம்மை டிசைன் போட்டுக் கண்களுக்கு களிப்பூட்டிக் குழந்தைகள் மகிழும் வண்ணம் காட்சியளிக்கின்றன.






ஆஹா...! கொள்ளையழகு!


டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

• சில பொம்மைகள், டவல், போர்வை போன்ற பொருட்கள் மீது குழந்தைகள் ரொம்ப ஒட்டுதலாகிவிடும். பக்கத்திலேயே வைத்துக் கொள்ளும். அவை இல்லாமல் தூங்காது... அவற்றை இரண்டு செட்டாக வைத்துக் கொண்டால்... சுத்தம் செய்து மாற்றி மாற்றி வைத்துக் கொள்ளலாம்.

• இரண்டு வயசுலேர்ந்து மூணு வயசுக்குள்ள தண்ணீர், மணல் இதைப் பார்த்தா போதும்... விட்டுவிட்டு வரவே வராதே! பேப்பர்ல கிறுக்க ஆரம்பிக்கிறதா? ஆசையா வண்ணப் புத்தகங்கள் வாங்கிக் கொடுங்க... படமும் பார்க்கும்... கிறுக்கும்... அப்புறம் கிழிக்கும்! என்ஜாய்!





பாட்டில் ஸ்டெரிலைஸரா, புதுசா இருக்கே...?

ஸ்டெரிலைஸர் யூனிட்ல ஆறு ஃபீடிங் பாட்டில் வரை சுத்தம் செய்துக்கலாம். வெளியூர் போகும் போது பாட்டில்களை சுலபமா சுத்தம் பண்ண தண்ணீரில் ஸ்டெரிலைஸர் மாத்திரைகளைப் போட்டு சுலபமாக சுத்தம் செய்யலாம்.



“பேபி மானிட்டரா? அப்படின்னா...?”

“இது மைக், ஸ்பீக்கர் கொண்ட சாதனம். குழந்தை பக்கத்துல மைக்கை வச்சிட்டு, அம்மா பாட்டுக்கு தன் வேலையை செய்யலாம். அம்மா தன் பக்கத்துல ஸ்பீக்கரை (சிறு சாதனம்தான்) வைத்துக் கொண்டால், குழந்தை அழுதா கேட்கும்...”




“வெளியூர்னு சொன்னதும் ஞாபகம் வருது... சின்னக் குழந்தைகளை ஜாக்கிரதையா கூட்டிக்கிட்டு போக... டிராவலிங் கிட்ஸ் வச்சிருக்கீங்களா...”

ஏன் இல்லாம...? ‘பேபி கேரி காட்’னு கைல தூக்கிப் போக வசதியா தொட்டில் போல இருக்கு. ‘மதர் பேக்’, ‘பேபி ஸ்லிங்பேக்’ இதெல்லாம் பாதுகாப்பா தோளில் ரெண்டு பக்கமும் மாட்டிக் குழந்தையை உள்ளுக்குள்ள உட்கார வச்சுக்கலாம்... முன் பக்கமோ, பின்பக்கமோ போட்டுக்கலாம்... அப்புறம் Pram. இதிலயும் ரெண்டு மாடல் வச்சிருக்கோம். கொஞ்சம் வளர்ந்த குழந்தையை உட்கார வச்சு Stroller இழுக்கற மாதிரி போறது ஒண்ணு... கைக் குழந்தைகள் படுக்கறதுக்குன்னு இன்னொண்ணு...





டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- குழந்தை உணவு வகைகளைக் கடைகளில் வாங்குபவரா நீங்கள்? வாங்கும் போது அதில் உட்பொருட்கள் என்னென்ன என்று பாருங்கள்... செயற்கைப் பொருட்கள் சேராத உணவுதான் பெஸ்ட். எக்ஸ்பைரி தேதியும் பார்ப்பீர்கள்தானே.

- குழந்தைக்கு ஜுரமா...? நான்கு வயதுக்கு மேற்பட்ட குழந்தை என்றால்தான் வாயில் தெர்மா மீட்டர் வைத்துப் பார்க்கலாம்... இப்போது ஆக்ஸில்லரி தெர்மா மீட்டர் மற்றும் டிஜிடல் தெர்மா மீட்டர் கிடைக்கிறது. நெற்றியிலோ, கைக்கு அடியிலோ வைத்து டெம்பரேச்சர் பார்க்கலாம்.







✧ பார்ன் பேபிஸ் ✧



Complete Checklist for Parents-to-be

"IN HOSPITAL"	Req.Qnty	"ACCESSORIES"	Req.Qnty
COTTON JHABLA		BABY RECORD BOOK	
COTTON NAPPY		NAIL CLIPPER	
WET WIPES , DISPOSSABLE DIAPER		SAFETY SCISSORS	
BABY LINERS		BABY HAIR BRUSH & COMB	
WIPING TOWEL		PACIFIERS	
WRAPPING TOWEL		NASAL ASPIRATIOR	
MAKINTOSH & RUBBER SHEETS		THERMOMETER	
RECEIVING BLANKETS		MEDICINE DROPPER	
MITTENS & BOOTIES		FEEDING BOTTLE , NIPPLE & BRUSH	
		F BOTTLE & NIPPLE STERILISER	
"BATH NEEDS"		BOTTLE DRYING RACK	
BABY BATH TUB		F BOTTLE CLEANING LIQUID	
BABY BATH SEAT		BABY CLOTHING DETERGENT	
OIL MASSAGING SHEET		NAPPY RASH CREAM	
"COSMETICS"		COTTON BALLS	
BABY SOAP		SWEATER (SOFT WOOLLEN)	
BABY SHAMPOO		BIBS	
BABY OIL		BABY THINGS BAG / WARMER BAG	
BABY LOTION		NAPPY PINS	
BABY POWDER		POWDER BOX	
BABY HAIR OIL		OLIVE OIL	
BABY CREAM		ALMOND OIL	
BABY BATH		RATTLES	
BABY BUDS		SQUEEZE TOYS	
		STORAGE BINS	
"SLEEPING NEEDS"		TOY BOX	
MATTRESS		AIR FILLED RUBBER SHEET	
BLANKET		MUSICAL MOBILE	
QUILT		BABY CARE BOOKS	
NECK PILLOW			
BOLSTERS		"MOTHER NEEDS"	
MOSQUITO NET		NURSING PILLOW	
DISPOSSABLE DIAPER Or SHEETS		MASSAGE CREAM	
PLAY MAT		BREAST PUMP - MANUAL or B. OPERATED	
		WASHABLE NURSING PAD	
"FURNITURES"		DISPOSSABLE NURSING PAD	
CARRY COT(HOOD or W.O HOOD)		ABDOMINAL BELT	
CRADLE		NIPPLE SHEILD	
BASSINET		NIPPLE PULLER	
PLAY PEN		PANTIES	
BOUNCER		FEEDING BRAZIER	
STROLLER		FEEDING NIGHTIES	

❖ பார்ன் பேபிஸ் ❖



குழந்தைகளுக்கான உடைகளைக்கூட மிகுந்த கவனத்துடன், திருப்பூரில் உள்ள எங்கள் சொந்த ஃபேக்டரியில தயாரிக்கிறோம். சுமார் ஒரு வயது வரைக்கும் ஆண், பெண் பேதமின்றி குழந்தைகளுக்கு போலார் ராம்பர், (polar romper) ஜட்டி போன்றவற்றைப் பொதுவா போடலாம்... அதுக்கப்புறம்தான் இருக்கவே இருக்கு நூத்துக் கணக்குல வெரைட்டீஸ் அன்ட் கலர்ஸ்..."



"டையப்பர்களைத் தொடர்ந்து பயன்படுத்தலாமா? ரேஷஸ் வருமாமே..."

"கவலையே படாதீங்க... மிருதுவான பருத்தி, மல்மல், பனியன் துணிகளைக் கொண்டு சர்வ ஜாக்கிரதையாக அடுக்கடுக்காக வைத்துத் தயாரிக்கிறோம். குழந்தையின் தோலுக்கு எந்த பாதிப்பும் நேராது... 'மேகின்டோஷ் ஷீட்' என்ற மூன்று அடுக்குப் பருத்தித்துணி ப்ளஸ் வெளிப்புற அடுக்கில் மட்டும் சிந்தடிக் துணி கொண்டு தயாரிக்கிறோம். குழந்தை டாய்லெட் போனால், பருத்தித் துணிகளை மட்டும் வெளியே எடுத்துக் காயவைத்து மறுபடி உபயோகிக்கலாம்..."





குழந்தைகளை அழாமல், குளிப்பாட்டுவது ஒரு கலை. அதற்குத் தேவையான பொருட்களின் பட்டியலோ... அப்பப்பா... எத்தனை நீளம்! குழந்தை உடம்பில் எண்ணெய் தேய்க்க தோதாக மசாஜிங் ஷீட், சின்னக் குளியல் தொட்டி, குழந்தைகளுக்கான காரம் இல்லாத சோப்பு, ஷாம்பு, க்ரீம், லோஷன், பவுடர், குளித்த குழந்தைக்கு ஜலதோஷம் பிடிக்காமல் இருக்க, பத்துவிதமான கோலோன்கள்... அடேங்கப்பா... இப்படியெல்லாம் இருக்கான்னா!!!




டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...



● கண்ணும் கருத்துமாத்தான் பார்த்துகிட்டு இருப்போம்... கொஞ்சம் நம்ம தலையை இப்படி திருப்பினா போதும்... ஏதாவது சாமானை இழுத்து மேல கொட்டி... இப்படி விஷமம் செஞ்சிடும். தீப்பெட்டி, லைட்டர், கத்தி இதெல்லாம் குழந்தைக்கு எட்டாத உயரத்தில்தான் வச்சிருப்பீங்க... இதுகள்லருந்து தப்பிக்கிற குழந்தைங்க ஃப்ரிட்ஜ் பக்கம் போகும். எதுக்கு? ஃபிரிட்ஜ்ல அலங்காரமா சில பொம்மைகளை ஒட்டியிருப்பீங்க... அது பின்னால உள்ள காந்தத்தை (வட்டமா இருக்குமே) எடுத்து வாயில போடறதுன்னா அதுங்களுக்கு அவ்வளவு இஷ்டம்... அதனால எட்டாத உயரத்துல பொம்மைகளை ஒட்டுங்க...



'வரவேற்பு' நம் வாழ்க்கையின் ஓர் அங்கம்... சொர்க்கத்தையே தம்மோடு அழைத்து வரும் குழந்தைச் செல்வத்தை 'வரவேற்க' எப்படித் திட்டமிட்டார்கள்; பிறந்தவுடன் எப்படி உணர்ந்தார்கள்...




தெய்வம் தந்த பூவே!

வித்யா தீபக்ராம் சொல்கிறார்...

"Kids are God's Gifts என்பார்கள்... என் குழந்தையை முதன் முதலில் தொட்டபோது அந்த ஸ்பரிசத்தில் கடவுளை உணர்ந்தேன். அதிலும் என் குழந்தை Premature baby வேற. பிறந்ததும் ரொம்ப ஹெல்த்தியா இருக்கான்னு சொல்லவும் இரட்டிப்பு சந்தோஷமாக இருந்தது.ஆண், பெண், எந்தக் குழந்தையாயிருந்தாலும் வரவேற்கத் தயாரா வண்ண பெட்ஷீட்கள், தலையணைகள், பூப்போட்ட உறைகள், சின்னச் சின்ன பொம்மைகள் என்று வாங்கி வைத்தோம். குழந்தையைப் பக்கத்தில்தான் போட்டுத் தூங்க வைப்பது என்ற முடிவில் இருந்ததால் தொட்டில் மட்டும் வாங்க வில்லை.


'அர்ந'வுக்கு வந்த பரிசுகளிலேயே ரொம்பப் பிடிச்சது ஒரு 'பாத்டப்' தான். நண்பர் ஒருவர் அளித்த அழகான அந்தத் தொட்டியில் குளிப்பது என்றால் 'அர்நவ்'க்கு ரொம்ப பிடிக்கும். குஷியா குளிப்பான்...."


டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...



சின்னக் குழந்தைக்குப் பொம்மை வாங்கும்போது வேண்டவே வேண்டாம்...

* கூரான முனை கொண்ட பொம்மைகள்
* கம்பிகளோ, தந்திகளோ கொண்டவை
* சிறு பகுதிகள் நிறைய கொண்டவை
* அதிக சத்தமிடும் பொம்மைகள்
* திரவப் பொருட்கள் உள்ளே கொண்டவை
* கெமிகல்ஸ் கொண்டவை.
* தரமில்லாத பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டவை
* கண், மூக்கு கொண்ட பொம்மைகள் என்றால் அவற்றை எளிதில் பிய்க்கக்கூடியவை. மேற்கூறியவற்றை முற்றிலும் தவிர்த்து விடுங்கள்.





● குழந்தை பிறந்து உடனே அதிக வளர்ச்சி அடைவது மூளைதான். ஒரு வயசுக்குள்ளேயே முழு வளர்ச்சியின் 60 சதவிகிதம் வளர்ந்து விடும். மூளையில் "நியூரான் என்கிற மின்சார ஒயர் போன்ற நரம்பு செல்கள் இருக்கு. அதுவும் வேகமாக வளரும்னு உங்களுக்கு நல்லாத் தெரியும்தானே!


பிறந்த குழந்தைக்கு நியூரான்கள் இணைப்பு அதிகமா இருக்காது. புத்திசாலித்தனமான விளையாட்டுக்களையோ, பொம்மைகளையோ வாங்கித் தந்தீங்கன்னா, குழந்தை சிந்திக்க ஆரம்பிக்கும். (எல்லாம் மூணு வயசுக்குள்ளதான்) சிந்திக்க சிந்திக்க செயல்திறன் அதிகரிக்கும். இதனால நியூரான்கள் இணைப்பு அதிகமாகும்... இதனால மூளையின் ஆற்றல் அதிகரிக்கும். அப்புறம் என்ன.. உங்க குழந்தை "ச்சோ... ஸ்மார்ட்தான்."

● மார்க்கெட்டில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் அரிசி, பார்லி, ஓட்ஸ் இவற்றை அரைத்து செய்யப்படுபவைதாம். ஆனால் அப்படி பிராசஸ் செய்யும்போது ப்ரான் மற்றும் ஜெர்ம் நீக்கப்படுகின்றன. (இவைதாம் சத்தான பகுதி என்பதை நினைவில் கொள்க.)




● டிரெஸ்ஸிங் டேபிள்ல "கண்ணாடி தான் உசரமா இருக்கும்... அதுமேல இருக்கிற பொருட்களை எந்த உசரத்தில் வைக்கிறது..."ன்னு கேக்கறீங்களா...! ஸ்டிக்கர் பொட்டை மூக்குக்குள்ள போட்டு மூச்சு திணறின குழந்தைங்க, சென்ட் ஸ்ப்ரே எடுத்து கண்ணுல அடிச்சுக்கிட்டு தவிச்ச குழந்தைங்க கதையெல்லாம் இருக்கு. டிரெஸ்ஸிங் டேபிள் செய்யறப்போ கேபினட்டுக்கு ஒரு பூட்டு சிஸ்டம் செஞ்சு பூட்டி வச்சிட வேண்டியதுதான்.






❖ டிப்ஸ் ❖





● பளபள உடைகளும் லேஸ், ஃப்ரில் வைத்த உடைகளும் குழந்தைகளைக் கவரக் கூடும். அடுக்கடுக்காக நிறைய துணி தைத்த உடைகள் குழந்தைகள் ஓடியாடி விளையாடும்போது எதிலாவது மாட்டிக் கொள்ளக் கூடும்; வழுக்கக் கூடும். தவிர்க்கலாமே!



● குழந்தைக்கு டாய்லெட் பழக்கங்களைக் கொண்டு வருவது ஒரு கலைதான். அதற்கு ரொம்பப் பொறுமை தேவை. உங்கள் இரண்டு வயதுக் குழந்தை உடையிலேயே "சூச்சு" செய்து விட்டதா? அதட்டவே தேவையில்லை. அவசரமாக வரும்போது ஒன்றிலிருந்து ஐந்து வரை எண்ணச் (எண்ணிக்கையும் பழகும்)சொல்லுங்கள். அதற்குள் பாத்ரூமுக்குக் கூட்டிப் போய்விடலாம். (அல்லது மூச்சை இழுக்கும் பயிற்சி... முடிந்தால்!)




● "குழந்தைக்கு டூத் பிரஷ் வேணும்"னு கேட்டுத்தான் வாங்குவீங்க... அப்ப இதையும் கொஞ்சம் கவனியுங்க... குழந்தை ஈறு ரொம்ப மென்மையா இருக்கும்ங்கறதால, பிரஷ்ஷோட குச்சிகள் மிருதுவா இருக்கணும். முனையில கூரா இல்லாம சின்ன உருண்டைமுனையா இருக்கணும்... பிரஷ்ஷோட கழுத்துப் பகுதி வளையற தன்மையா இருந்தா தேய்க்கிற அழுத்தத்தால ஈறுகள் பாதிக்கப்படாம இருக்கும்... ஓகேயா?

● குழந்தைகளுக்கான இசை சி.டிக்கள் கிடைக்கின்றன. தாயின் இதயத்துடிப்பைப் போன்ற ஓசை கொண்ட இசையைக் கேட்கும் குழந்தைகள் ஆழ்ந்து தூங்குகின்றன என்பது சமீபத்திய கண்டுபிடிப்பு. குழந்தை ஆழ்ந்து தூங்கும்போதுதான் வளர்ச்சிக்கான ஹார்மோன்கள் நன்றாக வேலை செய்கின்றன!





''பிறந்த குழந்தைக்கு முதல் ஆறுமாதங்கள் வரை சிறந்த, எளிதில் செரிக்கக் கூடிய உணவு தாய்ப்பால்தான்...'' இதைப் பற்றி நிறையக் கேள்விப்படுகிறோம்; படிக்கிறோம்; அதன் அவசியம் நமக்குத் தெரிந்திருக்கும். இருப்பினும் உலக மருத்துவ அமைப்பு மற்றும் சுகாதார மையம் வெளியிட்டுள்ள காரணங்களைப் பாருங்களேன்...



தாய்மையின்

● தாய்ப்பால் அருந்துகிற குழந்தைகளுக்கு ஐ.க்யூ. மற்றக் குழந்தைகளைவிட ஏழு பாயிண்டுகள் அதிகம்!


● தாய்ப்பாலினால் குழந்தையிடம் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

● தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு அலர்ஜி அதிகம் வருவதில்லை.

● தாய்ப்பால் கொடுக்கும் தாய்க்கு ஐந்நூறு கலோரி சக்தி செலவழியும். எனவே, இதனை ஈடுகட்ட சத்தான உணவைச் சாப்பிட வேண்டும். உடல் எடை, சீராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

● தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதில்லை.

● காதில் புண், வயிற்றுப் போக்கு, அலர்ஜி, தோலில் தடிப்புக்கள் என பல



டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

● தோள் பட்டையில் முடிச்சு போடும் விதமான உடைகளே சிறு குழந்தைகளுக்கு சிறந்தன. படுத்தாலும் புரண்டாலும் முதுகிலோ, முன்புறமோ குத்தாது.

● குழந்தைகள் விரல் சப்புவதைப் படிப்படியாக நிறுத்த வையுங்கள். இல்லையென்றால், குழந்தையின் கம்யூனிகேஷன் வளர்ச்சி பாதிக்கப்படும்.





வரப்பிரசாதம்!

காரணங்களுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்படும் குழந்தைகளில் எண்பது சதவிகிதத்துக்கு மேல் புட்டிப்பால் மட்டும் அருந்தும் குழந்தைகளே!

● தாய்ப்பாலில் மூளை வளர்ச்சிக்கான 'ஒமேகா 3 S' சத்துப் பொருள் அதிகம் உள்ளது. எளிதில் செரிக்கக் கூடிய புரோட்டீன், கொலஸ்ட்ரால் குடல் வளர்ச்சிக்குத் தேவையான கார்போஹைடிரேட், தாதுப் பொருட்கள், என்ஸைம்கள் கொழுப்புச் சத்து அமினோ அமிலங்கள், லாக்டோஸ் எல்லாமே சரியான அளவில் இருக்கின்றன.

● நான்கு மாதங்களுக்கு மேல் புட்டிப் பாலும், ஒரு வயதுக்கு மேல் பசும்பாலும் கொடுப்பது சரியான அணுகுமுறை.



● நோய் எதிர்ப்புத் தன்மையுள்ள 'ஆண்டிபாடீஸ்' தாய்ப்பால் மூலம் குழந்தைக்குக் கிடைக்கும்.

● தாய்ப்பால் தரும் வரை, தாய் மீண்டும் கர்ப்பம் தரிப்பதில்லை. முட்டை உற்பத்தியை இது கட்டுப்படுத்துகிறது.

● ஜலதோஷம், ஃப்ளூ, வயிற்று நோய் போன்றவை தாய்க்கு இருந்தால் அது பால் மூலம் குழந்தைக்கு நிச்சயமாகப் பரவாது.

● ஆனால், HIV பாஸிடிவ் இருக்கும் தாய், குழந்தைக்குப் பால் தரக்கூடாது. ஏனென்றால், அப்பால் மூலம் குழந்தைக்கு HIV வரும் வாய்ப்பு அதிகம்.

● தாய் சரிவிகித சத்துணவு சாப்பிடுவது முக்கியம். சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற நோய்கள் தாய்க்கு இருந்தால் மருத்துவரின் ஆலோசனைப் படி, மருந்துகள் சாப்பிடலாம். இது தாய்ப்பால் தருவதற்குத் தடையாக இருக்காது.

● தாய்ப்பால் ஊட்டும் காலத்தில் புகைபிடிப்பது, மது அருந்துவது, போதை மருந்துகள் உட்கொள்வது என தீய பழக்கங்களை அறவே நிறுத்த வேண்டும்.

டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

● குழந்தைக்கு இரண்டு வயசாகிறதா..... பந்தைக் காலால் உதைக்க, காட்ச் பிடிக்க, மணிகளைக் கோக்க, ஸ்க்ரூ திருக... கைப்பிடிகளைத் திருப்ப எல்லாம் இப்போ பழகியிருக்குமே... கிளம்புங்க... பந்து, ஸ்க்ரூ திருகும் பொம்மைகள்.... மணிகள் கொண்ட எண்ணிக்கைக்கான பலகைகள், ப்ளாக் பில்டர்ஸ்- அதாவது வண்ணமயமான சதுரக் கட்டைகள், இதெல்லாம் இப்ப தாராளமா வாங்கித்தரலாம்!








பேத்தி, அம்மா, பாட்டி என மூன்று தலைமுறைப் பெண்கள்... இரு அம்மாக்கள் தங்கள் குழந்தை வளர்ப்பைப் பற்றிக் கலந்துரையாடுகிறார்கள்.

எல்லாம் வச்சு...

பிரேமா: அப்பல்லாம் வேஷ்டி போல மெல்லியத் துணியைக் கிழிச்சுக் குழந்தைக்கு 'நேப்பி'க் கட்டுவோம், இப்பதான் டையாபர்ஸ், எத்தனை விலை கொடுத்தும் வாங்கிடுறீங்களே... எங்கம்மா எனக்குக் கொடுத்த மாதிரி நானும் உனக்கு ராகி கஞ்சி, உரை மருந்து எல்லாம் கொடுத்தேன்...

வித்யா: உரை மருந்தா.... அப்படீன்னா?



• பாட்டி, பேத்தி, அம்மா...

இன்றும்...

பிரேமா: குழந்தைங்களுக்குக் கருவறைக் கதகதப்பு தூளியில கிடைக்கும்னு சொல்வாங்க... இப்ப என்னன்னா உன் குழந்தைக்குத் தூளியே வேணாம்ங்கறே...


வித்யா: எவ்வளவு அழகா மாடர்னா இந்தத் தொட்டில் இருக்கும்மா... உயரம் லாம் அட்ஜஸ்ட் பண்ற மாதிரி இங்க பாருங்க.. மியூஸிகல் அட்டாச்மென்ட்

டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...



• குழந்தைக்குக் கண்ணில் தூசு விழுந்தால் நீங்களாகவே ஊதி, துணி ஒத்தி எடுத்து ட்ராப்ஸ் ஊற்றி எதுவும் செய்ய வேண்டாம். உடனே கண் மருத்துவரிடம் போனால் தகுந்த கண்சொட்டு மருந்து விட்டு நீக்கி விடுவார்.

• வண்ணத்துப் பூச்சி வடிவத்திலிருந்து விண்வெளி ராக்கெட் வடிவம் வரை கூந்தல் கிளிப் கிடைக்கிறது. குழந்தைக்கு அழகாகத்தான் இருக்கும்... தூங்கும் போது மறக்காமல் எடுத்துவிடுங்கள்...





பிரேமா: ஜாதிக்காய், மாசிக்காய், சுக்கு, வசம்பு, கடுக்காய் இதையெல்லாம் பால்ல வேக வச்சு, நிழல்ல உலர்த்தி, கல்லுல உரைச்சு, தண்ணீர் கலந்து சங்குல வச்சுப் புகட்டுவோம். நீ பேர் கூட கேள்விப்பட்டிருக்க மாட்டே வித்யா... சங்கு, கெண்டி இதெல்லாம் உங்களுக்குப் புதுசு! அப்பல்லாம் மரத்துல செஞ்ச நடை வண்டிதான். நடக்கப் பழகற குழந்தைங்க தள்ளிட்டுப் போக அது வசதியாயிருக்கும். இப்பவும் கடைகள்ல கலர் அடிச்சு நடை வண்டி கிடைக்குது. இருந்தாலும், நீங்க எல்லாரும் வாக்கர் வெச்சுக்கறதுதான் ஃபேஷன்னு நினைக்கறீங்க.

வித்யா: அதுல என்னம்மா தப்பு? அதுதான் ஈஸியா இருக்குமா...

பிரேமா: எல்லாமே ஈஸிதான். கண்ணீர் வராத ஷாம்பு, மிருதுவானக் குளியல் சோப் எல்லாம் வந்தாச்சு.

இன்றும்...

நாங்க ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழந்தையின் கை கால்களை நீவி, உருவி, தேங்காய்க் எண்ணெய், பயத்தமாவு தேய்ச்சு குழந்தைகளைக் குளிப்பாட்டுவோம். ஆனா நீங்கள்லாம்..."

வித்யா: நாங்கள்லாம் என்ன? சோம்பேறிகளாயிட்டோமோ? இப்பவும் தான் ஆயில் மசாஜ் செஞ்சு... ஷாம்பு தேய்க்கறோம்... குழந்தையும் ஆரோக்கியமாதானே இருக்கா...

பிரேமா: என்னமா கோபம் பொத்துக்கிட்டு வறது! காலம் மாறித்தான் போச்சு. எங்கம்மா காலத்துல 'காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி'ன்னு பாடிக்கிட்டுக் கழக்கோடி ஆடுவாங்களாம்.. நானும் பாண்டி, பல்லாங்குழி எல்லாம் ஆடியிருக்கேன். நீ கூட கேரம், செஸ்னு விளையாடுவ... ஆனா இப்ப குழந்தைங்க, சதா கம்ப்யூட்டர் கேம்ஸ், வீடியோ கேம்ஸ்னு தான் விளையாடுறாங்க...

வித்யா: என் பெண்ணுக்குக் கண்டிப்பா நான் வீடியோ கேம்ஸ்லாம் வாங்கித் தரவே மாட்டேன். ஏன்னா அதுல இருக்குற ரேடியேஷன் கண்ணுக்குக் கெடுதலாமே. இப்பதான் குழந்தைங்களுக்கு அறிவைப் பெருக்குற விதமா எத்தனையோ விளையாட்டுப் பொருள்கள் வந்துட்டதேம்மா. என்னதான் விளையாட்டுப் பொருள்களும் பொம்மைகளும் வந்துட்டாலும் குழந்தைகளுக்கு எதையெதை எந்தெந்த வயசுல வாங்கித் தரணும்னு அம்மாக்கள்தான் ஜாக்கிரதையா முடிவு பண்ணனும். நல்ல பொருள்களை நல்ல தரம் வாய்ந்த கடைகள்ல வாங்கறது பெஸ்ட்.

டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- வீடியோ கேம்ஸ் போன்ற எலக்ட்ரானிக் கேம்ஸை உங்கள் குழந்தை ஆவலுடன் விளையாடும். ஆனால் அதன் ரேடியேஷன் குழந்தையைப் பாதிக்கும். எனவே கூடுமானவரை தவிர்த்து விடுங்கள். விமானத்தில் செல்லும்போது டேக் ஆஃப் மற்றும் லேண்டிங் போது நிச்சயமாய் எலக்ட்ரானிக் விளையாட்டுக்கள் கூடவே கூடாது!)








பிறந்த குழந்தைகளுக்கான எல்லாப் பொருட்களும் விற்கும் 'பார்ன் பேபீஸ் லிட்டில் கிட்ஸ்' கடையைப் பார்த்ததுமே, அதன் நிறுவனர்களில் ஒருவரான கே.சசிகுமாரிடம் நமக்குக் கேட்கத் தோன்றிய கேள்வி..

பெற்றோர்தான் பார்த்துப் பார்த்து வாங்கித் தரவேண்டும். நிறைய பெற்றோருக்கு என்னென்ன வாங்க வேண்டும் என்பதற்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருக்கவும், சின்னஞ்சிறு கண்மணிகளுக்கு வசதி தரவும்தான் இந்தக் கடைகளைத் துவக்கினோம்...''

''கடைகளா? அப்படின்னா கிளைகள் இருக்கின்றனவா?''

"கோயமுத்தூரில்தான் முதலில் இரண்டாயிரம் ஆண்டில் ஆரம்பித்தோம். அதற்குமுன் திருப்பூரில் இருந்து ரெடிமேட் துணி ஏற்றுமதி செய்து கொண்டிருந்தோம். என் சகோதரர்கள்



ஆத்ம திருப்தியே

"இந்த விற்பனை ஐடியா உங்களுக்கு எப்படித் தோன்றியது...?''

"விற்பனை என்பதைவிட ஓர் 'ஆத்மதிருப்தி' என்றுதான் சொல்ல வேண்டும்" என்று பளிச் பதில் வந்தது. தொடர்ந்தார்கள் கனகராஜும் சசிகுமாரும்...


"ஓரளவு வளர்ந்தபின் குழந்தைகளுக்கு எது வேண்டும் என்று கேட்கத் தெரியும். ஆனால் பிறந்த குழந்தைக்கு...? கொஞ்சம் வளரும் வரையில் தனக்குத் தேவை என்ன என்று கேட்கத் தெரியுமா?

திருஞானம், கனகராஜ், ஃபயாஸ், அருள்குமார் ஆகியோர் இணைந்துதான் இக்கடையைத் துவங்கினோம். கோயமுத்தூரில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து சென்னையில் 2003-ல் ஆரம்பித்தோம். இங்கேயும் நல்ல வரவேற்பு... தொடர்ந்து கொச்சியில் 2 வருடங்களுக்கு முன் ஒரு கிளை திறக்கப்பட்டது..."



டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- *இசை... குழந்தையின் இதயத்துக்கு இதம் தரும்... தூங்கும் போது மட்டும்தான் தேவை என்று நினைக்க வேண்டாம்! கேசட் டேப்பை மெலிதாக இசைக்க விட்டு... குழந்தையின் ரியாக்‌ஷனைக் கவனியுங்கள்! இசையை அவ்வப்போது மாற்றியும் சோதிக்கலாம்! சற்று வளர்ந்தபின் சிறிய விளையாட்டு கீபோர்ட் (தொட்டிலில் மாட்டும் இசை பாக்ஸ் கிடைக்கிறது) வாங்கித் தரலாம்!*





நோக்கம்!

"உங்கள் கடையில் குழந்தைகளுக்கு இத்தனை பொருட்களா என்று பிரமிப்பாக இருக்கிறது. எப்படி தேடிப் பிடிக்கிறீர்கள்?"

"பாடுபடாமல் முடியுமா? வெளிநாடுகளுக்கு சென்று, பார்த்து, இன்டர்நெட்டில் தேடி... எங்கெங்கே என்னென்ன கிடைக்கும், முக்கியமாக, தரமானது எது என்றெல்லாம் ஆராய்ந்துதான், வாங்குகிறோம். மேலும் தரச் சான்றிதழ் இல்லாமல் எதையும் நாங்கள் விற்பனை செய்வதில்லை."

"உங்கள் வெற்றியின் ரகசியம்?"

"வாடிக்கையாளர்களுக்கு யோசனைப்பெட்டி, எங்கள் பொருட்களின் தரம் பற்றி எழுதிக் கொடுக்க விண்ணப்ப படிவம்.. என்றெல்லாம் வைத்து எங்களை நாங்களே சோதித்துக் குற்றங்களையும் நீக்கி விடுகிறோம்."

இப்பல்லாம் சிறிய ஃப்ளாட் ஆக இருந்தாலும் குழந்தைகளுக்கு என்று ஒரு ரூம் இருக்கிறது இல்லையா? புதுமையான ஐடியாவா அதை அவர்கள் ரசனைக்கேற்ப எளிய, வண்ணமயமான பொருட்களைக் கொண்டு அலங்கரித்துத் தரும் திட்டமும் இருக்கிறது.

நம் நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப, அந்தந்தப் பருவத்துக்குத் தகுந்தமாதிரி குழந்தைகளுக்கான ரெடிமேட் உடைகளை நாங்கள் சொந்தமாகவே தயாரித்து வருகிறோம். வாடிக்கையாளரின் ஆத்ம திருப்தியே எங்கள் நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்ற உறுதுணையாக 'ஃபயாஸ், வரதராஜ், அருள்குமார், பூபதி, செந்தில்' அனைவரும் உழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.



கிளைகள்:

சென்னை :
044 - 2825 0067

கோவை :
0422 - 254 1626


கொச்சின் :
0484 - 235 8818

டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- கோடை காலத்தில் செயற்கை இழை (ஸிந்தெடிக்) உடைகளைப் போட மாட்டீர்கள். பருத்தி உடை என்றாலும் நிறைய பணம் போட்டு வாங்கி விட்டோமே... என்று இறுக்கமாக இருந்தாலும் 'பரவாயில்லை கொஞ்ச நாள் போடலாம்' என்று டைட்டாகப் போட்டு விடாதீர்கள்... வளரும் குழந்தைக்கு விலை குறைவாகவே வாங்கலாமே!







❖ வரவேற்பு ❖



அருமைச் செல்வத்துக்கு...

தம் அருமைச் செல்வத்தை வரவேற்ற அனுபவத்தை ஆனந்தமாகச் சொல்கிறார்...

வங்கியில் பணிபுரியும் பிரகாஷின் மனைவி வித்யா பிரகாஷ், ஐந்தே மாதங்கள் நிரம்பிய சந்தோஷப் பொக்கிஷமாம் 'த்வனி'யின் அம்மா..

"ஸ்கேன் பண்ணினா த்ரில் போயிடுமேன்னு பண்ணலை... சிசேரியன் முடிஞ்சு நினைவு வந்தப்போ.. 'பெண் குழந்தை'ன்னு இவளைக் காட்டினாங்க... உலகத்தையே ஜெயிச்ச மாதிரி பெருமிதம்... இருபது வருஷத்துக்கு அப்புறம் என் கணவர் குடும்பத்துல பிறந்த முதல் பெண் குழந்தை! பார்த்த உடனே அள்ளணும் போல இருந்தது. ஆனா... ரெண்டு கையும் மானிட்டர், சலைன் பாட்டில்னு கனெக்ட் ஆகியிருந்ததால உடனே குழந்தையைத் தொட முடியலே... அவளது வாசத்தை உணர்ந்தேன். என் மனசு பூரா அந்த வாசமும், சொல்ல முடியாத சந்தோஷமும் நிறைஞ்சு வழிஞ்சுது. ஒரு மணி நேரம் கழிச்சு அவளை முதன்முதலா தொட்டப்போ சந்தோஷம் தாங்கலே..." என்று மகள் 'த்வனி'யை அணைத்துக் கொண்டு சிரிக்கிறார் வித்யா.



படம் : ஸ்ரீஹரி

குழந்தையை 'வரவேற்க' நான் முதன் முதலா வாங்கினது ஒரு 'வழிகாட்டும்' பேபி புத்தகம்தான்... த்வனிக்குப் பரிசா வந்த பொருட்களிலே 'ஆடும் நாற்காலி' போல இருக்கிற ஒரு தொட்டில் இவளுக்கு ரொம்பப் பிடிக்கும்....' ஒரு 'பார்பி வீட்டை' மகளுக்கு வாங்கித் தந்திருக்கிறாராம். 'என் அருமை செல்லத்துக்கு ஓர் அழகிய இல்லம்...' பூரிக்கிறார் வித்யா பிரகாஷ்.



டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

- "கேட்கும் வழக்கத்தை" குழந்தையிடம் உருவாக்குங்கள்... மென்மையாகத் தொட்டு, குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத்து விட்டு, மிக மிருதுவான குரலில் பேசுங்கள்... குழந்தை ஆர்வமாய்க் கேட்கும்.

தொகுப்பு : பத்மினி பட்டாபிராமன்

கார்ட்டூன் : நடனம்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

1-4-07 இதழுடன்
இணைப்பு... 16 பக்கங்கள்

+16



தேங்க்யூ மம்மி!

இளம் தாய்க்கும் குழந்தைக்குமான அரிய தகவல் பெட்டகம்!

இணைந்து வழங்குவோர்:


பொருள் தேடி
அலைந்த என்
வாழ்வுக்குப்
பொருள்
கொடுத்தவள்
நீ!
உன்
தளிர்மேனியின்
கதகதப்பால்
எனக்குள்ளும்
சுரக்கிறது
தாய்மை!
- ஜி.பாரதி

என்
கண்ணிலிருக்கும்
ஒளியும்
இதழ்களில்
தவழும்
புன்னகையும்
முகம் முழுதும்
வியாபித்திருக்கும்
சந்தோஷமும்
உங்களுக்கு
வேண்டுமா...
என்
மனதை போல்
மாற்றுங்களேன்
உங்கள்
மனதினை!

- சுகந்தி



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 1.4.2007



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

